விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபத்து நான்கு — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 சித்திரை 07 வியாழக்கிழமை (19.04.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 122



ராம்கோ — MADRAS CEMENTS LTD — RAMCO CEMENT — RAMCO

SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போர்ட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து


# இடைக்கால கட்டமைப்பே வடக்கின் அபிவிருத்திக்கு உதவும்

## இந்தியக் குழுவிடம் சிவில் சமூகம் எடுத்துரைப்பு

(யாழ்ப்பாணம்)

இடைக்கால கட்டமைப்பு ஒன்றை உருவாக்கி அதனூடாக மக்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்த இலங்கை அரசை வலியுறுத்த வேண்டும் என யாழ்ப்பாண சிவில் சமூகத்தினர் இந்தியக் குழவினரிடம் வலியுறுத்தியுள்ளனர். நேற்றிரவு இந்திய நாடாளுமன்றக் குழுவினருக்கும் யாழ்ப்பாண சிவில் சமூகத்தினருக்கும் இடையில் யாழ்.ரில்கோ ஹோட்டலில் நடைபெற்ற சந்திப்பின்போதே இது விடயம் குறித்து வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்திய எம்.பிக்கள் குழுவுக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ்.சிவில் சமூகத்தினர், கூட்டமைப்பு எம்.பிக்கள், பிரதேச சபைத் தலைவர்கள் போன்றவர்களுக்குமிடையில் தற்காலநிலைமை குறித்து கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதில் மீள்குடியேற்றம், இராணுவ பிரசன்னம், இனப்பிரச்சினைத் தீர்வு, புத்தர் சிலைகள் அமைப்பு போன்றன குறித்து இந்தியக் குழுவுக்கு எடுத்துக் கூறப்பட்டது.

இந்திய அரசினால் வழங்கப்பட்ட 50 ஆயிரம் வீடுகளில் ஆயிரம் வீடுகள் கூட யாழ்ப்பாணத்தில் கட்டி முடிக்கப்படவில்லை என யாழ்.மாநகர சபையின் முன்னாள் ஆணையாளர் சீ.வீ.கே.சிவஞானத்தால் இந்திய நாடாளுமன்றக் குழுவிடம் எடுத்துக் கூறப்பட்டது.


அத்துடன் மக்களின் மீள்குடியேற்றம் மற்றும் வாழ்வாதாரப் பிரச்சினைகள் என்பன தொடர்பாகவும் வலியுறுத்தப்பட்டது.

இதற்கு பதிலளித்த அவர்கள், கண்ணிவெடி அகற்றும் பணிகள் நிறை (24ஆம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாணத்தில் இந்தியக் குழு...



வவுனியாவில் இந்தியக் குழு...



## தமிழர் பிரச்சினை குறித்து ஜனாதிபதியுடன் பேசுவோம்

### சுஷ்மா சுவராஜ் உறுதியளிப்பு

(கொழும்பு)

இந்திய எதிர்க் கட்சி தலைவி சுஷ்மா சுவராஜ் தலைமையிலான நாடாளுமன்ற தூதுக்குழுவினர் தேசிய பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாணும் விவகாரம் குறித்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் பேசவுள்ளதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பிடம் தெரிவித்துள்ளனர்.

12 பேர் கொண்ட இத்தூதுக் குழுவினர் தமிழ் தேசியக் கூட்டமைப்பை நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை சந்தித்தனர். இதன்போது, அரசியல் தீர்வு காணப்படுவதில் காணப்படும் தாமதம் (23ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியக் குழுவினர் யாழ்.வந்தனர்

(யாழ்ப்பாணம்)

இந்திய எதிர்க் கட்சித் தலைவர் சுஸ்மா சுவராஜ் தலைமையிலான இந்திய நாடாளுமன்றக் குழுவினர் யாழ்ப்பாணத்திற்கு நேற்று மாலை வருகை தந்தனர்.

பலாலி விமான நிலையத்தில் மாலை 4 மணியளவில் விமானத்தில் வந்திறங்கிய இந்தக்குழு பின்பு ஹெலிகொப்ரர் மூலம் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் வந்திறங்கினர்.

யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் வந்திறங்கிய இந்தக்குழுவினை பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா வரவேற்றார்.

அத்தோடு இங்கு கூடிய பொது மக்கள் இந்தியா, இலங்கை இரு நாட்டு தேசியக் கொடிகளையும் அசைத்தவாறு வரவேற்றனர்.

பின்பு இந்திய நாடாளுமன்றக் குழுவினர் (23ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை விஜயத்தால் மக்களின் நிலை அறிந்தோம்!

### இந்தியக் குழு தெரிவிப்பு

(வவுனியா)

இலங்கையில் பல கட்சிகளுடன் கலந்துரையாடல்களைமேற்கொண்டு அவர்களுடைய நிலைப்பாட்டை அறிந்து கொண்டமை பயனுள்ள விடயமாக இருந்தது என்று இலங்கைக்கு விஜயம் செய்துள்ள இந்திய நாடாளுமன்ற உறுப்பினரான சுதர்சன நாச்சியப்பன் தெரிவித்தார்.

செட்டிக்குளம் நலன்புரி நிலையங்களுக்கு நேற்று விஜயம் மேற்கொண்ட நிலையில், இலங்கை விஜயம் தொடர்பிலும் கொழும்பில் இடம்பெற்ற இலங்கை அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடனான சந்திப்பு தொடர்பிலும் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அங்கு கருத்துத் தெரிவித்த அவர்,

பல கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் நேரடியாக சந்தித்து கதைக்கக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டிருந்தது. எனவே ஒவ்வொருவரும் என்ன சிந்தனையுடன் இருக்கின்றார்கள், எந்த அளவில் திட்டங்களை செயற்படுத்துகின்றார்கள் (24ஆம் பக்கம் பார்க்க)

## யூன் மாத இறுதிப் பகுதிக்குள் முகாம் மக்களின் மீள்குடியேற்றம்

### அரசாங்கம் உறுதியளிப்பு

(வவுனியா)

யுத்தத்தின்போது இடம்பெயர்ந்து வன்னியிலுள்ள நலன்புரி முகாம்களில் இன்னமும் தங்கியுள்ள பொதுமக்களை எதிர்வரும் யூன் மாத இறுதிக்குள் மீள்குடியேற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று மேற்படி நலன்புரி முகாம்களுக்கு விஜயத்தை மேற்கொண்ட இந்திய நாடாளுமன்ற குழுவினரிடம் மீள்குடியேற்ற அமைச்சர் குணரத்ன வீரகோன் உறுதியளித்துள்ளார்.

மேற்படி நலன்புரி முகாம்களில் இன்னமும் சுமார் 5 ஆயிரம் பொதுமக்கள் தங்கியுள்ளதாகக் கூறிய அமைச்சர், அவர்களை முல்லைத்தீவு (24ஆம் பக்கம் பார்க்க)

## மனிக் பார்ம் முகாமுக்கு இந்தியக் குழு விஜயம்

(கொழும்பு)

இலங்கை வந்துள்ள இந்திய நாடாளுமன்றக் குழுவினர் நேற்றுக் காலை வவுனியா மனிக் பார்ம் இடைத்தங்கல் முகாமுக்கு விஜயம் செய்து அங்குள்ள மக்களை சந்தித்துக் கலந்துரையாடினர்.

முன்னதாக இரண்டு உலங்கு வானூர்திகளில் வந்திறங்கிய இக்குழுவினரை வவுனியா அரச அதிபர் திருமதி சார்ள்ஸ் வரவேற்று அழைத்துச் சென்று இடம்பெயர்ந்துள்ள மக்களின் நிலைமைகள், மீள்குடியேற்றப்பட்டுள்ள மக்களின் வாழ்க்கை நிலைமைகள் என்பன குறித்து விளக்கமளித்தார்.

இறுதி யுத்தத்தையடுத்து, மனிக்பாம் இடைத்தங்கல் முகாமில் தங்க வைக்கப்பட்ட 3 இலட்சம் மக்களில் 6ஆயிரம் பேர் மாத்திரமே இன்னும் இங்கு மிஞ்சியுள்ளதாகவும் ஏனையோர் (24ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# யுத்தத்தை முடித்து வைத்த இந்தியா அரசியல் தீர்வுக்கும் உதவ வேண்டும்

## ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்து



**இலங்கையில் யுத்தத்தை முடித்து வைப்பதற்கு உதவிய இந்தியாவே தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வையும் உடன் பெற்றுக் கொடுக்க மகிந்த அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரும் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸவின் புதல்வருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவை நேற்றுமுன்தினம் இலங்கை நாடாளுமன்றில் சந்தித்து உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.**

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் போரை வெற்றி கொள்ள இந்திய அரசு இலங்கை அரசுக்கு பூரண ஒத்துழைப்பை வழங்கியது உண்மை. பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டதன் மூலம் இலங்கையில் சமாதானம் ஏற்பட்டுள்ளது என்று அரசு கூறினாலும் அது நிரந்தர சமாதானமாக ஆகவில்லை.

இலங்கையில் நிலையான சமாதானம் வரவேண்டுமென்றால் இங்குள்ள தமிழ் மக்களுக்கு நியாயமான அரசியல் தீர்வை அரசு வழங்கவேண்டும். அதற்கான நடவடிக்கை தாமதமாகக் கூடாது.

யுத்தம் முடிவுற்ற நிலையில் தமது அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்க்க அரசில் தீர்வு ஒன்று வழங்கப்படும் என்று வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கின்றனர். அவர்களின் எதிர்பார்ப்பு உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டும்.

இலங்கையில் அரசியல் தீர்வு முயற்சி இன்னும் தாமதமானால் பழைய நிலைமை மீண்டும் ஏற்பட்டுவிடும். ஆகவே யுத்தத்தை முடித்து வைப்பதற்கு உதவிய இந்திய அரசு இந்த அரசியல் தீர்வையும் விரைவாக வழங்குவதற்கு இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று தெரிவித்தார் ஐ. தே.கவின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸ. (எ-11)

## நெடுந்தீவு கடற்படை முகாம் மீது தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் கைதான இளைஞனுக்கு விடுதலை

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்து நெடுந்தீவு கடற்படை முகாமினை தகர்த்த குற்றச்சாட்டில் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ்க் கைதான இளைஞர் நேற்று யாழ். மேல் நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்த கடற்புலி அணியில் பயிற்சி பெற்று நெடுந்தீவு இராணுவ முகாம் மீது தாக்குதல் நடத்தினார் என்றும், கடற்படை வீரர்களை கொலை செய்தார் எனவும் குற்றஞ்சாட்டப்பட்டு 2009 ஆம் ஆண்டு 07-ம் மாதம் இரண்டாம் திகதியன்று வவுனியாவில் வைத்து பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினரால் குறித்த இளைஞன் 21 வயதில் கைது செய்யப்பட்டார்.

கதிரேசன் வீதி, கொழும்பு 13 இனைச் சேர்ந்த சிவனேஸ்வரராஜா வினோத்குமார் (வயது 24) என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டு பூசா முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

இவரினால் வழங்கப்பட்டதாக கூறப்படும் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தினை வழக்கின் ஒரேயொரு சான்றுப் பொருளாக கொண்டு யாழ். மேல் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த வழக்கு சென்ற மாதம் 19 ஆம் திகதி யாழ் மேல் நீதிமன்ற நீதிபதி ஜே.விஸ்வநாதன் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதில் சந்தேகநபரினால் வழங்கப்பட்டதாகக் கூறப்படும் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் மன்றில் சான்றாக முன்வைக்கப்பட்டது.

சந்தேக நபர் சார்பில் ஆஜராகி இருந்த சட்டத்தரணி றெமீடியஸ் குறித்த குற்ற ஒப்புதல் வாக்குமூலம் சந்தேக நபரின் சுயவிருப்பின் பேரில் வழங்கப்பட்டதல்ல என்றும் வேறு பொலிஸ் அத்தியட்சகர் முன்னால் கட்டாயப்படுத்தியே பெறப்பட்டுள்ளது எனவும் வாதாடினார்.

இந்நிலையில் குறித்த குற்ற ஒப்புதல் வாக்குமூலம் சட்டத்தின் தேவைகளுக்கேற்ப பதிவு செய்யப்படவில்லை என்றும் குறித்த நபரால் வழங்கப்படவில்லை எனவும் கூறி வாக்குமூலம் நிராகரிக்கப்பட்டு மேலதிக விசாரணைகளுக்காகவும் குறித்த நபருக்கு எதிராக வேறு ஏதேனும் சான்றுப் பொருட்கள் உள்ளனவா என்பதனை ஆராய்வதற்காகவும் குறித்த வழக்கு நேற்றுவரை ஒத்தி வைக்கப்பட்ட நிலையில் மீண்டும் யாழ். மேல்நீதிமன்றில் குறித்த வழக்கு விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்கினை விசாரணை செய்த நீதிபதி, குறித்த நபருக்கெதிராக குற்றஞ்சாட்டப் பட்டிருக்கும் குற்றம் நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் பதிவு செய்யப்படவில்லை எனவும் குறித்த நபரால் வழங்கப்பட்டதாகக் கூறப்படும் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் நிராகரிக்கப்பட்டிருந்த நிலையில் குறித்த நபரினை விடுதலை செய்யுமாறு தீர்ப்பளித்தார். (எ-4)

## வாள் வெட்டில் சகோதரர்கள் படுகாயம்

(கரவெட்டி)

பருத்தித்துறை தும்பளைப் பகுதியில் பொது மக்கள் மத்தியில் இரு சகோதரர்கள் ஒன்பது பேர் கொண்ட குழு ஒன்றினால் துரத்தித் துரத்தி வெட்டப்பட்டனர்.

கடுமையான வெட்டுக் காயங்களுடன் இருவரும் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று தும்பளை கிழக்கு மாணிக்கதாரம் தோட்டப் பகுதியில் பிற்பகல் 3.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் அதேஇடத்தைச் சேர்ந்த சேனாதிராஜா பார்த்தீபன் (வயது-25), சேனாதிராஜா பாலதாஸ் (வயது-27) ஆகிய இருவருமே படுகாயமடைந்தவர்களாவர்.

பலசரக்கு உடமையாளருக்கு அது தொடர்பான கொள்வனவின்போது ஏற்பட்ட முறுகலே இதற்குக் காரணம் எனக் கூறப்படுகின்றது.

இது தொடர்பாக பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள். இவர்கள் தாக்கப்பட்டபோது பொதுமக்கள் வேடிக்கை பார்த்தனர் எனவும் அவர்களைக் காப்பாற்ற எவரும் முன்வரவில்லை எனவும் கூறப்பட்டது. (எ-11,24)

## ஹயஸ் வான் விபத்து நால்வர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

கயிறு இழுத்தல் போட்டி ஒன்றிற்காக ஹயஸ் வானில் சென்றபோது வான் வேகக் கட்டுப்பாட்டினை இழந்து பனை மரம் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானதில் நால்வர் படுகாயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்விபத்துச் சம்வம் நேற்று மதியம் 12.30 மணியளவில் பருத்தித்துறை செம்பியன்பற்றில் இடம்பெற்றுள்ளது.

இதில் ஆழியவளை தாளையடியினைச் சேர்ந்தவர்களான வடிவேலன் நவரட்ணம் (வயது 34), நவரட்ணம் ரூபரமேயி (வயது 30); சிவசிதம்பரம் சிவதாஸ் (வயது 27), தவராசா சுதர்சன் (வயது 27) ஆகிய நால்வரே படுகாயமடைந்த நிலையில் மூவர் யாழ் போதனா வைத்தியசாலையிலும் அதிலொருவர் அவசர சிகிச்சைப் பிரிவிலும் ஒருவர் சாவகச்சேரி வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

வானின் சில்லு ஒன்று காற்றுப் போனதாலேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

மேலும் இவ்விபத்தில் ஹயஸ் வானை செலுத்தி வந்த சாரதிக்கு எவ்வித காயமும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (எ-4)

## சுன்னாகத்தில் மினி சூறாவளி

(சுன்னாகம்)

சுன்னாகம் மின்சார நிலைய தெற்குப் பகுதியில் உள்ள தோட்ட வெளிப்பகுதியில் நேற்று பி.ப. 5.45 மணியளவில் மினி சூறாவளி ஒன்று ஏற்பட்டது.

இது தோட்டங்களின் நடுவே நகர்ந்து சென்றதால் தோட்டங்களில் நின்றிருந்த தென்னைகள் சேதமடைந்தன. வேறு சில பகுதிகளில் மரங்கள் முறிந்துள்ளதுடன், இப்பகுதியில் காணப்பட்ட சிறு கொட்டில்களும் சேதத்திற்கு உள்ளாகின. பல வாழைகள் முறித்தழிக்கப்பட்டுள்ளன. இதனை விட இது பேரிரைச்சலுடன் காணப்பட்டதால் அப்பகுதியில் நின்றிருந்த மக்கள் முதலில் அச்சத்திற்கு உள்ளாகியிருந்தனர். இப்பகுதியில் சிறிய சுழல் காற்று ஏற்படுவது வழக்கமாக இருந்தபோதும் நேற்று அதன் வேகம் அதிகமாக காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஏ)

## புலிகள் இயக்க வீடியோவை காண்பித்த நால்வர் கைது

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை மேன்மைப்படுத்தும் நோக்கத்துக்காக அந்த இயக்கம் கடந்த காலங்களில் போர் முனையில் வெற்றிபெற்ற காட்சிகளையும் அதன் அங்கத்தவர்களுக்கு வழங்கப்பட்ட போர்ப் பயிற்சிக் காட்சிகளையும் கொண்ட வீடியோ படத்தைக் காட்டிக் கொண்டிருந்த 4 பேரை சேருநுவரப் பொலிஸார் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கைது செய்துள்ளனர்.

ஈச்சிலம்பத்தையில் முகத்துவாரத்தில் ஒரு வீட்டின் மீது நடத்தப்பட்ட திடீர் சோதனையின் போது இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் அதேஇடத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் முன்னாள் தமிழீழ விடுதலைப்புலிகள் உறுப்பினர்கள் எனக் கூறப்படுகின்றது. சந்தேக நபர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இருந்த தொடர்புகளையிட்டும் இவர்களுக்கு இந்த வீடியோ இறுவட்டு எப்படிக் கிடைத்தது என்பது பற்றியும் பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (எ-11)

## கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

கந்தர்மடம் மணல்தறை வீதி அருள்மிகு கண்ணகை அம்பாள் திருக்கோவில் வசந்த மண்டப எழுந்தருளி அம்பாள் மகா கும்பாபிஷேகப் பெருவிழா இன்று வியாழக்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் மதுரகவி காரை எம்.பி. அருளானந்தனின் கும்பாபிஷேக மகத்துவம் என்னும் தலைப்பிலான சிறப்புச் சொற்பொழிவும் இடம் பெறவுள்ளது. (அ-9)

**பணிப்பெண் தேவை**

தினமும் வந்து போய் வீட்டு வேலை செய்யக் கூடிய பணிப் பெண் தேவை. (வயதெல்லை இல்லை) சம்பளம் ரூபா 350/- (நாளொன்றுக்கு)

தொடர்பு: 021-7900637 (8186)

**விற்பனைக்கு**

LML- செலகற் 2 150-XXXX தொடர் இலக்கத்தினையுடைய ஒரு கை பாவனையில் உள்ள ஸ்கூட்டர் ஒன்று உடன் விற்பனைக்கு உள்ளது. பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: 0776544565 0779590542

(C-6397)

**கட்டிட வேலைகள் செய்து கொடுக்கப்படும்**

குளியலறை அமைத்தல், மாபிள் பதித்தல், ரெறோசோ, புளொம்பிங், பெயின்ரிங், வயரிங், கிளாஸ் பிற்றிங் என்பன செய்யப்படும்.

தவா கொன்ஸ்ரக்சன்ஸ், அச்சுவேலி. 0771391623 (8199)

# இன்று ஒரு தகவல்

## இரு வழிப்பறிக்கொள்ளையர்கள்

ஒரு நாள் வெளியூருக்கு போய் திரும்பிக்கொண்டிருக் கிறோம். இருட்டிப் போனது. காட்டுப் பாதை ஒருபுறம் கையிலே ஒரு "டோச் லைட்" வைத்திருக்கிறோம். அந்த வெளிச்சத்தின் மூலம் வழியை புரிந்து கொண்டு நடந்து கொண்டிருக்கி றோம்.

திடிரென்று வந்து வழிமறிக்கிறார்கள் இரண்டு வழிப்பறிக் கொள்ளையர்கள்.

நாங்கள் வைத்திருந்த அனைத்தையும் அதாவது டோச் லைட் உட்பட அனைத்தையும் கொள்ளையடித்துக் கொண்டு சென்று விட்டார்கள்.

அந்த வேளையில் எமக்கு எவ்வளவு வேதனையாக இருக் கும்? அதை சற்று நினைத்துப் பாருங்கள் இதேவேதனை நமது ஆன்மீக பயணத்திலேயும் ஏற்பட வாய்ப்புள்ளது என்று பெரிய வர்கள் சொல்கிறார்கள்.

ஏனென்றால் ஆன்மீக பயணத்திலேயும் நடுவில் வழிப்பறி செய்பவர்கள் இரண்டு போர் வருவார்களாம். அந்த இருவரும் யார் என்பதை இப்போது பார்ப்போம்.

ஆன்மீகப் பயணத்திலே நாம் ஒரு எல்லையை நோக்கி (மோட்சம்) பயணித்துக்கொண்டிருக்கிறோம்.

"விவேகம்" என்ற விலையுயர்ந்த பொருளை கையிலே வைத்துக் கொண்டிருக்கிறோம்.

அதை வைத்துக்கொண்டு தான் நாம் எது சரி... என்பதை எது பிழை .. என்பதை தீர்மானித்துக் கொண்டு பிரயாணத்தை தொடரமுடியும்.

விவேகம் என்ற ஊக்கி இல்லையென்றால் நாம் அந்தப் பிரயாணத்தை தொடர முடியாது. அப்படியிருக்கும் போது திடீரென்று இரண்டு கொள்ளையர்கள் குறுக்கே வந்து கொள் ளையடித்து கொண்டு போய் விட்டால் என்ன நடக்கும்?

சரி... யார் அந்த இரண்டு கொள்ளைக்காரர்கள்.

ஒருவர் பெயர் காமம் அதாவது ஆசை. மற்றையவர் பெயர் குரோதம் அதாவது கோபம்.

ஆசையும் சினமும் சேர்ந்து தான் நம்மிடமுள்ள விலையு யர்ந்த பொருளான விவேகத்தை பறித்து கொண்டு போய் விடுகிறது. இது மிகவும் வேதனையை தரும் விடயமாகும். டோச் லைட்டை தவறவிட்டு இருட்டிலே முழித்துக் கொண்டு இருக்கிற மாதிரி. அதனால் தான் பெரியவர்கள் சொல்கிறார் கள். ஆசை, சினம் இவை இரண்டும் மனதிலே ஏற்பட்டு விட் டால் அதை ஆரம்பத்திலேயே கிள்ளி எறிந்துவிட வேண்டும் என்கிறார்கள். அதை வளர விட்டால் ஆபத்து அப்படி கிள்ளி யெறிவதற்கு ஒரு கத்தி என்ற புத்தியை பயன்படுத்த வேண்டும்.

நாங்கள் வழமையாக என்ன செய்கிறோம்? முதலில் கோபப் பட்டு பின்னர் வருத்தப்படுகிறோம்.

ஆசையையும் கோபத்தையும் ஆரம்பத்திலேயே எடுத்தெறிய வில்லையென்றால் நமது மனோசக்தி குறைந்து கொண்டே போய்விடும்.

சில பேர் எந்த சந்தர்ப்பத்திலேயும் கோபப்படுவது மிகவும் குறைவாக இருக்கும். அதை நாம் பிழையாக புரிந்து கொள் ளக் சுவடாது.

ஒரு பிரயாணி விமான நிலையத்திலே ஒரு பணியாளனிடம் மிகவும் கோபமாக சண்டை போட்டுக் கொண்டிருக் கிறார். இந்தப் பிரயாணி ஜப்பான் பயணிக்க வேண்டியவர். அந்த சிப்பந்தி பிரயாணிகள் கொண்டு வரும் பொதிகளையெல் லாம் வாங்கி ஒழுங்குபடுத்தி விமானத்திற்கு அனுப்பி வைக்க வேண்டியர். அந்த பிரயாணி இந்த சிப்பந்தியை வாய்க்கு வந்த படி திட்டினார். இவர் பதிலுக்கு எதுவுமே பேசவில்லை. மிகவும் பொறுமையாக புன்முறுவலுடன் அவரது பேச்சிற்கு பதிலளித்து கொண்டிருந்தார்.

இது மிகவும் ஆச்சரியமாக இருந்தது. சிறிது நேரம் கழித்து விமானம் வந்தது. இந்தப் பிரயாணி புறப்பட்டுவிட்டார்.

அதன்பின் சிப்பந்தியை ஒருவர் அழைத்து "அந்த மனிதன் அவ்வளவு கோபமாகத் திட்டினார். உங்களாலே எவ்வாறு சிரித்துக் கொண்டு கோபப்படாமல் பதிலளிக்க முடிந்தது" என்று கேட்டார்.

" எனது சினத்தை நான் வெளியில் வெளிப்படுத்துவதுவ தில்லை அதைக் கையாளும் விதமே தனி" என்றார்.

"அது எப்படி"

"இப்போது அப்பயணி ஜப்பானுக்கு போய்கொண்டிருக்கி றார் அவரது உடுப்பு பெட்டியெல்லாம் அமெரிக்காவுக்கு பய ணித்துக் கொண்டிருக்கிறது" இவ்வாறு நிதானமாக பதில் சொன்னார்அந்த மனிதர்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# இலங்கை ஆசிரியர் சங்கமும் அதிபர்,ஆசிரியர்களும் சந்திப்பு

வடமாகாணத்தில் அதிபர், ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சி னைகள் குறித்து இலங்கை ஆசிரி யர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலினை சந்தித்து கலந்துரையாடவுள்ளதாக தெரிவி க்கப்படுகின்றது. இச்சந்திப்பு நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு பலாலி வீதி திருநெல் வேலி யில் அமைந்துள்ள வை.எம். எச்.ஏ. கட்டத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் அதிபர், ஆசிரியர்களின் பதவி உயர்வுகள், சம்பள முரண்பாடு, சம்பள நிலுவை, ஓய்வூதியம், விதவைகள், அநாதை களின் ஓய்வூதியத்திட்டம் பாடசா லைக்கான பதிலீட்டு ஆசிரி யர்க ளின் இடமாற்றம் வலயத்துக் குள் ளானமாகாணத்துக்குவெளியேயான ஆசிரியர்களின் இடமா ற்றம் போன் றவை தொடர்பாக கலந்துரையாடப் படவுள்ளன.

இதில் தொழில் ரீதியாக பாதிப்புக்கு உள்ளான அதி பர்கள், ஆசிரியர்கள் கல ந்து கொள்வதுடன் மேற்கூ றிய விடயங்கள் தொடர் பான கல்வியமைச்சின் சுற்றறிக்கைகளினை பார் வையிடவும் ஏற்பாடு செய் யப்பட்டுள் ளது. மேலும் வடக்கு மாகாண கல் வியமைச்சின் செயலாளர் சி.சத்திய சீலனுடனும் ஜோசப் ஸ்ராலின் சந்திப்பொன்றி னை மேற் கொள் ளவுள்ளமை குறி ப்பிடத்தக்கது. (அ-2-4)

# பயிற்சி நிறைவு விழா

(பூநகரி)

பயிற்றுவிக்கப்பட்ட பனம்பொருள் உற்பத்திப் பயிற்சி நெறி யினை நிறைவு செய்தவர்களுக்கான பயிற்சி நிறைவு விழா பூநகரி பிரதேச செயலர் மாநாட்டு மண்டபத்தில் இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஙநடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், கௌரவ விருந்தினராக யூ.என்.எச்.சி.ஆர் (UNHCR) கிளிநொச்சி மாவட்ட தலைமை அலுவலர் றோலண்ட் ஹென்றிஷன், விசேட விருந்தினராக பனை அபிவி ருத்தி சபையின் தலைவர் பசுபதி சீவரத்தினம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கடந்த 6 மாதகாலமாக பனை அபிவிருத்திச் சபையின் அனுசரணையுளடன் கிராமிய அபிவிருத்தி நிறுவனத்தினால் நடத்தப்பட்ட பயிற்சிகளின் போது உற்பத்தி செய்யப்பட்ட பல் வேறு வகையான பனம் பொருள் கைப்பணிப் பொருட்களின் கண்காட்சியும் விற்பனையும் நடைபெறவுள்ளன.

அத்தோடு பயிற்சியினை நிறைவு செய்தவர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. ஊ(அ-9-84)

# பகுதிநேர ஆங்கில ஆசிரியர் பதவிக்கான விண்ணப்பம்

வடமராட்சி கல்வி வலயத்தால் கோரப்பட்டபகுதிநேர ஆங்கில ஆசிரியர் பதவிக்கான அடிப்படை தகைமை பின்வருமாறு தளர்த்தப்பட்டுள்ளதாக வலயக் கல்வி பணிப்பாளர் சி.நந்தகுமார் அறிவித்துள்ளார்.

இதற்கமைய க.பொ.த சாதாரண தரத்தில் ஆங்கிலத்தில் B அல்லது C சித்தியுடன் க.பொ.த (உ/த) பொது ஆங்கிலத்தில் சாதாரணசித்தி உள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம்.

இதற்கான தெரிவுப்பரீட்சை நாளை மறுதினம் யா/ வட இந்து மக ளிர் கல்லூரியில் காலை 8.30 மணிக்கு நடைபெறும். தெரிவுப் பரீட்சைக்கு நேரடியாக விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதன் மூலம் பரீட் சைக்கு தோற்ற முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 35 | 40 | 40 | 20 |
| உருளைக்கிழங்கு | 85 | 100 | 80 | 100 |
| பச்சைமிளகாய் | 35 | 40 | 35 | 35 |
| தக்காளி | 70 | 70 | 70 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 25 | 30 |
| கோவா | 15 | 10 | 20 | 30 |
| கரட் | 40 | 40 | 40 | 60 |
| பூசணி | 25-30 | 30 | 30 | 30 |
| புடோல் | 35-40 | 60 | 40 | 30 |
| வாழைக்காய் | 25-30 | 20 | 30 | 30 |
| சின்ன வெங்காயம் | 50-70 | 60-70 | 60 | 70 |
| பெரிய வெங்காயம் | 85 | 100 | 70 | 90 |
| பாகற்காய் | 80 | 80 | 90 | 70 |
| வெண்டிக்காய் | 50 | 50 | 40 | 40 |
| கருணைக் கிழங்கு | -- | 60 | -- | 70 |
| பயற்றங்காய் | 35-40 | 40 | 70 | 30 |
| லீக்ஸ் | 70 | 70 | 60 | 100 |
| பீற்றூட் | -- | 40 | 20 | 60 |
| கறிமிளகாய் | 35 | 60 | 60 | 50 |
| முருங்கைக்காய் | 300-320 | 400 | 400 | 320 |
| போஞ்சி | 40 | 80 | -- | 120 |
| கத்தரிதம்புள்ள | -- | 15 | 30 | -- |
| கீரை - 1 பிடி | 10-12 | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 40-50 | 60 | 70 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 15-35 | 20 | 25 | 20-25 |

# இராசி பலன்

19.04.2012

(சித்திரை 07, வியாழக்கிழமை)

சூரிய உதயம் காலை 6.02 மணிக்கு

திரயோதசி முற்பகல்10.00 மணிவரை

உத்தரட்டாதி முன்னிரவு8.01மணிவரை

இராகுகாலம் 1.32-3.02 மணிவரை

சுபநேரம் 7.32-9.02 மணிவரை

**மேடம்** சிறிய விடயங்களுக்கும் உணர்ச்சி வசப்படும் நிலை உருவாகும்,காரிய அலைச்சல்கள் ஏற்படலாம், சயன சுகம் குறைவான நாள், பிதா சிந்தனையுண்டு,ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**இடபம்** செல்வாக்கு மேலோங்கும் நாள், பயண வாய்ப்புக்கள் கைகூடுவ தற்கான அறிகுறி, தோன்றும் மனதில் இனம் புரியாத சந்தோசம் குடிகொள்ளும், பொருட் சேர்க் கையுண்டு.

**மிதுனம்** மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தொல்லை கொடுத்தவர்களே தோள் கொடு த்து உதவுவர், அரசு வழி அனுகூல முண்டு.

**கடகம்** மனதில் உற்சாகம் கூடும், மகிழ்ச்சி அதிகரிக்கும், எடுத்த காரியங்களில் வெற்றி பெறுவீ ர்கள், தொழில் நலன் கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், பயண ங்களால் பயனுண்டு.

**சிங்கம்** வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள், வாகன பழுதுச் செல வுகள் அதிகரிக்கும், கௌரவக் குறை வான நாள், பிறருக்கு உதவி செய்யும் எண்ணம் தோன்றும், போசன சுகமுண்டு.

**கன்னி** சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், வாழ்க்கைத்துணை வழியே வரவுகள் வந்து சேரும், புதிய தொழில் தொடங்க திட்டம் தீட்டுவீர்கள், திருமண முயற்சிகள் கைகூடும்.

**துலாம்** விருந்தினர் வருகையுண்டு, நல்ல செய்திகள் நாடி வரும் நாள், பிள்ளை களால் உதிரி வருமானங்கள் வந்து சேரும், உடல்நலம் சீராகி உற்சாகம் அடைவீர்கள், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** பணத்தேவைகள் பூர்த்தியாகும், பிள்ளைகள் வழியில் பெருமைக்குரிய சம்பவங்கள் நடைபெறும், சொத்துக் களால் நன்மையுண்டு, சுப செய்திகள் வந்து சேரும் நாள்.

**தனுசு** பெற்றோர் மீது பிரியம் கூடும், மன தில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், சகோதர வழியில் ஏற்பட்ட சச்சரவுகள் அகலும், உத்தியோக நன்மையுண்டு.

**மகரம்** கேட்ட இடத்தில் உதவிகள் கிடை த்து மகிழ்வீர்கள், பிரபலமானவர்க ளின் சந்திப்பு இடம்பெறலாம், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும், பெண் வழிப் பிரச்சினைகள் நல்ல முடிவுக்கு வரும்.

**கும்பம்** கொள்கை பிடிப்பை கொஞ்சம் தளர்த்தி கொள்வீர்கள், ஆரோக்கி யம் சம்பந்தப்பட்ட வகையில் ஏற்ப ட்ட கவலைகள் தீரும், வாக்கு சாதுரியத்தால் காரியம் சாதிப்பீர்கள்.

**மீனம்** பக்குவமாக நடந்து பாராட்டு பெறு வீர்கள்,திட்டமிட்ட பயணமொன்றில் திடீர் மாற்றங்கள் ஏற்படலாம், குடும்பத்தில் முற்கோபத்தை குறைப் பது நல்லது, போசன சுகமுண்டு.

வளவன்

# சுன்னாகத்தில் தொடரும் கொள்ளை; கொள்ளையர்கள் மீது மிளகாய் தூள் வீச்சு

(யாழ்ப்பாணம்)

சுன்னாகத்தில் ஆயுதங்கள் சகிதம் கொள்ளையடிக்கச் சென்றவர்களுக்கு மிளகாய்த் தூள் எறிந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதேவேளை, கொள்ளைச்சம்பவம் முறியடிக்கப்பட்டு மூதாட்டியின் உயிரும் காப்பாற்றப்பட்டது.

இக்கொள்ளைச் சம்பவம் நேற்று முன் தினம் நள்ளிரவு 12.30 மணியளவில் கந்தரோடையில் உள்ள வீடொன்றில் இடம் பெற்றுள்ளது.

இத்தொடர் திகில் தரும் கொள்ளைச் சம்பவங்களினை பொலிஸாரினாலும் கட்டுப்படுத்த முடியாத நிலையில் அப்பிரசேத மக்கள் அச்சத்தில் உறைந்து போயுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவதினம் மூன்று பேர் கொண்ட கொள்ளையர் குழு குறித்த வீட்டினுள் நுழைய கதவினை போலித்திறப்புக் கொண்டு திறந்து உள்ளே நுழைய முற்பட்ட போது குறித்த வீட்டார் ஏற்கனவே விழிப்பாக இருந்துள்ளனர்.

கொள்ளையர்களினை கண்டதும் கூக்குரலிடவே அங்கிருந்த மூதாட்டியை கைக் கோடரியினால் தாக்க முயன்றனர்.

அப்போது மூதாட்டியின் சாமர்த்தியத் தினால் கொள்ளையர்கள் மீது மிளகாய் தூள் வீசப்பட்டு குறித்த தாக்குதலில் இருந்து மூதாட்டி தப்பித்துக்கொண்டார்.

மேலும் சத்தத்தினைக் கேட்ட அயலிலுள்ள இளைஞர்கள் இவ்விடத்தில் ஒன்றுகூடவே கொள்ளையர்கள் அவ்விடத்தில் இருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

இதேவேளை, குறித்த சம்பவம் நடந்த அதேநேரத்தில் மடத்தடியிலும் ஒரு கொள்ளைச் சம்பவம் பிரதேச இளைஞர்களினால் முறியடிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான அச்சம் தரும் சம்பங்களினால் குறித்த இடங்களிலுள்ள பிரதேச மக்கள் சில வீடுகளில் ஒன்றாக இரவு பொழுதினை கழிக்க வேண்டிய அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இச்சம்பவங்கள் நடந்து முடிந்த பின்னர் குறித்த இடங்களிற்கு சென்று பார்வையிட்ட சுன்னாகம் தலைமைப் பொலிஸ் பரிசோதகர் இக்கொள்ளைச் சம்பவங்கள் உலகளவில் தெரிந்துவிட்டதாகவும் இதனைக் கட்டுப்படுத்துவதற்கு விழிப்புக்குழு ஒன்றை அமைப்பது அவசியம் எனத் தெரிவித்தனர்.

அதனை அன்றைய தினமே நடைமுறைப்படுத்துமாறும் குறிப்பிட்டனர்.

மேலும் சிறுவனின் நெற்றியில் கடந்த 14 ஆம் திகதி துப்பாக்கி வைத்து மிரட்டி நடைபெற்ற கொள்ளைச் சம்பவத்தினை தொடர்ந்து தொடர்ச்சியாக நான்கு நாட்கள் நள்ளிரவு மேற்படி சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன.

மேற்படி பகுதியில் கொள்ளைச்சம்பவம் நான்காவது நாளாகவும் தொடர்ந்தவண்ணம் உள்ளது.

இக்கொள்ளைச் சம்ப்வத்தை உடன் தடுத்து நிறுத்த உரியவர்கள் காத்திரமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (அ-4)

# மஹா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்,கந்தர்மடம் செட்டி யந்தாழ்வு அருள்மிகு ஸ்ரீ ஞானவைரவர் தேவஸ்தான ஜீர்னோத்தாரண அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 25ஆம் திகதி புதன்கிழமை காலை 8.35 மணி முதல் 10.30 மணி வரையுள்ள சுபவேளையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கான கிரியைகள் யாவும் இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 2 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 7 மணி தொடக்கம் மறுநாள் செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிவரை பக்தர்கள் எண்ணெய்க் காப்புச் சாத்துதல் நடைபெறவுள்ளது என தர்மகர்த்தா கு.கோபாலசிங்கம் அறிவித்துள்ளார். (அ-9)

# பெண்களுக்கான உதைபந்தாட்டத்தில் மாதகல் சென்ஜோசப் சம்பியனானது



(கரவெட்டி)

யாழ். மாவட்ட பாடசாலைகளில் பெண்களுக்கிடையேயான உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி அணியை 1:0 என்ற கோல்க்கணக்கில் தோற்கடித்து மாதகல் ஜோசப் கல்லூரி அணி யாழ். மாவட்ட சம்பியனாகியது.

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான பெண்களுக்கான உதைபந்தாட்ட இறுதிப்போட்டி நேற்றுக்காலை 11 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

இதில் முதலாவது அரை இறுதிஆட்டத்தில் மாதகல் சென் ஜோசப் கல்லூரி அணி மானிப்பாய் மகளிர் கல்லூரி அணியைத் தோற்கடித்து இறுதிப்போட்டிக்கும் கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி அணி பருத்தித்துறை சென் தோமஸ் றோ.க. த.க. பாடசாலை அணியை தோற்கடித்து இறுதிப்போட்டிக்கும் தெரிவாகியது.

மூன்றாம் இடத்திற்கான போட்டியில் பருத்தித்துறை சென்தோமஸ் றோ.க.த.க. பாடசால்ல அணியை 2:0 என்ற கோல்க் கணக்கில் தோற்கடித்து மானிப்பாய் மகளிர் கல்லூரி அணி 3 ஆம் இடத்தைப் பெற்றது. (அ-3-24)




# நல்லூரில் கம்பன் விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நல்லூரில் நீண்ட இடைவெளிக்குப் பின் கம்பன் விழா இடம்பெறவுள்ளது.யாழ்ப்பாணக் கம்பன் கழகத்தின் ஏற்பாட்டில் நாளை மறுதினம் சனிக்கிழமை நல்லூர் கந்தசுவாமி கோவில் வடக்கு வீதியில் அமைந்துள்ள நடராசா பரமேஸ்வரி மண்டபத்தில் காலை, மாலை இரு அமர்வுகளாக நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

தமிழ் நாட்டின் பிரபல பேச்சாளர்களாகத் திகழும் இலக்கியச் சுடர் வழக்கறிஞர் த. இராமலிங்கம், நகைச்சுவைத் தென்றல் புலவர் இரா. சண்முகவடிவேல் ஆகியோருடன் கம்பவாரிதி இ.ஜெயராஜ் ஆகியோர் இந்நிகழ்வில் விசேடமாக கலந்து கொள்வர்.

காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகும் அமர்வு கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் இடம்பெறும். இதில் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா தொடக்கவுரை ஆற்றுவார். கம்பவாரிதி இ.ஜெயராஜ் தலைமையில் இராமன் பேரழகனாகக் காட்சி தருவது கம்பராமாயணத்தில் எந்தக் காண்டத்தில் என்ற பொருளில் சுழலும் சொற்போர் இடம்பெறும்.

மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் அமர்வு யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் தலைமையில் இடம்பெறும்.

இதில் யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தொடக்கவுரையாற்றுவார். கவிஞர் சோ.ப.தலைமையில் கம்பநாடன் கவிதையொடு காலமெல்லாம் வாழ்ந்திடலாம் என்ற பொருளில் அமைந்த கவியரங்கமும் கம்பவாரிதி இ.ஜெயராஜ் தலைமையில் குற்றக்கூண்டில் தவறிழைத்த பெற்றோர் என்ற தலைப்பில் வழங்காடு மன்றமும் இடம்பெறவுள்ளன. (நு)

# இளம் குடும்பஸ்தர் மீது வாள்வீச்சுச் சம்பவம்

(கரவெட்டி)

பொதுமக்களுக்கு மத்தியில் வைத்து இளம் குடும்பஸ்தர் மீது 10 இற்கு மேற்பட்ட இளைஞர்குழு மேற்கொண்ட வாள்வீச்சில் குடும்பஸ்தர் பலத்த வாள் வெட்டுக்காயங்களுடன் சிகிச்சைக்காகப் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் பருத்தித்துறை ஓராங்கட்டை பகுதியில் இடம்பெற்றுள்ளது. சம்பவம் குறித்து தெரியவருவதாவது,

குறித்த குடும்பஸ்தர் தொழில் நிமித்தம் பருத்தித்துறை கிராமக்கோட்டுச் சந்தியில் மோட்டார்சைக்கிளில் நின்று கொண்டிருந்த வேளை திடீரென 3 முச்சக்கரவண்டியில் வந்த 10 இற்கு மேற்பட்ட இளைஞர்குழு பொதுமக்கள் வேடிக்கை பார்த்துக்கொண்டு நிற்க திரைப்படக்காட்சி போன்று துரத்தி துரத்தி வாள்வீச்சை மேற்கொண்டனர். சம்பவ இடத்திற்கு வந்த பருத்தித்துறை பொலிஸார் குறித்த இளைஞர் குழுவைத் துரத்திச் சென்ற போதும் அவர்கள் தப்பிச் சென்றுள்ளனர். இச்சம்பவத்தில் அல்வாய் வடமேற்கு திக்கம் பகுதியைச் சேர்ந்த கமலநாதன் மகேஸ்வரன் (வயது 30) என்ற இளம் குடும்பஸ்தரே வாள் வெட்டுக்கு இலக்கானவராவார். (அ-3-24)

# மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்புப்பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதாலும் கட்டமைப்பு வேலைகள் செய்ய வேண்டியிருப்பதாலும் இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6 மணிவரை பின்வரும் பிரதேசங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ்.பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய நேற்றைய தினம் புதன்கிழமை வெளியாகிய மின்தடை பற்றிய இடங்களுக்கு மேலதிகமாக இன்றைய தினம் பின்வரும் பகுதிகளிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும்.

இராஜ வீதியில் இருந்து கோப்பாய் சந்திவரை கைதடி மானிப்பாய் வீதியில் கோப்பாய் பிரதேசம், இராஜ வீதி சந்திக்கும் கோப்பாய் கிருஷ்ணன் கோவில் சந்திக்கும் இடைப்பட்ட பிரதேசம் ஆகிய பகுதிகளில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

# ஸ்ரீநாராயண ச.ச.நிலைய வைர விழா நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)


கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையத்தின் 60 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் இல்ல மெய்வல்லுநர் போட்டியும் பரிசளிப்பு விழாவும் கடந்த 13 ஆம் திகதி முதல் நடைபெற்று வருகின்றது.

நிலையத்தலைவர் தெ. சுகிர்தன் தலைமையில் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீட பேராசிரியர் க.தேவராஜா, யாழ். உள்ளூராட்சித்திணைக்கள உதவி ஆணையாளர் செ. பிரணவநாதன்,சிறப்பு விருந்தினர்களாக கோண்டாவில் இராணுவ முகாம் அதிகாரி லெப்டினல் பி.எம்.ஏ. பி.எஸ் சமரக்கோன், யாழ். பல்கலைகழக் வணிக பீட உதவிப் பதிவாளர் எஸ்.கே.என்.தவராஜா, உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலய ஆசிரியர் ம.சிவலிங்கம், மேற்படி சனசமூக நிலைய காப்பாளர் க. தியாகராஜா, நல்லூர் பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் சு.பிரசன்னா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

அன்றைய தினம் முடிசூடா மன்னன் எனும் சரித்திர நாடகமும் நடைபெறவுள்ளதாக சனசமூக நிலைய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.

(அ-9)

# லிந்துலை தோட்டக் குடியிருப்பில் தீ விபத்து; பத்து வீடுகள் எரிந்து நாசம்



லிந்துலை - வோல்ட்ரீம் தோட்டத்திலுள்ள தோட்டக்குடியிருப்பில் ஏற்பட்ட தீ விபத்தில் 10 வீடுகள் முற்றாக எரிந்து சாம்பலாகியுள்ளன.

மின் ஒழுக்கு காரணமாக இத் தீ விபத்து இன்று காலை ஏற்பட்டதாக சந்தேகிக்கப் படுகிறது.

தீ விபத்தில் 10 வீடுகளுக்கும் பாரிய சேதம் ஏற்பட்டுள்ளதாக லிந்துலை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி செல்வகுமார் தெரிவித்தார்.

தீ விபத்தில் 50 இற்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டு மாற்று இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. தீயினால் எவருக்கும் காயங்கள் எதுவும் ஏற்படவில்லை. வோல்ட்ரீம் தேயிலை தொழிற்சாலை ஏற்கனவே தீ விபத்திற்குள்ளாகி முற்றாக சேதமடைந்தது. இந்த நிலையில் அந்த தொழி ற்சா லைக்குகீழுள்ளதோட்ட லயன் குடியிருப்பில் தீ ஏற்பட்டுள்ளது. (அ-2)

# நகைப்புக்குரிய அரசியல் கட்சியாக ஜே.வி:பி. - பிரதி சபாநாயகர் தெரிவிப்பு

(சென்னை)

ஜே.வி.பியினரின் நடவடிக்கைகள் கேலிக்குரியதாகி உள்ளதாக பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.

காலியில் நேற்று முன் தினம் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜே.வி.பி இன்று பிளவுபட்டு பல பிரிவுகளாக பிரிந்துள்ளது. தற்சமயம், பல்வேறுபட்ட பெயர்களை கொண்டுள்ளது. நகைப்புக்குரிய அரசியல் கட்சியாக ஜே.வி.பி திகழ்ந்து வருவதாகவும் பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி குறிப்பிட்டுள்ளார்.

இது தவிர அமைச்சர் பந்துல குணவர்தனவின் பொருளாதார கோட்பாடு குறித்தும் அவர் கருத்து வெளியிட்டார். மக்களுக்கான வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளமை எங்களுக்கு புலப்படுகிறது. இதனை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம்.

இது தொடர்பாக கல்வி அமைச்சருக்கு போதிய தெளிவில்லை என்றும் பிரதி சபாநாயகர் சுட்டிக்காட்டினார். அமைச்சர் பந்துல குணவர்த்தன முன்னணி பாடசாலைகளின் அதிபர்களுடனேயே நட்பு கொண்டு வருகிறார். அவர்களோடு பழகுவதனால் அமைச்சருக்கு பொருளாதாரத்தில் பின் தங்கிய மக்களின் துன்பநிலை புரியவில்லை என்றும் சந்திம வீரக்கொடி குறிப்பிட்டார். (அ-2)

# வாகன இறக்குமதிக்கான அவகாசத்தை மீளாய்வு செய்ய ஜனாதிபதி இணக்கம்

(கொழும்பு)

பயன்படுத்தப்பட்ட வாகனங்களை இறக் குமதி செய்வதற்கான கால அவகாசத்தை மீளாய்வு செய்வதற்கு ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் உறுப்பினர்களுக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற பேச்சுவார்த்தையின்போது இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

வெளிநாட்டில் பயன்படுத்தப்பட்ட வர்த்தக நோக்கிலான வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான மூன்றரை வருடகால அவகாசத்தை நான்கு வருடங்களாக நீடிப்பதற்கு ஜனாதிபதி பணிப்புரை வழங்கியதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, பயன்படுத்தப்பட்ட ஏனைய வாகனங்களை நாட்டிற்கு இறக்குமதி செய்வதற்கான ஒரு வருட கால அவகாசத்தை இரண்டு வருடங்களாக நீடிப்பதற்கு ஜனா திபதி இணக்கம் தெரிவித்துள்ளார். (அ-2)


## உடன் தேவை

பத்திரிகை விநியோகஸ்தர் சொந்தமாக மோட்டார் சைக்கிள் மற்றும் சாரதி அனுமதிப் பத்திரம் உள்ளவர்கள் நேரில் வர

மனிதவள
முகாமையாளர்
வலம்புரி.



## பதவி வெற்றிடம்

★ கணனி ரைப்பிங்(தமிழ்)
★ கணனி பக்க வடிவமைப்பாளர்கள்
★ கணனி விளம்பர வடிவமைப்பாளர்கள்
★ Hard Ware

மேற்குறித்த திறன் மற்றும் அனுபவம் நிறைந்த இருபாலாரிடமும் இருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது. பொருத்தமானவர்கள் தமது சுயவிபரம் கொண்ட விண்ணப்பத்தை தயார் செய்து

மனிதவள முகாமையாளர்
வலம்புரி
இல3,2 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.



## கிருஷ்ணா அடகு சேவை

இல 370, கே.கே.எஸ். வீதி யாழ்ப்பாணம்

பதிவு இல:-J/DS/BR/472

மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2011 ஆம் ஆண்டு (28.02.2012) இற்கு முன்னர் வைத்த அடகு நகைகள் யாவற்றையும் 2012 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆம் திகதி (15.05.2012) இற்கு முன்பு மீட்கவும். மீட்க முடியாவிட்டால் தற்போதைய சந்தைப் பெறுமதிப்படி அடைவுத் தொகையைக் கூட்டிப் பெற்று கொள்ளவும். அல்லது ஒரு பகுதிப்பணத்தைக் கட்டி புதுப்பித்துக் கொள்ளவும். இரண்டும் செய்யத்தவறின் 15.05.2012 ஆம் திகதி விற்கப்படும் என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

இல 370, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே:-0212225046

உரிமையாளர்
இல9, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(அ-6380)


## யாழ்ப்பாணம் மாநகரசபை

### சுப்பிரமணியம் பூங்கா வளாகத்திற்குள் இருக்கும் சிற்றுண்டிச்சாலையை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல்-2012

சுப்பிரமணியம் பூங்கா வளாகத்திற்குள் இருக்கும் சிற்றுண்டி சாலையை 2012.05.01 ஆம் திகதி தொடக்கம் 2012.12.31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ். மாநகரசபையினால் கோரப் படுகின்றது.

கேள்விப்படிவக்கட்டணம்-500.00(வற்வரி நீங்கலாக)

கேள்விப்படிவம் விநியோகிக்கும் திகதி:-20.04.2012 தொடக்கம் 27.04.2012 காலை 10.30 மணி வரை

கேள்விப்படிவம் ஏற்றுக்கொள்ளல் 27.04.2012 நண்பகல் 12.00 மணிவரை

கேள்வி திறத்தல் 27.04.2012 பி.ப 2.30

விண்ணப்பப் படிவத்தினை பூர்த்தி செய்து மாநகரசபை நானாவித இறைவரிப்பகுதியிலுள்ள கேள்வி பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

தபாலில் அனுப்ப விரும்புவோர் மாநகர ஆணையாளர் மாநகரசபை யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு 27.04.2012 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். தாமதமாக கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விக்காரர் அல்லது அவர் சார்பில் அவரால் அனுமதியளிக்கப்பட்ட ஒருவர் சமுகமளிக்கலாம்.

**நிபந்தனைகள்**

1. சிற்றுண்டிச்சாலை காலை 9.00 மணி தொடக்கம் மாலை 7.00 மணி வரை வியாபாரம் செய்ய அனுமதிக்கப்படும்.
2. சிற்றுண்டிச்சாலைக்கு பயன்படுத்தப்படும் மின்சாரத்துக்கான மின் கட்டணத்தை குத்தகைக்கு பெறுப்பவர்களே செலுத்தல் வேண்டும். மின்சார கட்டணத்திற்கான பாதுகாப்பு வைப்பு கட்டணமாக ரூபா 15,000 ஐயும் உடன் செலுத்தல் வேண்டும்.
3. சித்தி பெற்ற கேள்விக்காரர் கேள்வித்தொகையின் 1/2 பங்கு தொகையை செலுத்தி சபையுடன் உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டும். மிகுதி தொகையை 4 மாதங்களில் சம தவணைக் கட்டணங்களாக செலுத்துதல் வேண்டும்.
4. கேள்விப்பத்திரம் பெற வருபவர்கள் அடையாள அட்டை சமர்ப்பிப்பதுடன் அதன் நிழற்படப்பிரதியும் சமர்ப்பித்தல் வேண்டும்.
5. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை யாழ். மாநகர சபைக்கே உரியது.
6. கேள்விப்பத்திரங்களை பெறுபவர்கள் மாநகர சபையின் கறுப்புப்பட்டியலில் சேர்க்கப்பட்டவராக இருத்தல் கூடாது.

| குத்தகையின் தன்மை | மீளளிக்கக்கூடிய கேள்விப்பிணைப்பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை |
|---|---|---|
| சுப்பிரமணியம் பூங்கா சிற்றுண்டிச்சாலை | 3000,00 | 40,000.00 |

மாநகர சபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
2012.04.17

திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா
மாநகர முதல்வர்,
மாநகர சபை ,
யாழ்ப்பாணம்.

(ஜ-6393)

# ஏழு அதிகாரிகள் தற்காலிக பணி நீக்கம்

தேசிய அருங்காட்சியகத்தில் இடம்பெற்ற களவாடல் சம்பவம் தொடர்பில் மேலும் ஏழு அதிகாரிகள் தற்காலிகமாக பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் 3 பாதுகாப்பு அதிகாரிகளும் அடங்குகின்றனர். தேசிய உரிமைகளுக்கான அமைச்சர் ஜகத் பாலசூரிய இதனை தெரிவித்துள்ளார்.

தேசிய அரும்பொருட்காட்சியகத்தின் முதலாம் மாடியை பொது மக்க ளுக் காக திறந்து வைப்பது குறித்து நேற்றைய தினம் நடைபெற்ற பேச்சுவா ர்த்தையின் போது தீர்மானிக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# எனது கருத்து தொடர்பில் சவால் விடுவதற்கு பாதுகாப்பு செயலருக்கு தகுதியில்லை

## கிரியெல்ல எம்.பி. பதிலடி

(கொழும்பு)

தன்னால் முன்வைக்கப்பட்ட கருத்து தொடர்பில் சவால் விடுவதற்கு அரச உத்தி யோகத்தரன கோத்தபாய ராஜபக்ஷவிற்கு எந்தவித தகுதியும் கிடையாது. இது எனது சிறப்புரிமையை மீறும் செயல். பாராளுமன் றில் இது தொடர்பில் கேள்வி எழுப்பவுள் ளேன் என ஐ.தே.கட்சியின் கண்டி பாராளு மன்ற உறுப்பினரான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

சர்வதேச சமூகத்தின் தாளத்திற்கு லக்ஸ் மன் கிரியெல்ல ஆட்டம் போடுகிறார் என்ற கூற்றுடன் வெளியான செய்திக்கு பதில ளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரி வித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித் துள்ளதாவது,

இலங்கையில் நீண்ட காலமாக ஆட்கட த்தல் சம்பவங்கள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன என்பதை அனைவரும் அறி வோம். அரசின் முழுக்கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும் கொழும்பிலும் இத்தகைய சம்பவ ங்கள் நடைபெறுகின்றன. இந்தக் கடத்தல் காரர்கள் யார்?

ஆட்கடத்தல் சம்பவங்களுக்கு அரசு பொறுப்பாளியல்ல எனும் பட்சத்தில் குற்ற வாளிகள் இதுவரை கைது செய்யப்பட்டு நீதி விசாரணைக்கு உட்படுத்தப்படாதது ஏன்? இந்தக் கேள்விக்கான விடைகளை அறிய முழு உலகும் ஆவலோடு இருக்கிறது.

இந்த விடயங்கள் தொடர்பில் பாதுகாப்பு செயலர் உரிய பதில் அளிக்க வேண்டும். அதைவிடுத்து அவர் இந்நாட்டின் மக்கள் பிரதி நிதியான என்னிடம் கேள்வி கேட்கவும் சவால் விடவும் முற்படுவது தவறு.

ஒரு மக்கள் பிரதிநிதி என்ற வகையில் நாட்டு மக்களின் நலனோடு தொடர்புடைய விடயங்கள் குறித்து பாராளுமன்றத்தில் உரையாற்றுவதும் கேள்வியெழுப்புவதும் என்னுடைய கடமை. நான் அதைத்தான் செய்தேன். பாதுகாப்பு செயலர் என்பவர் ஓர் அரசா ங்க பணியாளர். ஒரு பாராளுமன்ற அங்க த்தவரோடு ஒப்பிட்டு பார்க்கும் போது பதவி அடிப்படையில் அவர் மிகத் தாழ்ந்த நிலை யில் உள்ளார்.

எனவே, ஓர் அரசாங்க அதிகாரி பாரா ளுமன்ற அங்கத்தவரான என்னிடம் எதிர்க் கேள்வி எழுப்பி சவால் விடுவது எனது சிறப் புரிமையை மீறும் செயலாகும் என கிரி யெல்ல கோத்தபாய ராஜபக்ஷவின் செய லுக்கு கண்டனம் தெரிவித்துள்ளார்.

நான் உரையாற்றிய விடயங்கள் தொட ர்பில் மக்கள் நலன் கருதி படைத்தளபதியான நம் நாட்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷவிற்கு விளக்கமளிக்க தயாராக உள்ளேன்.

மாறாக உத்தியோக அடிப்படையில் என்னை விடக் கீழ்நிலையில் உள்ள ஓர் அரசாங்க அதிகாரிக்கு அவர் இந்நாட்டின் பாதுகாப்பு செயலாளராக இருந்த போதிலும் பதிலளிக்க வேண்டிய தேவை எனக்கில்லை என்றும் எதிர்க்கட்சி பாராளுமன்ற அங்க த்தவர் லக்ஷ்மன் கிரியெல்ல குறிப்பிட்டுள் ளார். (அ-2)

# கருணாவை போலிக் கடவுச் சீட்டில் லண்டனுக்கு அனுப்பிய கோத்தபாய

## ஆங்கில ஊடகம் தகவல்

அவுஸ்திரேலிய பிரஜையான குமார் குண ரட்னம் வேறு ஒரு பெயரில் இலங்கைக்குள் நுழைந்துள்ளார் எனவும் அவர் போலிக் கடவுச் சீட்டு மூலமே இலங்கைக்குள் வந்தார் எனவும் கோத்தபாய குற்றஞ்சாட்டியிருந்தார்.

பின்னர் குமார் குணரட்னம் நாடு கடத் தப்பட்டதும் யாவரும் அறிந்ததே.

இது குறித்து அவுஸ்திரேலிய விசாரணை நடத்த வேண்டும் எனவும் கோத்தபாய கோரி க்கை விடுத்திருந்தார். ஆனால் 2007 ஆம் ஆண்டு போலிக் கடவுச்சீட்டு மூலம் கரு ணாவை லண்டனுக்கு அனுப்பிய கோத்தபாய எவ்வாறு குமார் குணரட்னம் குறித்து கருத் துக்களை வெளியிட முடியும் என சில ஆங்கில ஊடகங்கள் கேள்வி எழுப்பியுள் ளன.

விடுதலைப்புலிகள் இயக்கத்தை விட்டு கருணா பிரிந்த பின்னர் தனது மனைவியை அவர் லண்டனுக்கு அனுப்பி வைத்தார்.

அவர்களைச் சென்று பார்வையிட தான் ஆவலாக உள்ளதாக அவர் மஹிந்தரிடமும் மற்றும் கோத்தபாயவிடமும் தெரிவித்துள் ளார்.

இதனை அடுத்து 2007 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 30 ஆம் திகதி D1944260 என்ற இலக்கம் கொண்ட இராஜதந்திரிக ளுக்கான பாஸ்போர்ட்டை இலங்கையின் குடியகல்வு அதிகாரசபை வழங்கியுள்ளது. கொகில குணவர்த்தன என்ற பெயரில் வழங் கப்பட்ட இந்த பாஸ்போர்ட்டின் கருணாவின் படம் ஒட்டப்பட்டு இருந்தது.

இலங்கை குடிவரவு மற்றும் குடியகல்வு அதிகார சபை கோத்தபாயவின் பாதுகாப்பு அமைச்சுக்கு கீழ் நேரடியாகச் செயற்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது. எனவே கோத்தபா யவுக்குத் தெரியாமல் அங்கே எதுவும் நடக்க வாய்ப்பே இல்லை.

இந்நிலையில் வழங்கப்பட்ட பாஸ்போட் டை இலங்கை குடியகல்வுத் திணைக்களமே பிரித்தானிய தூதுவராலயத்துக்கு அனுப்பி விசாவைப் பெற்றுள்ளது. 2007 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 5ஆம் திகதி இலங்கை யில் உள்ள பிரித்தானியத் தூதுவராலயம் 6 மாத கால விசாவை வழங்கியுள்ளனர்.

லண்டனில் நடைபெறும் காலநிலை மாற் றம் என்ற மாநாட்டில் கலந்து கொள்ளவே கொகில குணவர்த்தன (அதாவது கருணா) செல்கின்றார் என்று பிரித்தானியத் தூது வராலயத்துக்குத் செல்லப்பட்டுள்ளது.

கருணாவின் மனைவி தற்போது அயர்லா ந்தில் வசித்து வருவதாகச் சொல்லப்படுகி ன்றது. இவ்வாறு சுமார் 6 வாரங்கள் கருணா லண்டனில் வசித்து வந்தவேளை இரகசியத் தகவல் ஒன்றின் அடிப்படையில் பிரித்தானி யப் பொலிஸார் இவரைக் கைது செய்தனர்.

இதனூடாகவே பிரித்தானியப் பொலி ஸார் பல உண்மைகளை விளங்கிக் கொண் டனர். கோத்தபாயவின் நேரடி உத்தரவின் பேரிலேயே கருணாவுக்கு கள்ளப் பாஸ்போர்ட் வழங்கப்பட்டதும் கண்டுபிடிக்கப் பட்டது.

இப்படியான ஒரு திருட்டுவேலை செய்த கோத்தபாய குமார் குணரட்னம் தொடர்பாக கருத்துக்களைத் தெரிவிக்க தகுதியுடையவரா என சில ஆங்கில ஊடகங்கள் கேள்வி எழுப்பி யுள்ளன. (அ-2)

# யூதாததேயூ திருவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ். மறைமாவட்ட யாத்திரை தலங்க ளில் ஒன்றான அரியாலை புனித யூதா ததேயூ யாத்திரைத்தல திருவிழா கடந்த 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இதில் நாளை மறுதினம் சனிக்கிழமை மாலை 5 மணிக்கு நற்கருணை பெருவி ழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு திருநாள் திருப்பலியும் ஒப்புக் கொடுக்கப்படும். (அ)

# அபிவிருத்திக்காக காத்திருக்கும் இயக்கச்சி விநாயகபுரம் கிராமம்

இனப்பிரச்சினை காரணமாக நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்த மக்களை ஒன்றிணைத்து 1983 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது இந்த விநாயகபுரம் கிரா மம். ஆனாலும் இங்கு மக்கள் நிலையாக வாழவில்லை. தொடர்ச்சியாக நாட்டில் நிலவிய யுத்த சூழல் இம் மக்களை தொடர் இடப்பெ யர்வுகளுக்கு உள்ளாக்கியது. இதனால் இப் பகுதி மக்களின் வாழ்வாதார மேம்பாடும் கிராமத்தின் கட்டுமான் அபிவிருத்தியும் முடங் கிப்போனது.

இந்நிலையில் தற்போது மக்கள் மீளவும் இக்கிராமத்தில் குடியேறியுள்ளனர். இன்று நாட்டில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற இயல்பு சூழலையும் அபிவிரு த்திக்கு சாத்தியமான கள யதார்த்தத்தையும் சாத கமாக பயன்படுத்தி மேற் கொள்ளப்பட்டுவரும் அபி விருத்தி செயற்பாடுகள் இக் கிராம் மக்களையும் சென்றடைய வேண்டு மென இப் பிரதேச மக் கள் வேண்டு கோள் விடு க்கின்றனர்.

இருப்பினும் இக் கிரா மத்தில் கிராமமட்ட அமை ப்புக்கள் உருவாக்கம் பெறாமையும் அவை கிராமத்தின் அபிவிருத் திக்கு உந்து சக்தியாக இல்லாததன் காரணத் தினாலும் இக் கிராமத் தின் அபிவிருத்தியின் வேகம் சற்று தாமதமாகியுள்ளதாக பொது மக்கள் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இயக்கச்சி விநாயகபுரம் வீதியை புனர மைப்பதற்கும் அப் பகுதி மக்களுக்கு மலசல கூடங்களை அமைத்துக் கொடுப்பதற்கும் தும்பு தொழிற்சாலையினை அமைப்பதற் கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள் ளதாக கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் இக் கிராமத்திற்கு குடி நீரை வழங் குவதற்காக பிரதேச சபையினருக்கு எரிபொ ருளை வழங்குவதற்கும் மாணவர்கள் இரவு நேர கல்வியை தொடர்வதற்காக சூரிய கலங் களை பெற்றுக் கொடுப்பதற்கும் நடவடிக்கை களை மேற்கொள்ளுமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-2)



நடமாடும் கண்காணிப்பு கமரா முறைமையினை பொலிஸ்மா அதிபர் என்.கே. இலங்கக்கோன் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைப்பதை படத்தில் காணலாம்.


**யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் நவோதய பாடசாலை, வயாவிளான்**

**பழையமாணவர் ஒன்றுகூடலும் வருடாந்த பொதுக்கூட்டமும்**

மேற்படி நிகழ்வு பழையமாணவர் சங்கத்தலைவர், பாடசாலை அதிபர். திரு.க.கனகராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

காலம் :- 28.04.2012 சனிக்கிழமை
நேரம் :-மு.ப. 10.00 மணி
இடம் :- பாடசாலை மண்டபம்

அன்று இவ்வருடத்திற்கான புதிய உத்தியோகத்தர் தெரிவும் இடம் பெறும். அனைத்து பழைய மாணவர்களையும் நிகழ்வில் தவ றாது கலந்து கொள்ளுமாறு அன்பாக கேட்டுக்கொள்ளப்படுகின் றீர்கள்.
குறிப்பு:- சங்கம் தொடர்பான பிரேரணைகள் ஏதும் இருப்பின் 25.04.2012 இற்கு முன் அவற்றை ஒப்படைக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

18.04.2012 (சி-6395) திரு.கிறிஸ்தோபர் அலோசியஸ் செயலாளர்

# 'நந்தன' புதுவருட இராசி பலன்கள்



## தனுசு

**மூலம், பூராடம், உத்திராடம் 1 ஆம் பாதம்**

**பாம்பு கிரக பெயர்ச்சிக்குப்பிறகு அதிர்ஷ்ட வாய்ப்புகள் அரங்கேறும்!**

**வாதம் செய்வதில் திறமைசாலிகளாக இருந்தாலும், வாய்ப்புகள் வரும் பொழுது, சாமர்த்தியமாக அதை உபயோகப்படுத்திக்கொள்ளும் தனுசு இராசி நேயர்களே!**

வருடத் தொடக்கமே உங்கள் இராசியில்தான் தொடங்குகிறது. அதுமட்டுமல்ல, குரு உங்கள் இராசியைப் பார்த்து, தொடங்கும் இந்த் ஆண்டு, குதூகுலம் தரும் ஆண்டாகவே அமையபோகிறது.

சனி பத்தில் சஞ்சரித்து, தொழில் வளர்ச்சியை மேலோங்கச்செய்ய போகிறார். தொழில் மாற்றச் சிந்தனைகள் அதிகரிக்கும்.

சனி, செவ்வாய் சேர்க்கை காலத்தில் மட்டும் எதிரிகளிடம் கூடுதல் விழிப்புணர்ச்சி காட்டுவது நல்லது. வீண்பழிகளையும், வேற்று மனிதர்களால் பிரச்சினைகளையும் சந்திக்கநேரிடலாம்.

இருப்பினும், குரு பலம் உங்களுக்கு கூடுதலாக இருப்பதால், தெய்வ தரிசனங்களும், சிறப்புப் பரிகாரங்களும் வையகத்தில் வரும் துயரங்களைப்போக்கும். மனக் கவலையை மாற்றும்.

சர்ப்ப சாந்திப் பரிகாரங்களும், சண்முக நாதர் வழிபாடும், வைரவர் வழிபாடும், நந்தீஸ்வரர் வழிபாடும் உங்களுக்கு நல்ல பலன்களை வரவழைத்துக் கொடுக்கும். குருப் பெயர்ச்சிக்கு பின்னால் எதிரிகள் விலகுவர். மறைமுக எதிர்ப்புகளுக்கு பரிகாரமாக திசைமாறிய தென்முகக் கடவுளை வழிபாடு செய்யுங்கள்.

**தெய்வ பக்தியும், தேச பக்தியும் மிக்கவர்கள் நீங்கள்!**

நாணயம் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்குவீர்கள். ஆலோசனை செய்வதில் கைதேர்ந்தவர்களாக இருப்பீர்கள். சகல கலைகளையும் அறிந்திருந்தாலும் பார்ப்பதற்கு சாந்தசொரூபியாகத் தோற்றமளிப்பீர்கள்.

தேச பக்தியும் உங்களிடம் உண்டு. தெய்வபக்தியும் உங்களிடம் உண்டு. ஆசைப்பட்டதை அடையாவிட்டால் கோபம் உடனே வந்துவிடும். இரகசியங்களைக் காப்பாற்றுவதில் வல்லவர்களாக விளங்குவீர்கள்.

உங்களுக்கு இந்த நந்தனப் புத்தாண்டு எப்படியிருக்கும் என்பதைப் பற்றிப் பார்ப்போம்.

**ஆண்டின் தொடக்கம் முதல் வைகாசி 3 வரை**

ஆண்டின் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் குரு உங்கள் இராசியைப் பார்க்கிறார். எனவே, குருச்சந்திர யோகம் செயற்படுகிறது. வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். வளர்ச்சி கூடும். புதிய பொறுப்புகளும், பதவிகளும் வந்துசேரும். பூமி சேர்க்கை அதிகரிக்கும்.

பாம்புக்கிரகங்களின் ஆதிக்கத்தின் படி பயணங்கள் அதிகமாகும். பொதுவாக நண்பர்களின் நல்ல ஆதரவோடு முன்னேற்றம் காணும்நேரமிது.

**சகட யோகம் தரும் குருப்பொயர்ச்சி**

நவக்கிரகங்களில் நல்ல பலனைக் கொடுப்பவர் குரு என்று சொல்வார்கள். அவர் உங்கள் இராசியை பொறுத்தவரை இராசிநாதனாகவும், 4 க்கு அதிபதியாகவும் விளங்குகிறார். அவர் வைகாசி மாதம் 6 ஆம் திகதி பெயர்ச்சியாகி சகட யோகத்தை வழங்கப் போகிறார்.

எனவே, ஒரு தொகை செலவழிந்த பிறகு அடுத்த தொகை வந்துசேரும். இராசிநாதன் 6 இல் சஞ்சரிக்கும் பொழுது இட மாற்றம், ஊர்மாற்றம், பதவி வாய்ப்புக்கள், புதிய பொறுப்புகள் வந்துசேரலாம்.

தேவ குரு 6 இல் வந்தால் தேவைகள் பூர்த்தியாகும் என்பார்கள். ஆவல்கள் தீரவேண்டின் அனுசரிப்பும் உங்களுக்குத் தேவை. 4 க்கு அதிபதியாகவும் குரு விளங்குவதால் பெற்றோர் வழி பகைகளும் உருவாகலாம். சொத்துக்கள் வாங்க, விற்க உகந்த நேரமாக இது அமையும்.

6 இல் சஞ்சரிக்கும் குருவிற்கு பரிகாரமாக வியாழன் தோறும் குரு வழிபாட்டை மேற்கொள்வதோடு,

சிவல்புரி சிங்காரம்

இல்லத்திலும் குரு கவசம் பாடி, குரு வழிபாடு செய்யலாம். சுய ஜாதகத்தில் வியாழ திசை, வியாழ புத்தி நடப்பவர்கள், இடப அல்லது துலாம் இராசியில் குரு இருப்பவர்கள் திசை மாறிய தென்முகக்கடவுளை வழிபடுவது நல்லது. குருவின் அருட்பார்வை உங்கள் இராசிக்கு 2, 10,12 ஆகிய இடங்களில் பதிவாகிறது.

அதன் பார்வை பலத்தால் குடும்ப ஸ்தானம் பலப்படுகிறது. எனவே,

## தொழில் ஸ்தானம் புனிதமடைவதால் தொழில் வளம் மேலோங்கும்...!

திருமணத் தடை அகலும். தித்திக்கும் வாழ்க்கை அமையும். வருமானப் பெருக்கம் ஏற்படும். வசதி வாய்ப்புக்கள் பெருகும். தொழில் ஸ்தானம் புனிதமடைவதால், தொழில்வளம் மேலோங்கும். குருவின் பார்வை சாதாரண மனிதர்களைக்கூட சக்கரவர்த்தியாக மாற்றிவிடும். அரியனை ஏறும் யோகம் முதல் அன்றாட வாழ்க்கையை நன்றாக அமைத்துக் கொள்ளும் யோகம் வரை அனைத்தையும் கொடுப்பது குருவின் கையில்தான் இருக்கிறது. எனவே, உத்தியோக உயர்வு, ஊதிய உயர்வு மற்றும் பயணங்களால் பலன்களும் கிடைக்கும் வாய்ப்பு உண்டு.

**செவ்வாய்- சனி சேர்க்கை காலம்!**

ஆனி 9 ஆம் திகதி முதல் ஆடி 29 ஆம் திகதி வரை உங்கள் இராசிக்கு பத்தாமிடத்தில் செவ்வாயும் சனியும் ஒன்று கூடுகிறார்கள். இக்காலத்தில் திடீர் திருப்பங்கள் பலவும் ஏற்படும். தொழிலில் இருப்பவர்களுக்கும் தொழில் மாற்றம், உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு உத்யோக மாற்றம், பதவியில் இருப்பவர்களுக்கு பதவி மாற்றம் ஆகியவை ஏற்படலாம்.

பிள்ளைகளால் பிரச்சினைகளைச் சந்திக்கின்ற நேரமிது. மனக் குழப்பங்கள் ஏற்படும் பொழுதெல்லாம் அருகில் இருக்கும் ஆன்மீக பெரியவர்கள், சான்றோர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது.

**துயரங்கள் போக்குமா துலாம் இராசிச்சனி!**

ஆவணி 27 ஆம் திகதி உங்கள் இராசிக்கு பதினோராமிடமான இலாப ஸ்தானத்தில் சனி உச்சம் பெறப் போகிறார். இது மிகுந்த யோகம் தரும் நேரமாகும். பணம் பலவழிகளிலும் வந்து பையை நிரப்பும்.

குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளை பூர்த்தி செய்து மகிழ்வீர்கள். விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் வாய்ப்புக் கிட்டும்.

**வக்ர குரு வளர்ச்சியைக் கொடுக்குமா?**

புரட்டாதி 26 ஆம் திகதி முதல் தை 24 ஆம் திகதி வரை இடபத்தில் குரு வக்ரம் பெறுகிறார். இக்காலம் உங்களுக்கு ஓர் பொற்காலமாகும். தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். விழிப்புணர்ச்சி இல்லாமல் செயற்பட்டால்கூட விரும்பும் நல்ல தகவல்கள் வந்து கொண்டேயிருக்கும். அரசியல் துறையில் ஈடுபட்டவர்களுக்கு புதிய பொறுப்புகளும், பதவிகளும் வந்துசேரும். எதிரிகள் விலகி, சரணடைவர்.

உத்யோகத்தில் இருப்பவர்கள் ஊதிய உயர்வோடு இடமாற்றம் காண்பர். மஞ்சள் ஆடை அணிவித்து, முல்லைப் பூமாலை சூட்டி குரு பகவானை வழிபட்டால் எல்லையில்லாத நற்பலன்கள் கிட்டும்.

**பாம்புக்கிரக பெயர்ச்சி பக்கபலமாக இருக்குமா?**

கார்த்திகை 17 ஆம்திகதி 11 ஆம் இடத்தில் இராகுவும், 5 ஆம் இடத்தில் கேதுவும் சஞ்சரிக்க போகிறார்கள். இராகு பலத்தால் பொருளாதாரநிலை உயரும். போற்றுகிற செல்வாக்கு மேலோங்கும். வீடு கட்டும் வாய்ப்பு முதல், நாடு விட்டு நாடு செல்லும் வாய்ப்புவரை நடைபெறும்.

5 இல் சஞ்சரிக்கும் கேது, பிள்ளைகள் வழியில் நல்ல முன்னேற்றத்தைக் கொடுக்கும். அவர்களின் கல்வி நலன் கருதி எடுத்த செயல் வெற்றி பெறும். பாகப்பிரிவினைகள் சுமூகமாக முடியும்.

இக்காலத்தில் சர்ப்ப சாந்திகளை முறையாகச் செய்தால் சந்தோஷங்களை சந்திக்கலாம்.

**வக்ர சனியால் வளர்ச்சி ஏற்படுமா?**

சித்திரை 1 ஆம் திகதி முதல் ஆனி 6 ஆம் திகதி வரையிலும் பிறகு மாசி 4 ஆம் திகதி முதல் பங்குனி 31ஆம்திகதி வரையிலும் சனி வக்ர இயக்கத்தில் இருக்கிறார் உங்கள் இராசி அடிப்படையில் சனி 2, 3 ஆகிய இடங்களுக்கு அதிபதியாக விளங்குவதால் அதன் வக்ர இயக்க காலத்தில் கூடுதல் விழிப்புணர்ச்சி தேவைப்படும். பணப் பற்றாக்குறை அதிகரிக்கலாம். எப்படி, எப்படி எல்லாம் தொழிலைப் பெருக்கினால் தொகை வந்து சேரும் என்று சிந்திப்பீர்கள். குடும்பத்தில் ஒருவர் மாற்றி ஒரு வருக்குத் தொல்லைகள் உருவாகலாம். வந்த வரன்கள் வாயிலோடு நின்றுவிடலாம்.

சனி மூன்றாமிடத்திற்கு அதிபதி என்பதால் தொழில், வியாபாரத்தில் போட்டிகள் அதிகரிக்கும். உடன் பிறப்புகள் உங்களை விட்டு விலகாமல் பார்த்துக்கொள்வது நல்லது. பாகப்பிரிவினைகள் சுமூகமாக முடியும் என்பது சந்தேகம்தான். ஆவணி மாதத்திற்குமேல்தான் எதிர்பார்த்த நற்பலன்கள் கிடைக்கும்.

வியாழக்கிழமைதோறும் குரு தட்சணாமூர்த்தி வழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

நந்தன வருடம் தனுசு இராசியில் பிறந்த பெண்களுக்கு எதிர்பார்ப்புகள் நிறைவேறும் விதத்திலேயே கிரகங்களின் சஞ்சாரம் இருக்கிறது. கணவன்- மனைவிக்குள் உறவு அதிகரிக்கும். கரைந்த சேமிப்புகளை ஈடுகட்டுவீர்கள். வைகாசிக்கு மேல் தங்கம், வெள்ளி ஆகியவற்றை வாங்கவேண்டும் என்ற எண்ணம் நிறைவேறும்.

சனி, செவ்வாய் சேர்க்கை காலத்தில் குழந்தைகள் வழியில் விரயங்கள் ஏற்படலாம். அதன் குணங்களில் மாறுபாடு ஏற்படும் பொழுதெல்லாம், அன்பு செலுத்தித் திருத்துவது நல்லது. வருடக்கடைசியில் வளர்ச்சி அதிகரிக்கும். உங்கள் பெயரிலேயே தொழில் அமைக்க குடும்ப உறுப்பினர்கள் முடிவெடுப்பர். உத்யோகத்திலிருக்கும் பெண்களுக்கு பதவி உயர்வு கிட்டும். ஊதிய உயர்வும், உடன்பிறப்புகளின் ஒத்துழைப்பு கிட்டும். நந்தன வருடம் நன்மைகளை மேலும்




வழங்க குருவின் பாதசார பலமறிந்து, சுயஜாதக ரீதியான பரிகாரங்களை மேற்கொள்வதே நல்லது.

(தொடரும்)

# பெண்கள், சிறுவர்கள் மீதான வன்முறைகளை கட்டுப்படுத்த அனைவரும் முன்வரவேண்டும்

## யூ.ஆர்.பிரெண்ட் அதிகாரி சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

இணையத்தள மையங்களில் அமைக்கப்பட்டுள்ள மறைப்புத் தடுப்புக்களை அகற்றி திறந்த அரங்கிற்கு கொண்டுவரப்பட வேண்டும். இந்த நடைமுறையைப் பின்பற்ற தவறும் இணையத்தள மைய உரிமையாளர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் யாழ். மாவட்ட உளசமூக அதிகாரி சி. கௌதமன் தெரிவித்துள்ளார்.

யு.ஆர். பிரெண்ட் பவுண்டேசன் நிறுவனத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிறுவர்கள் இணையத்தளத்தைப் பயன்படுத்தும் போது அது திறந்த அரங்கிற்கு கொண்டு வரப்பட வேண்டும். அத்தோடு பாடசாலை நேரத்தில் சிறுவர்கள் இணையத்தள மையங்களை பயன்படுத்துவதை இணையத்தள மைய உரிமையாளர்கள் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

எதிர்காலத்தில் இணையத்தள மையங்கள் அனைத்தும் கண்காணிக்கப்படவுள்ளதோடு சட்டங்களை மீறுவோர் மீது கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

மேலும் சிறுவர் சம்பந்தமான செய்திகளை அறிக்கையிடும் போது அவர்களது எதிர்காலத்தை கருத்தில் கொண்டு எதிர்கால வாழ்க்கைக்கு எந்தவிதத்திலும் பாதிப்பு ஏற்படாத வகையில் செய்திகளை ஊடகங்கள் அறிக்கையிட வேண்டும்.

அத்தோடு குற்றம் சாட்டப்பட்டவர் எத்தகைய பின்னணியைக் கொண்டிருந்தாலும் அவரை சமுதாயத்திற்கு இனம்காட்ட வேண்டும்.

இதுதவிர 18 வயதிற்கு குறைந்தவர்கள் கைத்தொலைபேசியைப் பாவிப்பதை தடைசெய்ய வேண்டும். குறிப்பாக பாடசாலை மாணவர்கள் கைத்தொலைபேசியை பாவிப்பதை கட்டாயமாக தடை செய்ய வேண்டும்.

ஏற்கனவே பலரால் வலியுறுத்தப்பட்டுள்ளவாறு தனியார் கல்வி நிலையங்களில் மாலை 6 மணிக்கு பின்பு வகுப்புக்கள் இடம் பெறுவதை தடை செய்வதோடு தனியார் கல்வி நிலையங்களை பதிவு செய்ய வேண்டும்.

மேலும் சிறுவர்களுக்கு விடுதிகளிலுள்ள அறைகளைப் பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்குவதை விடுதி, ஹோட்டல் உரிமையாளர்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

இது தவிர 21 வயதுக்கு குறைந்தவர்களுக்கு போதைப்பொருட்களை விற்பனை செய்பவர்களை கடுமையாக தண்டிக்க வேண்டும் என தெரிவித்தார்.

இதேவேளை, இந்த சந்திப்பில் கலந்து கொண்ட சட்டத்தரணி சுகாஸ் தனது கருத்தை கூறுகையில்,

யாழ். மாவட்டத்தில் அதிகரித்து வருகின்ற பெண்களுக்கு எதிரான வன்முறை மற்றும் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்களைப் பார்க்கின்ற போது பாரதூரமான விளைவினை எமது எதிர்கால சந்ததியினர் எதிர்கொள்ளவுள்ளனர் என்பது வெளிப்படையாகத் தெரிகின்றது.

குற்றவாளிகள் தப்பிப்பதால் குற்றங்கள் அதிகரித்து செல்கின்றன. குற்றவாளிகளினால் பாதிப்புக்குள்ளாகுபவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரித்து செல்கின்றது.

பாதிக்கப்பட்டவர்கள் சார்பாக நீதிமன்றில் ஆஜராக நான் தயாராகவுள்ளேன். இதற்கென எந்தக் கொடுப்பனவுகளையும் தரத் தேவையில்லை.

பாதிக்கப்பட்டவர்கள் பின்வரும் தொலைபேசி இலக்கம் ஊடாக தொடர்பு கொண்டு தமது முறைப்பாட்டைப் பதிவு செய்யமுடியும். 021 320 2500 அத்தோடு யாழ்ப்பாணத்திலுள்ள யூ.ஆர்.பிரெண்ட் பவுண்டேசன் நிறுவனத்திற்கு வருகை தந்தும் முறைப்பாட்டைப் பதிவு செய்யலாம்.

பாரதூரமான குற்றங்களைச் செய்பவர்களுக்குச் சார்பாக சட்டத்தரணிகள் ஆஜராகக்கூடாது. சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுபவர்கள் தண்டிக்கப்பட வேண்டியவர்கள்.

அத்தோடு சமூகவிரோதச் செயல்களில் ஈடுபடுபவர்களை ஊடகங்கள் வெளிப்படுத்த வேண்டும். சிறுவர், பெண்கள் உரிமைக்காக ஊடகங்கள் போராட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, இந்தக் கலந்துரையாடலில் ஏஏஏ மூவிஸ் நிறுவனத்தின் தலைவர் க. செவ்வேள், அந்நிறுவனத் திட்டப்பணிப்பாளர் துவாரகன், ஏனைய பணியாளர்களும் கலந்து கொண்டனர். (அ-6)

# மரண அறிவித்தல்

## திருமதி செல்வராணி பிறேமகுமார்



வேலணையில் பிறந்து கொட்டடியில் வசித்து தற்போது சுவிற்சர்லாந்தில் வாழ்ந்து வரும் செல்லவராணி பிறேமகுமார் அவர்கள் கடந்த 17.04.2012 செவ்வாய்க் கிழமையன்று அகால நிலையில் இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதிப்பிள்ளை கண்மணி தம்பதியரின் அன்பு மகளும், கொக்குவில் மேற்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கந்தசாமி இராஜநாயகியின் பாசமிகு மருமகளும், பிறேமகுமார் அவர்களின் அன்பு மனைவியும் பிரதீப் , பிரமிளன், பிரகாந், ஆகியோரின் பாசமிகு தாயாரும், பாலச்சந்திரன், நீலாதேவி, கமலாதேவி, விஜயலக்ஷ்மி, புஸ்பராணி, உதயராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், தனேந்திரன், காலஞ்சென்ற அம்பிகைராசா, யோகநாதன், இராஜேஸ்வரன், காலஞ்சென்ற சாந்தகுமார், கலாதேவி, வசந்தகுமார் (கனடா), ஜீவகுமார் (கனடா), ஜெயகலா(சுவிஸ்), பத்மலதா(கனடா) ஆகியோரின் மைத்துனியும், சற்குணதேவி (கனடா), ஜதினி (கனடா), விஜயகுமார் (சுவிஸ்), குலேந்திரன்(கனடா) ஆகியோரின் உடன் பிறவா சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 2012.04.20 வெள்ளிக்கிழமை நடைபெற்று சுவிற்சர்லாந்தில் தகனம் செய்யப்படும். அன்றையதினம் யாழ்ப்பாண இல்லத்திலும் துக்கதின நிகழ்வுகள் அனுஷ்டிக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

**67/21 சீனிவாசகம் வீதி,**
**கொட்டடி,**
**யாழ்ப்பாணம்.** (8192)

**தகவல்:-**
**கலாநிதி நா. தனேந்திரன்(ச.நீ)**
**அத்தான்.**

# நாட்டிற்கு எதிராக மற்றொரு பிரேரணை

## திவயின தகவல்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு எதிராக மற்றுமொரு பிரேரணையை முன்வைக்க அரச சார்பற்ற நிறுவனங்கள் முயற்சித்து வருவதாக திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள மனித உரிமை பேரவையின் அமர்வுகளில் இலங்கைக்கு எதிராக பிரேரணை முன்வைக்கப்படவுள்ளது.

இலங்கையின் தற்போதைய மனித உரிமை நிலைமைகள் பற்றிய தகவல்களை ஏப்ரல் மாதம் 23 ஆம் திகதிக்கு முன்னதாக வழங்குமாறு மனித உரிமை கவுன்சில் அதிகாரிகள், அரச சார்பற்ற நிறுவனங்களிடம் கோரியுள்ளனர்.

கடத்தல் சம்பவங்கள் தொடர்பில் முறைப்பாடு செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை கடத்தல் சம்பவங்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்க திட்டமிட்டுள்ளது. (அ-2)

# வயிற்றோட்டத்திற்கான காரணத்தை கண்டறிய விசேட நிபுணர் குழு

லிந்துல தலவாக்கலை பகுதியில் வேகமாகப் பரவும் வயிற்றோட்டத்திற்கான காரணம் தொடர்பில் கண்டறிவதற்காக அந்தப் பகுதிக்கு விசேட நிபுணர்கள் குழுவொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக மத்திய மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் சாந்தி சமரசிங்க குறிப்பிட்டுள்ளார்.

தற்போது நீரை சுத்திகரிக்கும் பணிகளும் மக்களைதெளிவுபடுத்தும்நடவடிக்கைகளும்முன்னெடுக்கப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

லிந்துலயில் இதுவரை வயிற்றோட்டம் காரணமாக இருவர் உயிரிழந்துள்ளனர். வயிற்றோட்டம் பரவும் நிலைமை தற்போது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டுள்ளதாக தலவாக்கல சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஜகத் அபேகுணவர்த்தன குறிப்பிட்டுள்ளார்.

இதுவரை 7 பேர் மாத்திரம் வயிற்றோட்டத்திற்காக சிகிச்சை பெற்றுள்ளதாக அவர் தெரிவித்தார். அத்துடன் நீர் மாதிரிகளை பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் நீர் நிலைகளில் இருந்து பெறப்படும் சுத்திகரிக்கப்படாத நீரைப் பாவிப்பதை தவிர்த்துக்கொள்ளுமாறும் பொது மக்களிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (அ-2)

# முன்னாள் போராளிகளின் புதுவருட கொண்டாட்டம்

புனர்வாழ்வளிக்கப்பட்டு வரும் முன் னாள் தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர் களின் புத்தாண்டு விழா இன்று வவுனியா நகரசபை மைதானத்தில் நடைபெற வுள்ளது.

இந்நிகழ்விற்கு முன்னாள் விடுதலைப் புலிப் போராளிகளின் குடும்ப அங்கத்தவர்களுக்கும் பொதுமக்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக புனர்வாழ்வு அமைச்சின் சிரேஷ்ட ஆலோசகர் சிவலிங்கம் சதீஸ்குமார் தெரிவித்துள்ளார். இதில் அமைச்சர் சந்திரசிறி கஜதீர தலைமை தாங்கவுள்ளார்.

இந்த நிகழ்வுக்கு விடுவிக்கப்பட்ட முன்னாள் போராளிகளும் அழைக்கப்பட்டுள்தாகவும் இதில் அவர்களுக்கான விசேட நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் சதீஸ்குமார் தெரிவித்துள்ளார். (அ-2)

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 105



சோவியத் யூனியன் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த பொழுது 2 கோடியே 50 இலட்சம் மக்கள் தமது வீடுகளை இழந்தனர்

மேற்கு நோக்கி முன்னேற சோவியத் வீரர்கள் ஹிட்லர் பாசிஸ்டுகளின் இரத்தக்களரியான குற்றங்களைப்பற்றி மேன்மேலும் புதிய விவரங்களை அறிந்தனர். ஜேர்மனிய பாசிசத்தின் மிருகத்தனம் இதில் மேன் மேலும் வெளிப்பட்டது. ஜூலை 23 ஆம்திகதி 1-வது பைலோருஷ்ய சேனையின் துருப்புகள் லுயூப்ளினுக்கு 2கி.மீ. அருகே இருந்த மைதானெக் எனும் மரணமுகாமை விடுவித்தனர். இங்கே ஹிட்லரின் கொடுங்கோலர்கள் தாம் தோற்றுவித்த மரணத்தொழிற்சாலையில் முதியோர், பெண்கள், குழந்தைகள் உட்பட சுமார் 15 இலட்சம் பேர்களைக் கொன்றனர். மத்திய கால சமயத் தண்டனையின் பயங்கரங்கள் கூட இந்த இராட்சஸசத் தனமான கோரத்தோடு ஒப்பிடும்போது பரவாயில்லை போலத்தோன்றும்.

பெரும் படைத்திரட்டுகளைச் சுற்றி வளைத்து பின் இவற்றை ஒழித்துக் கட்டும் இராணுவ நடவடிக்கை முறை முந்தைய நடவடிக்கைகளை விட பைலேருஷ்ய நடவடிக்கையில் அதிக பரவலாக பயன்படுத்தப்பட்டது. உதாரணமாக நடவடிக்கையின் ஆரம்பத்தில் பைலோருஷ்யாவில் இருந்த 63 பாசிச ஜேர்மனிய டிவிஷன்களில் 40 இற்கும் மேற்பட்ட டிவிஷன்கள் சுற்றிவளைக்கப்பட்டன. இவற்றில் கணிசமான பகுதி அழிக்கப்பட்டது, முறியடிக்கப்பட்டது. புதிய அம்சம் என்னவெனில், 3 பைலோருஷ்ய சேனைகள் எதிரியை தீவிரமாக துரத்திச்சென்றதன் [illegible] முன்னணியிலிருந்து 200 கி.மீ ஆழத்தில் தள்ளியிருந்த ஒரு இலட்சத்து 5 ஆயிரம் பேரடங்கிய பாசிச ஜேர்மனியப்படைத்திரட்டை மீன்ஸ்க் நகருக்குக் கிழக்கே சுற்றி வளைக்க முடிந்தது ஆகும். பைலோருஷ்ய நடவடிக்கையின்போது முந்தைய நடவடிக்கைகளில் நடை பெற்றதைவிட குறுகிய கால கட்டத்திலேயே சுற்றிவளைக்கப்பட்ட எதிரியின் படைத்திரட்டுகளை ஒழித்துக் கட்ட முடிந்தது. வித்தெப்ஸ் அருகே 2 நாட்களிலும் பப்ருய்ஸ்க் அருகே 3 நாட்களிலும் மீன்ஸ்க் அருகே 7 நாட்களிலும் இவை ஒழிக்கப்பட்டன.) சுற்றிவளைத்த அதே நேரத்தில் எதிரியைப் பிளவுபடுத்தியதால், எதிரியால் தன்னிச்சையாக இயங்க முடியாமல் போனதும் இதனால், எதிர்ப்புச்சக்தி பெரிதும் குறைந்ததும் இதற்குக் காரணமாகும். மொத்தத்தில் பைலோருஷ்ய நடவ டிக்கை எதிரியின்



சோவியத் யுத்தகளத்தில் டாங்கிகளின் நகர்வு

## தீர்மானகரமான வெற்றிகளின் ஆண்டு

போர்முனையை ஒன்றிலிருந்து ஒன்று நெடுந்தொலைவில் தள்ளியுள்ள இடங்களில் ஒரே நேரத்தில் பிளந்து கொண்டு சென்ற தற்கு எடுத்துக்காட்டாக அமைந்தது. இது எதிரியின் தற்காப்பை சிறுபகுதி களாகத்துண்டித்தது. பரந்த போர் முனையில் முயற்சிகளைச் சிதற டித்து, சோவியத்துருப்புகளின் தாக்கு தலைக் குலைப்பதற்கான பெரும் எதிர் நடவடிக்கைகளுக்கு பாசிச ஜேர்மனிய படைத் தலைமை ஏற்பாடு செய்து நிறைவேற்றாதவாறு செய்தது.

லிவோர் சண்டமீர் நடவடிக்கை (1944 ஜூலை 13-ஆகஸ்ட்டு 29 )

எதிரியின் வடக்கு உக்ரேன் படைத் தொகுதியை முறியடித்து, மேற்கு உக்ரேனையும் போலந்தின் தென் கிழக்குப்பகுதியையும் விடுவிக்கும் நோக்கத்தோடு இந்நடவடிக்கை சோவியத்யூனியனின் மார்ஷல் கோனெவின் தலைமையிலிருந்த முதலாவது உக்ரேனிய சேனையின் துருப்புகளால் நடத்தப்பட்டது.

சோவியத்துருப்புகள் தாக்குதலைத் தொடங்கியபோது எதிரியிடம் 34 காலாட்படை, 5 டாங்கி, 1 மோட்டார் டிவிஷன்களும் 2 காலட்படை பிரிகேட்டுகளும் இருந்தன. எதிரிதரப்பில் 6 இலட்சத் திற்கும் மேற்பட்டோர் (பின்னணி படைப்பிரிவுகளைச் சேர்த்து 9 இலட்சம்பேர்) இருந்தனர். எதிரி துருப்புகளிடம் 6 ஆயிரத்து 300 சாதார மற்றும் மார்டர்பீரங்கிகளும் 900 டாங்கிகள், திடீர்தாக்குதல் பீரங்கிகளும் 700 விமானங்களும் இருந்தன.

முதலாவது உக்ரேனிய சேனையில் 80 துப்பாக்கிப்படை டிவிஷன்கள் 10 டாங்கி, இயந்திரப்படை கோர்பஸ்கள், நான்கு விசேட டாங்கி, இயந்திரப் படை பிரிகேடுகள் முதலியன இருந்தன. இவற்றில் மொத்தமாக 10 இலட்சம் போர்வீரர்கள் இருந்தனர். 16 ஆயிரத்து 100 சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகளும் சுமார் 2ஆயிரத்து ஐம்பது டாங்கிகள், தானியங்கி பீரங்கி அமைப்புகளும் 3ஆயிரத்து 250க்கும் கூடுதலான விமானங்களும் இருந்தன. எனவே ஆட்பலத்தில் 1.2 மடங்கும் பீரங்கிகளில் 2.6 மடங்கும் டாங்கிகளில் 2.3 மடங்கும் விமானங்களில் 4.6 மடங்கும் செஞ்சேனை எதிரியை விஞ்சி நின்றது.

நடவடிக்கை இரண்டு கட்டங்களில் நிறைவேற்றப்பட்டது. முதல்கட்டத்தில் சோவியத்துருப்புகள் ராவா-ரூஸ்கயாமற்றும் லிவோவ் திசைகளில் எதிரியின் தற்காப்பைப் பிளந்து பிரோது எனும் இடத்திற்கு தென்மேற்கே உள்ள பிரதேசத்தில் 8 டிவிசன்கள் அடங்கிய எதிரியின் படைத்திரட்டைச்சுற்றி வளைத்து, அழித்தன, சான் ஆற்றைக்கடந்து ராவா-ரூஸ்கயா, பெரெமீஷல், லிவோவ் மற்றும் ஸ்தனீஸ்லவ் ஆகிய நகரங்களை விடுவித்தன.

இரண்டாவது கட்டத்தில் சோவியத்துருப்புகள் முக்கிய சக்திகளை லிவோவ்- பெரெமீஷல் திசையிலிருந்து சண்டமீர் திசைக்கு மாற்றி, எதிரியைத் துரத்திச்சென்று, வீஸ்லா ஆற்றை அடைந்து, அதைக் கடந்து சண்டமீர் பிரதேசத்தில் பெருந் தாக்குமுனையைக் கைப்பற்றின.

லிவோவ்-சண்டமீர் நடவடிக்கையின் பயனாய் வடக்கு உக்கேரன் எதிரிபடைத்தொகுதி முறியடிக்கப்பட்டது, மேற்கு உக்ரேனும் போலந்தின் கணிசமான பகுதியும் விடுவிக்கப்பட்டன. போலந்து நாடு முழுவதையும் பாசிச ஜேர்மனிய ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து விடுவிக்கும் நோக்கத்தோடு அடுத்த வீஸ்லா-ஓதெர் நடவடிக்கையை நடத்துவதற்கு அனுகூலாமான சூழ்நிலைகள் தோற்றுவிக்கப்பட்டன.




சோவியத் படையினரால் கைதான ஜேர்மன் இராணுவ அதிகாரி ஒருவர் விசாரணைக்காக அழைக்கப்பட்டுள்ளார்

(தொடரும்)

# வடக்குக் கிழக்கில் சமாதானம் நிலவுகின்றது தமிழ் கட்சிகள் வராமைக்கு இதுவே காரணம்

## இந்தியக் குழுவிடம் அஸ்வர் எம்.பி. தெரிவிப்பு



(கொழும்பு)

யாழ்.குடாநாட்டிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்களுக்கும் இந்திய உதவியுடன் கட்டப்பட்டு வரும் 50 ஆயிரம் வீட்டுத் திட்டங்களில் வீடுகள் வழங்கப்பட வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம்.அஸ்வர் கேட்டுக் கெண்டார்.

நேற்று முன்தினம் பாராளுமன்றத்துக்கு விஜயம் செய்திருந்த இந்தியப் பாராளுமன்றக் குழுவினரைச் சந்தித்த போதே அஸ்வர் இந்த வேண்டுகோளை முன்வைத்துள்ளார்.

இந்திய லோக்சபாவின் எதிர்க்கட்சித் தலைவர் சுஷ்மா சுவராஜ் தலைமையிலான இந்தியக் குழுவினருடனான சந்திப்பு பாராளுமன்றக் கட்டடத்தொகுதியின் குழு அறையில் நடைபெற்றது.

அங்கு தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர்,

யாழ். குடாநாட்டிலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டனர். இவர்கள் இன்னமும் சிங்கள கிராமங்களில் தொடர்ந்தும் தங்கியுள்ளனர்.

இந்த நிலையில் இந்திய வீட்டுத் திட்டத்தில் முஸ்லிம்களுக்கும் வீடுகள் வழங்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் இணைந்து கைச்சாத்திட்டு கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகர் அசோக் கே.காந்தாவிடம் கையளித்திருந்தோம்.

இந்திய வீட்டுத் திட்டங்கள் முஸ்லிம்களுக்கும் சமமாகப் பகிர்ந்தளிக்கப்படுவதை உறுதிப்படுத்த தற்பொழுது இலங்கைக்கு வந்திருக்கும் இந்தியப் பாராளுமன்றக் குழுவினர் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த வேண்டும்.

உதாரணமாக கொச்சிக்கடை, கொட்டாஞ்சேனை, வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி மற்றும் ஹவலொக் வீதி ஆகிய இடங்களில் வசித்து வரும் தமிழர்கள் சிறப்பான வாழ்க்கை வாழ்ந்து வருகின்றனர். நீங்கள் நேரம் ஒதுக்கி இந்த இடங்களுக்குச் சென்று பார்த்தால் உண்மை நிலைமையை புதுடில்லிக்கு சொல்ல முடியும்.

தமிழ் சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கூறினார்கள். எந்த தமிழ் சமூகத்தை அவர்கள் பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள் என நான் கேள்வியெழுப்புகின்றேன்.

யாழ்ப்பாண சமூகத்தையா, மட்டக்களப்பு, மலையகம் அல்லது கொழும்பு தமிழ் சமூகத்தையா அவர்கள் பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள். அமைச்சர் நிமால் சிறிபால டி.சில்வா சுட்டிக்காட்டியதற்கு அமைய தமிழ் முதலமைச்சர் தனது அமைச்சரவையில் தமிழ் மற்றும் முஸ்லிம் அமைச்சர்களைக் கொண்டுள்ளார்.

முன்னர் அந்த அமைப்பிலிருந்த விநாயகமூர்த்தி முரளிதரன் தற்பொழுது மீள்குடியேற்றப் பிரதியமைச்சராகவுள்ளார். அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் அபிவிருத்தித் திட்டங்களில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முழுவீச்சில் பங்கெடுத்துள்ளார். இந்நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தனித்த பிரதிநிதித்துவத்தைப் பற்றிப் பேசினால் மலையகத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், வடக்கில் ஈ.பி.டி.பியின் நிலைமை என்ன? இந்த விடயங்கள் இந்தியாவிலோ அல்லது ஏனைய நாடுகளிலோ நடைபெற்ற பேச்சுக்களில் உள்ளடக்கப்படவில்லை.

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கில் துரிதகதியிலான பொருளாதார அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படுவதுடன் இங்கு நிலையான சமாதானச் சூழ்நிலை காணப்படுகின்றது என்பது தெரிந்ததாலேயே சீமான், வைகோ, திருமாவளவன் மற்றும் ஏனைய தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் உங்கள் குழுவிலிருந்து மீளெடுக்கப்பட்டனர். அவர்கள் இங்கு வந்து உண்மை நிலையைப் பார்த்தால் மீண்டும் மீண்டும் தாம் கூறிவரும் குற்றச்சாட்டுக்களை தொடரமுடியாது என்றும் அஸ்வர் எம்.பி.மேலும் கூறினார்.

இந்தச் சந்திப்பு வெளிப்படையாக நடைபெற்றதுடன் வரவேற்கத்தக்கதாக இருந்ததென இந்தியக் குழுவிக்கு தலைமை வகிக்கும் சுஷ்மா சுவராஜ் தெரிவித்திருந்தார்.

(அ-2)

# பெண்களுக்கு விளக்கமறியல்

(கொழும்பு)

கர்ப்பிணிகள் போல் வேசமிட்டு பெருந்தொகை கொக்கெயின் போதை மாத்திரைகளை விழுங்கிய நிலையில் கட்டுநாயக்க விமான நிலையம் வந்தடைந்த தாய்லாந்து பெண்கள் இருவரும் தற்போது விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

நீர்கொழும்பு வைத்தியசாலையில் சுமார் ஏழு நாட்களாக அனுமதிக்கப்பட்டிருந்த நிலையிலேயே மேற்படி இரு பெண்களினதும் வயிற்றுக்குள்ளிருந்து 162 கொக்கெயின் மாத்திரைகள் படிப்படியாக வெளியேற்றப்பட்டுள்ளன.

இருவரினதும் வயிற்றுக்குள்ளிருந்தும் மீட்கப்பட்ட கொக்கெயின் வில்லைகளின் நிறை ஒரு கிலோ மற்றும் 425 கிராமாகுமென்பதனை பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹண ஊர்ஜிதம் செய்தார். இவற்றின் பெறுமதி சுமார் 22.5 மில்லியன் ரூபாவென தெரியவருகின்றது.

(அ-2)

# அமைச்சர் ஹக்கீம் முஸ்லிம்கள் சந்திப்பு

(கொழும்பு)

கட்டாரில் வாழும் இலங்கை முஸ்லிம்களுடன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவரும் நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் சந்திப்பொன்றை மேற்கொள்ளவுள்ளார்.

இச்சந்திப்பு இன்றைய தினம் டோஹாவிலுள்ள பனார் கேட்போர் கூடத்தில் கட்டார் நேரப்படி பிற்பகல் 6.30 மணிக்கு இடம்பெறவுள்ளது என கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஏ.எம்.ஜெமீல் கட்டாரிலிருந்து தெரிவித்துள்ளார்.

சமகால அரசியல், இலங்கையில் முஸ்லிம்களின் நிலை, கட்டாரில் தொழில் புரியும் இலங்கையர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பில் இச்சந்திப்பின் போது கலந்துரையாடப்படவுள்ளது என அவர் குறிப்பிட்டார்.

இச்சந்திப்பில் நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீமுடன் நாடாளுமன்ற உறுப்பினர் பைசால் காசீம், மாகாண கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஏ.எம்.ஜெமீல், அமைச்சரின் இணைப்பு செயலாளர் எம்.சல்மான் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(அ-2)

# யாழ்.நூலகத்தின் அபிவிருத்திக்கு பத்து மில்லியன் ரூபா ஒதுக்கீடு

## ஆளுநரால் வழங்கப்படும் என்கிறார் டக்ளஸ்

யாழ்ப்பாணத்தின் கலை கலாசாரப் பண்பாட்டை பிரதிபலிக்கும் வகையில் புதிய கட்டடங்கள் அமையப்பெற வேண்டுமென பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ். பொது நூலகத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நூலகக் குழு மற்றும் நூலக உத்தியோகத்தர்களுடன் இடம்பெற்ற நூலக அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடலின் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த நூலகத்தின் அபிவிருத்தி மற்றும் மேம்பாட்டுக்காக வடமாகாண ஆளுநர் 10 மில்லியன் ரூபாவை செலவு செய்வதற்கு தயாராக இருப்பதாகவும் அந்நிதியைக் கொண்டு எவ்விதமான அபிவிருத்தியை முன்னுரிமை அடிப்படையில் செய்வது தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

நூலகத்தினது நலன்களிலும் அதன் வளர்ச்சிக்காகவும் எல்லோரும் ஒன்றிணைந்து உழைக்க வேண்டுமென கேட்டுக் கொண்ட அமைச்சர் பாடசாலை மாணவர்களுக்கு வாசிப்பு பழக்கத்தை தூண்டும் வகையில் பிரசாரங்களை முன்னெடுக்க வேண்டியது முக்கியமானது என்றும் சுட்டிக்காட்டினார்.

நூலகத்தின் வெளிப்புறம் மற்றும் உட்புறப் பகுதிகளுக்கு வர்ணம் பூசப்படும் போதும் புதிதாக அமைக்கப்படுகின்ற கட்டடங்களும் யாழ்ப்பாணத்தின் கலை கலாசார பண்பாட்டு விழுமியங்களைப் பிரதிபலிக்கும் வகையில் அமையப் பெறுதல் முக்கியமானது.


அத்துடன் நூலகத்தின் சகல பகுதிகளின் செயற்பாடுகளும் கணனி மயப்படுத்தப்படுவதுடன் நவீனமயப்படுத்தப்பட்டுள்ள சிறுவர் பகுதியின் பயன்பாடுகளை மென்மேலும் விரிவாக்கம் செய்ய வேண்டும்.

குடிபோதையிலும் உல்லாசப் பயணமாக நூலகத்திற்குள் அநாகரிகமாக வருவோரையும் உள்ளே அனுமதிக்க வேண்டாம் எனவும் துறைசார்ந்தோருக்கு பணிப்புரை வழங்கினார்.

(அ-2)







கொக்குவில் மேற்கு சனசமூக நிலையத்தில் இயங்கும் சுப்பிரமணியம் மாலதி முன்பள்ளி சிறார்களுக்கான கணனி பயிற்சி மையத்தின் திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாணிக்கம் சுப்பிரமணியம் நாடாவெட்டி திறந்து வைப்பதையும் அருகில் திருமதி மாலதி சுப்பிரமணியம், கணனிகளை அன்பளிப்புச் செய்த கனடாவில் வசிக்கும் பரா தம்பதிகளின் குடும்பத்தினரான கே.கனகலிங்கம் ஆகியோர் நிற்பதையும் அவர் கணனிகளை இயக்கி வைப்பதையும் படங்களில் காணலாம்




# அம்புலி மாமா கதைகள்

## பவளத் திருடர்கள்



காலை சிற்றுண்டியை உண்ட பின்னர் அலி பாடசாலைக்கு செல்ல தயார் ஆனான். அந்தமான் தீவுகளில் வசித்து வந்த அவன் தினமும் கடற்கரை ஓரமாக நடந்து சென்று பாடசாலையை அடைவது வழக்கம். பாடசாலைக்கு செல்லும் போது



விரைவாக நடக்கும் அலி பாடசாலையிலிருந்து திரும்புகையில் நிதானமாக கடற்கரையோரமாக நடந்து வந்து அங்கு கடற்கரை மணலில் காணப்படும் நண்டுகளையும் கடலில் காணப்படும் மீன்களையும் பார்த்து ரசித்து கொண்டே வருவது வழக்கம்.

ஒரு நாள் பாடசாலையில் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதை பற்றி ஒரு குழுவினர் உரை நிகழ்த்தினர். வெறும் விரிவுரையோடு நிற்காமல், மாணவர்களை கடற்கரைக்கு அழைத்துச் சென்று கடல் வாழ் உயிரினங்களை அவர்களுக்கு காட்டினர். கடற்கரையோரமாக நீரில் அமிழ்ந்திருந்த பவளப்பாறைகளைக் காட்டினர். அப்போது தான், பவளம் என்பது உயிருள்ள ஒரு ஜீவராசி என்பது மாணவர்களுக்குத் தெரிய வந்தது. பவளப்பாறைகளை உயிரற்ற கருங்கல் பாறை என்று அது வரை எண்ணிய மாணவர்கள், அவை பவளப்பூச்சிகளின் ஒடு என்று தெரிந்து கொண்டனர்.

கடல் மனிதகுலத்திற்கு அளித்துள்ள அரும்பெரும் செல்வம் அந்த பவளப்பாறைகள் என்று விளக்கிய சுற்றுச்சூழல் குழுவினர், அவை கடல்நீர் கரையை அரிக்காமல் பாதுகாக்கின்றன என்றும், விளக்கினர். அலிக்கு அவர்கள் கூறியதைக் கேட்க வியப்பாக இருந்தது.

இயற்கை கடலின் மூலம் அந்தமான் தீவுகளுக்கு அளித்திருந்த இணையற்ற செல்வத்தைப் பற்றி அறிந்த அலிக்கு தன் தாய் மண்ணைப் பற்றி கர்வம் உண்டாகியது. குறிப்பாக, பவளப்பாறைகள் தீவுகளுக்கு அரணாக விளங்கிப் பாதுகாக்கின்றன என்று தெரிந்த போது, அவற்றின் மீது பற்றுதல் ஏற்பட்டது. இந்தியாவில் பவளப்பாறைகள் லட்சத்தீவுகள், கட்ச், அந்தமான் நிக்கோபார் ஆகிய மூன்று இடங்களில் மட்டுமே உள்ளது என்றும் தெரிந்து கொண்டான். ஆனால் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குழுவினர் அளித்த மற்றொரு தகவல் அவனுக்கு மன உளைச்சலை ஏற்படுத்தியது. தீவுகளுக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் பவளப்பாறைகளை ஒரு காட்சிப் பொருளாக எண்ணித் தங்களுடன் எடுத்துச் சென்று விடுகின்றனர் என்ற தகவல் அவனை சங்கடப் படுத்தியது. தவிர, தொழிற்சாலைகளின் கழிவுகள் கடல் நீரில் கலப்பதால், பவளம் அழிகிறது என்ற செய்தி அவனுக்கு அதிர்ச்சியை அளித்தது.

தீவுகளுக்கு பாதுகாப்புத் தரும் பவளத்தை நாம் பாதுகாக்க வேண்டும் என்ற அவர்களுடைய அறிவுரை அவன் மனதில் ஆழப்பதிந்தது.

இது நடந்து சில நாட்களுக்குப் பின்னர், ஒரு நாள் வழக்கம்போல அலி பாடசாலைக்கு கடற்கரையோரமாக நடந்து சென்று கொண்டிருந்த போது ஒரு வெண்மைநிற சிற்றுந்து அங்கே நின்றிருக்க கண்டான். சிற்றுந்தின் பின்புறக் கதவை திறந்து மூன்று ஆட்கள் எதையோ அதற்குள் திணித்துக் கொண்டிருந்தனர். அருகில் சென்று கவனித்த அவனுக்கு தூக்கி வாரிப் போட்டது.எவற்றை அந்தமான் தீவுகளின் கவசம் என்று கருதினானோ, அந்தப் பவளப்பாறைகளைத் தான் அந்த மூவரும் திருட்டுத் தனமாக தங்கள் சிற்றுந்தில் எடுத்துச் செல்ல முயன்று கொண்டிருந்தனர். அதை தடுக்க அவன் முயற்சித்த போது மூவரில் ஒருவன் அவனை குத்தி தரையில் தள்ளி விட்டு மூவரும் சிற்றுந்தில் ஏறிப் புறப்பட்டு விட்டனர்.

தன் தாய் மண்ணின் கவசப் பொருளான பவளத்தை திருடிச் செல்லும் அவர்களை சும்மா விடக் கூடாது என்று எண்ணி பாடசாலைக்கு போகும் எண்ணத்தை கைவிட்டு மூச்சிரைக்க தன் கிராமத்திற்கு ஓடினான்.

தனக்கு தெரிந்த மலிகைக் கடைக்காரரிடம் அவருடைய சைக்கிளை இரவல் வாங்கிக் கொண்டு தொலைபேசி வசதி உள்ள பக்கத்து கிராமத்திற்கு சைக்கிளில் வேகமாக சென்றான். அங்கு சென்றதும் தன் பையை திறந்து குறிப்பு புத்தகத்தில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குழுவினரின் தொலைபேசி எண்ணைப் பார்த்து அவர்களுடன் தொடர்பு கொண்டான். அவர்களிடம் பவளத் திருடர்களை பற்றி கூறி அவர்கள் பயணம் செய்த வெண்மை நிற சிற்றுந்தின் அடையாளங் களையும் அந்த மூன்று திருடர்களின் அடையாளங்களையும் விபரித்தான். அதன் பின்னரே அவன் நிம்மதி அடைந்தான்.

மறுநாள் அலி வகுப்பில் இருந்த போது தலைமை ஆசிரியர் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குழுவினருடன் அவன் வகுப்பில் நுழைந்தார். அவர்களைத் தவிர சில அரசாங்க அதிகாரிகளும் பத்திரிகை நிருபர்களும் உடன் வந்தனர். அவர்கள் யாவரும் அலியை தேடி வந்திருந்தனர். பாதுகாப்பு குழுவினரில் ஒருவர் முதல் நாள் நடந்த நிகழ்ச்சிகளை வகுப்பிலுள்ள மாணவர்களுக்கு விபரித்தார். பவளத் திருடர்களை கண்டது முதல் அலி இறுதியாக அவர்களை பற்றிய தகவல் அளித்தவரை நடந்த நிகழ்சிகள் அனைத்தையும் விளக்கினர். உடனே அவர்கள் பொலிஸ் நிலையத்தை தொடர்பு கொள்ள அலி தந்த அடையாளங்களின் உதவி கொண்டு அந்த சிற்றுந்து வழி மறிக்கப்பட்டு மூவரும் கைது செய்யப்பட்டனர்.



யாவற்றையும் விளக்கிய பின்னர் தலைமை ஆசிரியரும் பிற அதிகாரிகளும் அலியை பாராட்ட மாணவர்கள் அனைவரும் கைதட்டி குதூகலித்தனர். எனக்கு இது ஒரு முக்கியமான நாள்! ஆனால் என்னை விட நமது அந்தமானின் பவளப் பாறைகளுக்கு அதிமுக்கியமான நாள்! என்றான் அலி.

# ஈரானிடமிருந்து எரிபொருள் இறக்குமதி குறைக்கப்படும்

## அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

ஈரானிடமிருந்து தற்போது இறக்குமதி செய்யப்படும் எரிபொருட்களின் அளவு வெகுவாகக் குறைக்கப்படவுள்ளதாக பெற்றோலிய அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவினால் ஈரான் மீது பிறப்பிக்கப்பட்ட பொருளாதாரத் தடையை கருத்திற்கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஈரானிடமிருந்து எரிபொருள் இறக்குமதி செய்யும் நாடுகளுக்கு அமெரிக்கா எதிர்வரும் ஜூன் மாதம் 28 ஆம் திகதி வரையில் கால அவகாசம் வழங்கியுள்ளது.

இதன் அடிப்படையில் ஈரானிடமிருந்து இறக்குமதி செய்யப்படும் எரிபொருளின் அளவை வெகுவாகக் குறைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதுவரை காலமும் இலங்கை பாரியளவிலான எரிபொருளை ஈரானிடமிருந்து இறக்குமதி செய்து வருகின்றது. ஆயினும் ஈரானிடமிருந்து எரிபொருள் இறக்குமதி செய்யப்பட்டால் அமெரிக்காவின் நெருக்கடிகளை எதிர்நோக்க நேரிடும். எனவேதான் அமெரிக்க டொலர்களினால் கொடுப்பனவுகளை செய்ய முடியாத காரணத்தினால் எரிபொருள் இறக்குமதி செய்வதற்கு அதிகளவு பணம் செலவிட நேரிட்டுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# தமிழக மீனவர்கள் தாக்கப்படவில்லை

## தமிழக சட்டசபை ஒப்புதல்

இலங்கை கடற்படையினரால் கடந்த ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதி இந்திய மீனவர்கள் தாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டை தமிழ் நாட்டு அரசாங்கம் மறுத்துள்ளது.

ஒரு சில ஊடகங்கள் இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் தாக்கப்பட்டதாக செய்திகள் வெளியிட்டிருந்தன. இந்தக் குற்றச்சாட்டு தொடர்பில் நடத்திய விசாரணைகளிலிருந்து இதில் எந்தவிதமான உண்மையும் இல்லையென்பது தெளிவாகியிருப்பதாக தமிழ் நாட்டு மீன்பிடித்துறை அமைச்சர் கே.ஏ. ஜெயபால் சட்டசபையில் தெரிவித்துள்ளார்.

அவ்வாறான சம்பவங்கள் எதுவும் இடம்பெறவில்லை. 504 மீன்பிடிப்படகுகளும் ஏப்ரல் 3 ஆம் திகதி கரை திரும்பியிருந்தன. எந்தப் படகுகள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் தாக்கப்படுவதாகத் தொடர்ந்தும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வரும் நிலையில் இக்குற்றச்சாட்டு பொய்யானதென தமிழக சட்டசபையில் தமிழக அரசாங்கம் அறிவித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (அ-2)

# டிரக்டர் கவிழ்ந்ததில் சாரதி உயிரிழப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, பட்டிப்பளை பிரதேசத்தில் ஆற்றுப்பகுதியில் ட்ரக்டர் கவிழ்ந்ததில் அதன் சாரதி உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினமிரவு 7 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இதன் போது பழுகாமம், காந்திநகரைச் சேர்ந்த சிவநேசராசா கோகுலராஜா (வயது 27) என்ற இளம் குடும்பஸ்தரே உயிரிழந்துள்ளார்.

கற்சேனையில் பகுதியில் உள்ள ஆறு ஒன்றில் ட்ரக்டர் ஒன்று தடம் புரண்டபோது இவ் அனர்த்தம் நிகழ்ந்துள்ளது. இதன் போது நீரில் மூழ்கி குறித்த நபர் மரணித்துள்ளதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (அ-2)

# கணக்காய்வாளர் திணைக்களத்தை சீர்குலைப்பதற்கு சிலர் முயற்சி

## குமுறுகிறார் கணக்காய்வாளர் நாயகம்

(கொழும்பு)

கணக்காய்வாளர் நாயகத்திணைக்களத்தின் நடவடிக்கைகளை சீர்குலைக்கவும் அத்திணைக்களத்தை அவமானத்துக்கு உட்படுத்தவும் சதி முயற்சிகள் இருப்பதாக கணக்காய்வாளர் நாயகம் எச். ஏ.எஸ் சமரவீர தெரிவித்துள்ளார்.

கணக்காய்வாளர் நாயகத் திணைக்களத்தில் கடமையாற்றிய போது ஒழுக்காற்று நடவடிக்கையின் பேரில் வேலையிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்ட ஓர் அதிகாரியும் தனியார் தொலைக்காட்சி சேவை ஒன்றைப் பயன்படுத்தி அநுராதபுர பகுதியில் தோல்வியுற்ற மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர் ஒருவரும் இதற்கு துணையாக இருந்துள்ளதாகவும் சமரவீர தெரிவித்துள்ளார்.

சிறிய விபரங்களை தயாரித்தமை, இலஞ்சம் வாங்கியமை மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் காரணமாக பிரஸ்தாப அதிகாரி கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டு சேவையில் இருந்தும் விலக்கப்பட்டுள்ளார்.

கணக்காய்வாளர் நாயகம் திணைக்களம் சுதந்திரமான நிறுவனமாகும். இதுவரை இத்திணைக்களம் அவமானத்துக்கு உள்ளாகவில்லை, அவமானப்படவில்லை. திணைக்களத்தின் கௌரவத்துக்கு களங்கம் ஏற்படுத்தி மோசடி செய்தமை காரணமாகவே இந்த அதிகாரி வேலையிருந்து இடைநிறுத்தப்பட்டார்.

தற்போதைய அரச கணக்காய்வு பணிகளை பலப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ள இவ்வேளையில் அதனை சீர்குலைக்க இவ்வாறு சதி மேற்கொள்ளப்படுவதாக கணக்காய்வாளர் நாயகம் கூறியுள்ளார். (அ-2)

# வவு.தெற்கு கல்விவலய பெண்களுக்கான பெருவிளையாட்டுப்போட்டி முடிவுகள்

(பூந்தோட்டம்)

வவுனியா தெற்கு கல்வி வலய பெண்களுக்கான பெரு விளையாட்டுப் போட்டிகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்கள் வருமாறு,

**19 வயதின் கீழ் பிரிவு**

**எல்லே**

வ/மடுகந்த ம.வி, வ/ இறம்பைக்குளம் மகளிர் ம.வி, வ/பூவரசங்குளம் ம.வி

**கபடி**

வ/ பாவற்குளம் கணேஸ்வரா ம.வி, வ/ பறக்கும் ம.வி, வ/மடுகந்த ம.வி

**வலைப்பந்து**

வ/ சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, வ/ நெளுக்குளம் கலைமகள் ம.வி,வ/ இறம்பைக்குளம் மகளிர் ம.வி

**கரப்பந்து**

வ/ மடுகந்த ம.வி, வ/சைப்பிரகாச மகளிர் கல்லூரி, வ/ இறம்பைக்குளம் ம.வி

**கூடைப்பந்து**

வ/ சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, வ/ இறம்பைக்குளம் ம.வி

**கிரிக்கெட்**

வ/ இறம்பைக்குளம் ம.வி, வ/ சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, வ/ பாவற்குளம் கணேஸ்வரா ம.வி

**மேசைப்பந்து**

வ/ இறம்பைக்குளம் ம.வி, வ/ வவுனியா தமிழ் மத்திய ம.வி, வ/அல் இக்பால் முஸ்லிம் வித்தி

**செஸ்**

வ/ வவுனியா தமிழ் மத்திய ம.வி, வ/ இறம்பைக்குளம் மகளிர் ம.வி

**பூப்பந்து**

வ/ சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, வ/ இறம்பைக்குளம் மகளிர் ம.வி, வ/ அல் இக்பால் முஸ்லிம் வித்தி

**கரம்**

வ/ இறம்பைக்குளம் மகளிர் ம.வி, வ/ சைவப்பிரகாச மகளிர் கல்லூரி

**15 வயதின் கீழ்ப்பிரிவு**

**கபடி**

வ/ பூவரசங்குளம் ம.வி, வ/ பாவற்குளம் கணேஸ்வரா ம.வி

**வலைப்பந்து**

வ/ சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, வ/ அண்ணாநகர் பரமேஸ்வரா வித்தி, வ/ இறம்பைக்குளம் ம.வி

**கரப்பந்து**

வ/தர்மபால் வித்தி, வ/ இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி,வ/வவுனியா தமிழ் மத்திய. ம.வி

**செஸ்**

வ/ இறம்பைக்குளம் மகளிர் ம.வி, வ/ சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, வ/வவுனியா தமிழ் மத்திய. ம.வி

**பூப்பந்து**

வ/இறம்பைக்குளம் மகளிர் ம.வி, வ/அல் இக்பால் முஸ்லிம் வித்தி, வ/ வவுனியா முஸ்லிம் ம.வி

**கரம்**

வ/ அல் இக்பால் முஸ்லிம் வித்தி, வ/ சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, வ/ இறம்பைக்குளம் மகளிர் ம.வி

**17 வயதின் கீழ்ப்பிரிவு**

**வலைப்பந்து**

வ/ சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, வ/ இறம்பைக்குளம் மகளிர் ம.வி, வ/ பெரிய கோமரசன்குளம் ம.வி

**கரப்பந்து**

வ/சிறிசுமண ம.வி, வ/தர்மபால வித்தி, வ/முதலியார் குளம் றோ.க. த.க. பாடசாலை (அ-266)

# பொதுக்கூட்டம் ஒத்திவைப்பு

யாழ்.மத்திய கல்லூரி பழைய மாண வர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளதாக தலைவர் என்.இராஜதேவன் அறிவித்துள்ளார்.

மேற்படி பொதுக்கூட்டம் கடந்த 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்து தவிர்க்கமுடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-9)

# மீள்குடியேறிய மக்களை பதிவு செய்யும் நடவடிக்கை



கடந்த 1990 ஆம் ஆண்டு இடம்பெற்ற யுத்தத்தின் போது இடம்பெயர்ந்து மீண்டும் மீள்குடியேறிய மக்களின் விபரங்களை சேகரிக்கும் நிகழ்வு மன்னார் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் காலை மன்னார் அல் அஸ்ஹர் ம.வி. நவோதய பாடசாலையில் இடம்பெற்றது.

மன்னார் பிரதேச செயலாளர் திருமதி ஸ்ரான்லி டி. மேல் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் 1990 ஆம் ஆண்டு இடம்பெற்ற யுத்தத்தின் போது இடம்பெயர்ந்த நிலையில் மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் குடியமர்ந்துள்ள ஆயிரக்கணக்கான மக்கள் தமது பதிவுகளை மேற்கொண்டுள்ளனர். (அ-2)

# வந்தது டிஜிற்றல் யுகம் தந்தது உளப் பாதிப்பு

(கொழும்பு)

அபிவிருத்தி அடைந்த நாடுகளைப் போன்றே தற்போது இலங்கையிலும் கணனி விளையாட்டுக்களினால் பல்வேறு பாதிப்புக்கள் ஏற்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக இளம் தலைமுறையினர் டிஜிற்றல் யுகத்திற்கு தங்களை அடிமையாக்கிக் கொண்டுள்ளனர். கணனி விளையாட்டுக்கள் மற்றும் இணைய பயன்பாடு இளம் தலைமுறையின் ஆக்கத்திறன்களையும் கலாசார விழுமியங்களையும் பறித்துச் சென்றுள்ளது.

குறிப்பாக நகரப் பகுதிகளில் மட்டுமன்றி கிராமப் பகுதிகளிலும் கணனி விளையாட்டுக்கள் மீது இளம் தலைமுறையின் மோகம் அபரிமிதமான அளவில் வளர்ச்சியடைந்துள்ளது. கணனி சார் அறிவு நாட்டின் அபிவிருத்திக்கும் தனி மனித வளர்ச்சிக்கும் மிகவும் முக்கியமானது என்பதனை மறுப்பதற்கில்லை.

எனினும் தற்போதைய இளம் சமூகத்தினர் கணனியை எவ்வாறு பயன்படுத்துகின்றனர் என்பதில் சிக்கல் நிலைமை காணப்படுகின்றது.

இளைஞர், யுவதிகள் மட்டுமன்றி பாடசாலை மாணவர்களும் கணனியை பொழுதுபோக்கு நோக்கத்திற்காகவே அதிகளவில் பயன்படுத்துகின்றனர் என்பது வருத் தத்திற்குரியது.

இலங்கையின் சில நகர் பகுதிகளில் பத்து வீதமான சிறுவர், சிறுமியர் கணனி விளையாட்டுக்களில் கொண்டுள்ள அதீத ஆர்வத்தினால் ஏதேனும் ஓர் வகை உளப் பாதிப்பினை எதிர்நோக்கி வருவதாக அண்மைய புள்ளி விபர ஆய்வுத் தகவல்கள் சுட்டிக்காட்டுகின்றன.

கணனி விளையாட்டு மற்றும் இணைய பயன்பாட்டுக்கு அடிமையாகும் பல நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்து வருவதாக கிரிபத்கொட ஆதார வைத்தியசாலையின் மனநல மருத்துவர் என்.குமார நாயக்க தெரிவித்துள்ளார்.

போதைப் பொருள், பயன்பாடு இணைய மற்றும் கணனி விளையாட்டுக்கு அடிமையாதல் போன்றவற்றை ஓர் உள நலக் குறைபாடாகவே கருதப்பட வேண்டுமென குறிப்பிடுகின்றார். கணனி மீதான மோகம் சிறுவர், சிறுமியரின் அன்றாட வாழ்க்கைச் சக்கரத்தை மோசமாக பாதிக்கின்றது.

குறிப்பாக உணவு உட்கொள்ளல், குளித்தல் உள்ளிட்ட அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள வேண்டும் என்ற எண்ணம் கூட சிலருக்கு இல்லாமப் போகக் கூடிய ஆபத்து ஏற்பட்டுள்ளது.

கணனி விளையாட்டுக்களில் நீண்ட நேரம் ஈடுபடுவோர் அதிக கோபம், உடல்அயற்சி, அழுத்தம், மன உளைச்சல், தலைவலி உள்ளிட்ட பல்வேறு நோய்களினால் பீடிக்கப்படுகின்றனர் என அவ்வைத்தியசாலை வட்டாரம் தெரிவிக்கின்றது.

(அ-2)

# ஆசிய பாதுகாப்பு மாநாடு மலேசியாவில் ஆரம்பம்

(கொழும்பு)

மலேசியாவில் நடைபெறும் 13 ஆவது ஆசிய பாதுகாப்பு சேவைகள் மற்றும் கண்காட்சியில் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜகத் ஜெயசூரிய, விமானப் படை தளபதி எயார் மார்ஷல் ஹர்டி அபே விக்ரம ஆகியோர் கலந்து கொண்டுள்ளனர்.

மலேசியாவின் தலைநகரான கோலாலம்பூரில் நடைபெற்ற இந்த மாநாட்டில் 45 நாடுகளை சேர்ந்த தளபதிகள் மற்றும் பாதுகாப்பு துறை முக்கியஸ்தர்கள் பலர் கலந்து கொண்டனர்.

மேற்கு மற்றும் கீழைத்தேய நாடுகளின் கலந்து கொள்ளும் இந்த மாநாட்டில் பங்குகொண்ட இலங்கை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜகத் ஜெயசூரிய மலேசிய இராணுவத்தளபதி ஜெனரல் தத்துக்ஹாஜி சுல்கிப்ளி ஹாஜி செய்னுல் அப்டினை சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தியுள்ளார்.

இரு நாட்டு தளபதிகளுக்கும் இடையில் இடம்பெற்ற இந்த நல்லெண்ண சந்திப்பின் போது இரு தளபதிகளும் ஞாபக சின்னங்களை பரிமாறிக் கொண்டதுடன் இரு தரப்பு விடயங்கள் தொடர்பாக பேச்சு வார்த்தை நடத்தியுள்ளனர்.

இதேவேளை இந்த மாநாட்டில் பங்குகொண்ட அவுஸ்திரேலிய இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் டேவிட் மொரஷனன இலங்கை இராணுவத் தளபதி சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு இந்த சந்திப்பின் போது இலங்கை இராணுவத்தளபதி அவுஸ்திரேலிய இராணுவத் தளபதிக்கு அழைப்பு விடுத்துள்ளார். (அ-2)

# குவைத்தில் இலங்கையர் சடலம்

குவைட் பஹறஹீல் பகுதியில் இலங்கையர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இணையத்தளம் ஒன்று இந்த செய்தியை வெளியிட்டுள்ளது.

சடலத்தை மீட்ட பொலிஸார் மேலதீக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். அவர் இன்னும் அடையாளம் காணப்படாத நிலையல் அவரது சடலத்தை இலங்கைக்கு அனுப்புவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)




★ 1587-ஸ்பானிய போர்க் கப்பலை சேர் பிரான்சிஸ் டிரேக் மூழ்கடித்தார்.

★ 1775-அமெரிக்கப் புரட்சிப் போர் ஆரம்பித்தது.

★ 1810-வெனிசுவேலாவில் இராணுவ ஆட்சி நிறுவப்பட்டது.

★ 1861-அமெரிக்க உள்நாட்டுப் போர்: மேரிலாந்தின் பால்ட்டிமோர் நகரில் கூட்டமைப்பின் ஆதரவாளர்களினால் ஐக்கிய அமெரிக்கப் படைகள் தாக்கப்பட்டன. நான்கு படையினரும் 12 பொது மக்களும் உயிரிழந்தனர்.

★ 1892-ஐக்கிய அமெரிக்காவில் முதன் முதலில் தானுந்து ஒன்றை சார்ல்ஸ் டுரியா என்பவர் மசாசுசெட்சில் ஸ்ப்றிங்ஃபீல்ட் என்ற இடத்தில் செலுத்தினார்.

★ 1902-குவாத்தமாலாவில் 7.5 ரிக்டர் நிலநடுக்கம் தாக்கியதில் 2 ஆயிரம் பேர் உயிரிழந்தனர்.

★ 1904-கனடாவின் டொரண்டோ நகரத்தின் பெரும் பகுதிகள் தீயினால் அழிந்தன.

★ 1928-ஒக்ஸ்போர்ட் ஆங்கில அகராதியின் 125 ஆவதும் கடைசியுமான தொகுதி வெளிவந்தது.

★ 1936-பாலஸ்தீனர்களின் ஆங்கிலேயர்களுக்கெதிரான முதலாவது கிளர்ச்சி தொடங்கப்பட்டது.

★ 1954-உருது மற்றும் வங்காள மொழி ஆகியன பாகிஸ்தானின் தேசிய மொழிகளாக அறிவிக்கப்பட்டன.

★ 1971-முதலாவது விண்வெளி ஆய்வு கூடமான சோவியத் ஒன்றியத்தின் சல்யூட் 1 விண்ணுக்கு அனுப்பப்பட்டது.

★ 1975-இந்தியாவின் முதலாவது செய்மதி ஆரியபட்டா விண்ணுக்கு ஏவப்பட்டது.

★ 1989-அமெரிக்காவின் அயோவா என்ற கப்பலில் பீரங்கி மேடை ஒன்று வெடித்ததில் 47 கடற்படையினர் உயிரிழந்தனர்.

★ 1993-ஐக்கிய அமெரிக்கா டெக்சாசில் டாவிடியன் என்ற மதக்குழு ஒன்றின் கட்டடத்தை 51 நாட்களாக சுற்றி வளைத்த அமெரிக்க FBI இன் முற்றுகை கட்டடம் தீப்பற்றியதில் முடிவுக்கு வந்தது. 81 பேர் உயிரிழந்தனர்.

★ 1995-அமெரிக்காவின் ஒக்லகாமா நகரத்தில் நடுவண் அரசுக் கட்டடம் ஒன்று தீவிரவாதிகளின் குண்டுத்தாக்குதலுக்கு இலக்கானதில் 168 பேர் உயிரிழந்தனர்.

★ 1999-ஜேர்மனியின் நாடாளுமன்றம் பெர்லின் நகருக்கு மாற்றப்பட்டது.

★ 2006-நேபாளத்தில் மன்னராட்சியை எதிர்த்து பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

### பிறப்புக்கள்

★ 1832-ஜொசே ஐசாகிர், நோபல் பரிசு பெற்ற எழுத்தாளர் (இ.1916)

★ 1912-கிளென் சீபோர்க், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க வேதியியலாளர் (இ.1999)

★ 1957-முகேஷ் அம்பானி, இந்தியாவின் தொழிலதிபர்

### இறப்புக்கள்

★ 1906-பியரி கியூரி, நோபல் பரிசு பெற்றவர் (பி.1859)

★ 1998-ஒக்டாவியோ பாஸ், நோபல் பரிசு பெற்ற மெக்சிக்கோ எழுத்தாளர் (பி.1914)

### சிறப்பு நாள்


★ சியெரா லியொன்-குடியரசு தினம் (1971)



★ 1882-பரிணாமக் கோட்பாட்டைக் கண்டுபிடித்த சார்ல்ஸ் டார்வின் நினைவு தினம் (பி.1809)

# அதிசய உலகம்...

## வீட்டு மொட்டை மாடியில் தரையிறங்கிய ஹெலிகொப்டர்



இந்திய மாநிலமான கர்நாடகாவில் பெங்களூரில் தொழில் நுட்பக் கோளாறு காரணமாக ஹெலிகொப்டர் ஒன்று மிக அவசரமாக வீட்டின் மொட்டை மாடியில் தரை இறக்கப்பட்டது.

பெங்களூரைத் தலைமையகமாக கொண்டு செயற்படும் இந்துஸ்தான் ஏரோனாடிக்ஸ் லிமிடெட் நிறுவனம் ஆசியாவின் மிகப் பெரிய வான்வெளித் தொழில் துறை நிறுவனமாகும். இந்நிறுவனமே தெற்காசியாவின் முதல் போர் விமானத்தை உருவாக்கியது. இதற்கு நாசிக். லக்னோ ஐதராபாத் ஆகிய இடங்களிலும் தயாரிப்பு ஆலைகள் உள்ளன.

இந்த நிறுவனத்தில் ஹெலிகொப்டர்கள் மற்றும் போர் விமானங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. அவ்வாறு தயாரிக்கப்பட்ட ஒரு பயிற்சி ஹெலிகொப்டரை ஒரு பைலட் மற்றும் துணை பைலட் ஆகியோர் செலுத்தினர்.இதில் திடீரென தொழில் நுட்பகோளாறு ஏற்பட்டதால் அவசரமாக தரையிறக்க வேண் டிய சூழ்நிலை உருவானது. இதனை தொடர்ந்து பெங்களூரில் ஒரு வீட்டின் மொட்டை மாடியின் மேல் தரை இறக்கினர்.

உடனடியாக பைலட் மற்றும் துணை பைலட் பத்திரமாக தரையிறங்கினர். இதனால் பெரும் விபத்து தவிர்க்கப்பட்டது மட்டுமன்றி எந்த விதமான சேதமும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## கின்னஸ் சாதனை புத்தகத்தில் பதிவான திருமண அல்பம்



திருமண ஒப்பந்த நிறுவனமான பாரத் மட்ரி மோனியல் சார்பில் திருமண அல்பம் ஒன்று தயாரிக்கப்பட்டு கின்னஸ் சாதனை படைக்கப்பட்டுள்ளது. இது குறித்து மட்ரி மோனியல் நிறுவுநரும் தலைமை செயல் இயக்குநருமான ஜானகிராம் கூறியதாவது, ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 14 ஆம் திகதி மட்ரி மோனியல் தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது. இந்த ஆண்டு வித்தியாசமாக கொண்டாடப்பட வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது. இதற்காக 15 பேர் கொண்ட குழுவினர் சுமார் ஆயிரத்து 600 மணி நேரம் செலவழித்து இரண்டு வாரகால உழைப்பில் இவை தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் பாரத் மட்ரிமோனியல் நிறுவனம் மூலம் திருமணமானவர்கள் மட்டுமே கலந்துகொள்ள வேண்டும் என நிபந்தனை மட்டும் விதிக்கப்பட்டது. மொத்தம் 12 ஆயிரத்து 288 அல்பங்கள் பெறப்பட்டு 256 அல்பங்கள் மட்டுமே தெரிவுசெய்யப்பட்டன.

16 பக்கங்களுடன் ஆயிரம் கிலோ எடையுடன் 4 ஆயிரத்து 300 சதுர அடி பரப் ளவுடன் 13 அடி அகலம் மற்றும் 17 அடி நீளத்துடன் இந்த திருமண அல்பம் தயாரிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2008 ஆம் ஆண்டு யூன்10 ஆம் திகதி தயாரிக்கப்பட்டு ஜான்சன்ஸ் பேபி அல்பமே சாதனையாக இருந்து வருகிறது குறிப்பிடத்தக்கது.


## விநோதமான இடத்தில் தோற்றமளிக்கும் அரசமரம்



ஒவ்வொரு தாவரங்களின் விதைகளிலிருந்து அதே தாவரங்களே உற்பத்திகளாகும் என்பது யாவரும் அறிந்த ஒரு விடயமே ஆனால் இங்கு சற்று விநோதமாக தேங்காயில் இருந்து தென்னை முளைப்பதற்கு பதிலாக அரசமரம் முளைத்திருக்கின்றது.

அவ்வாறு அரசமரத்திற்கு தன்னை விட்டுக்கொடுத்த தேங்காயையும் அதில் முளைத்திருக்கும் அரசமரத்தினையும் படத்தில் காணலாம்.

## உலகிலேயே முதலாவது இயந்திர சிறைக்காவலன் தென் கொரியாவில்



தென்கொரியாவில் உள்ள சிறைச்சாலை ஒன்றிற்கு சோதனை முயற்சியாக உலகில் முதல் இயந்திர மனித சிறைக்காவலன் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த இயந்திர மனித சிறைக்காவலனில் பொருத்தப்பட்டுள்ள முப்பரிமாண ஒளிப்படக்கருவி சிறைக் கைதிகளைக் கண்காணிப்பதுடன் இதில் பொருத்தப்பட்டுள்ள மற்றைய கருவிகளும் இதற்கான விசேட மென்பொருளுடன் இணைந்து கைதிகளின் நடவடிக்கைகளை கண்காணித்து அவர்களின் உணர்வுகளின் அடிப்படையில் உடல் வெப்ப நிலையை அவதானித்து ஆபத்தான நிலைகளை சிறைச்சாலையின் தலைமையகத்திற்கு அனுப்புகின்றது.

கண்காணிப்பிற்காக இந்த இயந்திர மனிதன் சுற்றி வரும் வேகம் ஒரு மனிதனின் நடை வேகத்திற்கு சமமாக அமைக்கப்பட்டுள்ளது. இதனை ipad மூலமாக கட்டுப்படுத்தக் கூடியதாகவும் ஆபத்தான நிலையில் கைதிகளுடன் தொடர்பை மேற்கொள்ளக்கூடியதாகவும் அமைக்கப்பட்டுள்ளது.

இதன் மின்கலத்தில் மின்சக்தி குறையும் பட்சத்தில் அதற்கான சிறைச்சாலையில் ஆங்காங்கே அமைக்கப்பட்டுள்ள மின்னூட்டி நிலையங்களுடன் தானாகவே இணைத்துக்கொண்டு மின்சக்தியை சேகரித்துக் கொள்கின்றன.

## கைபேசிகளை துப்புரவு செய்யும் சவர்க்காரங்கள்



நாம் அன்றாடம் பயன்படுத்தும் பொருட்களில் ஒன்றாக இடம்பிடித்துவிட்ட கைபேசிகள் அவற்றின் தொடர்ச்சியான பாவனையின் காரணமாக தூசுபடிதல், அழுக்கடைதல் போன்ற ஒவ்வாத செயற்பாடுகளுக்கு உட்படுகின்றன. இச்சந்தர்ப்பத்தில் அநேகமானவர்கள் அவற்றை துப்புரவு செய்வதற்கு பயன்படுத்தப்படும் பொருட்கள் கைபேசிகளை மேலும் பழுதடையச் செய்துவிடலாம் . இதை உணர்ந்த விஞ்ஞானிகள் கைபேசிகளை துப்புரவு செய்வதற்கான சவர்க்காரத்தை அறிமுகப்படுத்தியுள்ளனர்.

# தமிழர்களின் அரசியல் விருப்புக்கு மாறாக அபிவிருத்தி மாயை தோற்றுவிக்கப்படுகிறது

## இந்தியக்குழு விளங்கிக் கொள்ள வேண்டும்

(கொழும்பு)

இந்திய நாடாளுமன்ற குழுவினர் இலங்கை அரசின் நிகழ்ச்சி நிரலுக்குள் தங்கள் பயணத்தை மட்டுப்படுத்தாமல் போரினால் பாதிக்கப்பட்ட மக்களை சந்திப்பதற்கு முக்கியத்துவம் வழங்க வேண்டும் என நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் வலியுறுத்தியுள்ளது.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள இந்திய நாடாளுமன்றக் குழுவின் பயணம் தொடர்பில் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசியல் வெளிவிவகாரத்துறை அமைச்சரின் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

இவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் நடைபெற்ற போரில் உறவுகள் உட்பட அனைத்தையும் இழந்து ஏதிலிகளாக இருக்கும் தமிழ் மக்களை இன்னமும் இராணுவமயப்படுத்தப்பட்ட அச்சுறுத்தல் சூழலில் இரண்டாந்தர குடிமக்களாக வாழ நிர்ப்பந்தித்துக் கொண்டு அனைத்துலக பிரதிநிதிகளை அழைத்து இலங்கை தீவில் நல்லிணக்கம் மலர ஆரம்பித்து விட்டதாக காண்பிப்பதை ஒரு துறைசார் செயற்பாடாகவே செய்து வருகின்றது.

இந்நிலையில் பா.ஜ.க தலைவர் சுஷ்மா சுவராஜ் தலைமையில் தமது பயணத்தை ஆரம்பித்துள்ள இந்திய நாடாளுமன்ற குழுவினர் இலங்கை அரசின் நிகழ்ச்சி நிரலுக்குள் தங்கள் பயணத்தை மட்டுப்படுத்தாமல் இந்தக்குழுவில் பங்குபற்ற மறுத்த கட்சிகள் தெரிவித்த நியாயமான காரணங்களை புரிந்து கொண்டு பாதிக்கப்பட்ட தமிழ் மக்களை நேரடியாக சந்திப்பதற்கு முக்கியத்துவம் கொடுப்பதுடன் அங்கு இடம்பெற்ற கொடிய இனவழிப்பு போரின் சுவடுகளை நேரில் பார்வையிட்டு உண்மை நிலையை வெளிக்கொண்டு வரவேண்டும் என்றும் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் எதிர்பார்க்கிறது.

தமிழ் மக்களின் அரசியல் இருப்புக்கு மாற்றீடாக அபிவிருத்தி என்ற மாயையை இலங்கை அரசாங்கம் முன்னிலைப்படுத்துவதை இந்திய நாடாளுமன்ற குழுவினர் புரிந்து கொள்ள வேண்டும் என்றும் நாடுகடந்த அரசாங்கம் வேண்டிக் கொள்கிறது.

இலங்கைத் தீவில் உண்மையான அமைதி திரும்ப வேண்டுமென்றால் தமிழ் மக்கள் எதற்காக அரசியல் ரீதியாகவும் ஆயுதமேந்தியும் போராடினார்களோ அந்த நியாயமான கோரிக்கைகளை இலங்கை அரசாங்கமும் அரசியல்வாதிகளும் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள தயாராக இல்லை என்ற உண்மையையும் அவர்கள் தொடர்ந்தும் சர்வதேசத்தை ஏமாற்றி தமிழ் மக்களின் இருப்பையும் வரலாற்றையும் இலங்கைத் தீவில் இருந்து துடைத்தழிக்கும் இன ஒதுக்கல் மற்றும் இனஅழிப்பு கொள்கைகளையே தங்களது மூலோபாயக் கொள்கைகளாக கொண்டுள்ளார்கள் என்பதையும் இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்களது பல்தரப்பு சந்திப்புக்கள் மூலம் புரிந்து கொண்டு அதை இந்திய அரசுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் தெரியப்படுத்த வேண்டும் என்றும் நாடுகடந்த அரசாங்கம் வேண்டிக் கொள்கிறது.

எனினும் இலங்கைத்தீவில் இடம்பெற்ற தமிழின படுகொலைக்கான நீதி சுயாதீனமானதும் அனைத்துலக நியமனங்களை தழுவியதுமான ஒரு பொறிமுறையின் ஊடான விசாரணைகள் மூலமாகவே கிடைக்கும் என்பதிலும் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ளது. என அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ-2)

# கட்டட நிர்மாணங்களின் போது பூமியதிர்வு குறித்து கவனம் தேவை

## தேசிய கட்டட ஆய்வு அமைப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் காலங்களில் கட்டட நிர்மாணத்தில் ஈடுபடுவோர் பூமியதிர்வு குறித்தும் கவனம் செலுத்த வேண்டுமென தேசிய கட்டட ஆய்வு அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

பூமியதிர்வுகளினால் கட்டடங்களுக்கு ஏற்படக் கூடிய பாதிப்புக்கள் குறித்தும் கவனம் செலுத்தப்பட வேண்டியது அவசியமானது என தெரிவித்துள்ளது.

இலங்கை உள்ளிட்ட உலகின் எந்தவொரு பாகத்திலும் பூமியதிர்வு ஏற்படக்கூடும் எனவும் இதனால் பூமியதிர்வு குறித்த எதிர்வரும் காலங்களில் கவனம் செலுத்தப்பட வேண்டியது அவசியமானது எனவும் சுட்டிக்காட்டியுள்ளது.

கடந்த வாரம் இந்தோனேசியாவில் இடம்பெற்ற பூமியதிர்வின் போது நாட்டின் பல பாகங்களில் அதிர்வு ஏற்பட்டிருந்தது.

கட்டட நிர்மாண பணிகளின் போது புதிய தொழில்நுட்பங்கள் பயன்படுத்த வேண்டியது அவசியமானது என தேசிய கட்டட நிர்மாண ஆய்வு அமைப்பின் மண்சரிவு பிரிவுத்தலைவர் ஆர்.எம்.எஸ். பண்டார தெரிவித்துள்ளார்.

ஜப்பான் போன்ற பூமியதிர்வு அதிகளவில் இடம்பெறக்கூடிய சாத்தியம் அதிகமான நாடுகளில் இந்தத் தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டே கட்டடங்கள் நிர்மாணிக்கப்படுகின்றன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, அதிர்வுகளை தொடர்ந்து சில பகுதிகளில் மண்சரிவு ஏற்படக்கூடிய அபாயம் நிலவி வருவதாக தெரிவித்துள்ளார். (அ-2)

# தெல்லிப்பழை பொலிஸ் பிரிவினரால் 21 குடும்பங்களுக்கு தகரம் வழங்கல்



(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை பொலிஸ் பிரிவிற்குள் மீளக்குடியமர்ந்த தந்தை செல்வாபுரம் ஜே/230, மல்லாகம் வடக்கு ஜே/214 ஆகிய பிரிவுகளை சேர்ந்த 21 குடும்பங்களுக்கு தகரம் வழங்கும் நிகழ்வு கடந்த 16 ஆம் திகதி பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் யாழ்ப்பாண பொறுப்பதிகாரி பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிற் பெரேரா, காங்கேசன்துறை பிரிவு பொறுப்பதிகாரி 2 ஆம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகரான ஜசந்த கமகே, வலிகாமம் வடக்கு பிரதேச செயலாளர் ஸ்ரீமோகன், பிரதேச செயலக சிறுவர் அலுவலக உத்தியோகத்தர் திருமதி யோகேஸ்வரி, மல்லாகம் வடக்கு ஜே/214 பிரிவு கிராம உத்தியோகத்தர் , சிவில் பாதுகாப்புக்குழு உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கொழும்பு 3 இல் உள்ள 99X Technology நிறுவனத்தின் அனுசரனையுடன் நடைபெற்ற இந்நிகழ்வில் ஒரு குடும்பத்திற்கு 15 தகரங்கள் என்ற வீதத்தில் 315 தகரங்களும், உணவுப் பொருட்பொதிகளும் பகிர்ந்தளிக்கப்பட்டதாக தெல்லிப்பழை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

(அ-9)

# இந்தியக் குழுவை மெனிக்பாமிற்கு அழைத்துச் செல்ல அரசாங்கம் இணக்கம்

(கொழும்பு)

வவுனியா செட்டிகுளத்தில் அமைந்துள்ள மெனிக்பாம் இடம்பெயர்ந்தோர் முகாமுக்குச் சென்று பார்வையிடுவதற்கும் அங்குள்ள மக்களைச் சந்திப்பதற்கும் இந்திய நாடாளுமன்றக் குழுவினரிடம் அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது.

இத்தகவலை இந்திய வெளிவிவகார அமைச்சு நேற்று முன்தினம் மாலை உறுதி செய்துள்ளது.

முன்னதாக இலங்கை அரசின் வழிகாட்டுதலில் தயாரிக்கப்பட்ட நிகழ்ச்சி நிரலில் இடம்பெயர்ந்தோர் முகாம்களைச் சென்று பார்வையிடும் ஏற்பாடுகள் ஏதும் செய்யப்பட்டிருக்கவில்லை.

இதுகுறித்து சுட்டிக்காட்டியே அ.தி.மு.கவும் தி.மு.க.வும் இந்தக் குழுவில் இருந்து விலகிக் கொண்டன.

இந்த நிலையில் இடம்பெயர்ந்த மக்களை சந்திக்க ஏற்பாடு செய்யப்பட வேண்டும் என்று இந்திய நாடாளுமன்றக் குழுவினர் கோரியிருந்தனர்.

இதையடுத்து இந்திய வெளிவிவகார அமைச்சு இலங்கை அரசுக்கு கொடுத்த அழுத்தங்களை அடுத்து மெனிக்பாமில் இடம்பெயர்ந்தோரைச் சந்திக்கவும் புளியங்குளத்தில் உள்ள மீள்குடியேற்றக் கிராமத்துக்கு அழைத்துச் செல்லவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனினும் போரினால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு இந்தியக் குழுவினரை அழைத்துச் செல்வதை இலங்கை அரசு தவிர்த்தே வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-2)

# நாட்டில் 2 ஆயிரம் பிச்சைக்காரர்கள்

(கொழும்பு)

கொழும்பு உட்பட நாட்டின் பிரதான நகரங்களில் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பிச்சைக்காரர்கள் இருப்பதாக கொழும்பு பல்கலைக் கழகத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

கொழும்பு, கம்பஹா, குருநாகல், கண்டி ஆகிய நகரங்களிலேயே அதிகமான பிச்சைக்காரர்கள் இருப்பதாகவும் தெரியவந்துள்ளது.

இதேவேளை, இவர்களில் 80 வீதமானோர் பல்வேறு நோய்களினால் பீடிக்கப்பட்டுள்ளதாகவும் இதில் 21 வீதமானோர் அங்கவீனர்கள் எனவும் ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

அத்தோடு நாடெங்கிலும் உள்ள பிச்சைக்காரர்களில் 72 வீதமானோர் ஆண்களெனவும் 28 வீதமானோர் பெண்களெனவும் இதில் 70 வீதமானோர் வயோதிபர்களெனவும் ஆய்வுகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மிகுதி 30 வீதமானோரில் கைக்குழந்தைகளும் சிறுவர்களும் மற்றும் நடுத்தர வயதுடையோரும் அடங்குவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# அதிகாரப்பரவலாக்கல் என்பது இந்தியா, இலங்கையை கட்டுப்படுத்துவதற்கான ஒருவகையான ஆயுதம்...!

இலங்கை தொடர்பான ஜெனீவாப் பிரேரணையிலுள்ள விடயங்களில் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக மேற்கத்திய நாடுகள் கவனமாகப் பார்த்துக்கொண்டு இருப்பதைப்போலவே அதிகாரப் பரவலாக்கல் தொடர்பாக இந்தியா உன்னிப்பாக கவனித்துவரும் என்பதை ஊகிக்கமுடிகிறது.

அதிகாரப் பரவலாக்கல் என்ற விடயம் பிரேரணையின் முக்கிய மூன்று வாசகங்களில் இல்லாத போதிலும் அதன் முன்னுரையில் அது வருகிறது. எனவே, கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபார்சுகளில் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக விசாரணை செய்யவேண்டும் என்றும் அதிகார பரவலாக்கலை சீர்படுத்தவேண்டும் என்றும் கூறும் சிபார்சுகள் உள்ளிட்ட ஆக்கபூர்வமான சிபார்சுகளை நிறைவேற்றவேண்டும் என்றே மொத்தத்தில் பிரரணை இலங்கையை வலியுறுத்துகிறது.

இவற்றில் மனித உரிமை மீறல்களைவிட் அதிகாரப் பரவலாக்கல் விடயத்தில் இந்தியா கூடுதல் அக்கறை செலுத்துவதை அவ

**நன்றி: இணையம்**

தானிக்கமுடிகிறது. இதற்கு முக்கிய காரணம் இந்த விடயம் தொடர்பாக தமிழ்நாட்டின் அரசியல் கட்சிகள் இந்திய் மத்திய அரசாங்கத்தின் மீது கொடுத்துவரும் நெருக்குவாரம் மட்டுமல்ல. அதிகாரப்பரவாலாக்கமானது ஒருவகையில் இந்தியாவுக்கு இலங்கையை கட்டுப்படுத்தும் ஆயுதமாகவும் இருக்கிறது.

அதிகாரப் பரவலாக்கல் தொடர்பாக இந்தியா இலங்கையுடன் 1987 ஆம் ஆண்டு ஒப்பந்தம் ஒன்றையும் செய்துகொண்டு இருக்கிறது. தேவையெனில் இலங்கைக்கு நெருக்குதலை கொடுக்க இந்தியாவுக்கு அதையும் பாவிக்க முடியும்.



ஆனால், மனித உரிமை பேரவையின் பிரேரணையின்படி இலங்கை அதிகாரப் பரவலாக்கலை சீர்படுத்த நடவடிக்கை எடுக்குமா என்பது இன்னமும் தெளிவாகத் தெரியவில்லை. நாட்டில் அதிகாரப் பரவலாக்கலை சீர்படுத்தி நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதே தாம் நாடாளுமன்ற தெரிவுக்குழுவொன்றை நியமிக்க திட்டமிட்டுள்ளதாக அரசாங்கம் கூறிவருகிறது.

ஆனால், அரசாங்கத்திற்கும் தமிழ் தேசிய கூட்டமைப்புக்கும் இடையிலான கயிறிழுப்பின் காரணமாக அந்த நாடாளுமன்ற தெரிவுக்குழுவும் எப்போதாவது நியமிக்கபடுமா என்ற சந்தேகம் தற்போது வலுத்து வருகிறது. தமக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான இருதரப்பு பேச்சுவார்த்தைகளின்போது எட்டப்படும் முடிவை நாடாளுமன்ற தெரிவுக் குழுவின் நடவடிக்களுக்கு அடிப்படையாக கொள்ளப்படும் என ஏற்கனவே இருசாராருக்கும் இடையே இணக்கப்பாடொன்று இருப்பதாகவும் எனவே, அவ்வாறான முடிவை காணாமல் தெரிவுக் குழுவுக்கு தமது பிரதிநிதிகளை நியமிக்க முடியாது எனவும் தமிழ் தேசிய கூட்டமைப்பு கூறிவருகிறது.

ஆனால், அரசாங்கமோ "முதலில் தெரிவுக்குழுவுக்கு பிரதிநிதிகளை நியமியுங்கள் பின்னர் இருதரப்பு பேச்சுவார்த்தைகளையும் நடத்தலாம்" என்கிறது. அதற்கு பிறகு இதுவா இதற்குப்பிறகு அதுவா என்று இழுபறி நிலையிலுள்ளது.

இருதரப்பு பேச்சுவார்த்தைகளின் போது எட்டப்படும் முடிவை நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் நடவடிக்கைகளுக்கு அடிப்படையாக கொள்ளப்படும் என ஏற்கனவே இருசாராருக்கும் இடையே இணக்கப்பாடொன்று இருப்பதாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு கூறுவதை அரசாங்கம் இதுவரை மறுக்கவில்லை. ஆனால், அவ்வாறான முடிவொன்று இருந்தாலும் அது நடைமுறை சாத்தியமானதா என்பது சந்தேகமே.

ஏனெனில், இவ்விருசாராரின் இணக்கப்பாட்டை அடிப்படையாக வைத்து பேச்சுவார்த்தைகளை

## இலங்கைப் பிரச்சினை, மேற்குலக நாடுகள் இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் தலையீடு செய்வதற்கு வாய்ப்பளிக்கிறது

தொடர நாடாளுமன்ற தெரிவுக் குழுவின் இதர கட்சிகள் விரும்ப மாட்டா. தமது முடிவை ஏனைய கட்சிகள்மீது திணிக்க அரசாங்கத்திற்கும் தமிழ் தேசிய கூட்டமைப்புக்கும் முடியாது.

மறுபுறத்தில் இருசாராருக்கும் இடையே அவ்வாறானதோர் இணக்கப்பாடு இருந்தால் அதனை மதித்து நடவடிக்கை எடுப்பதற்கு பதிலாக அவ்விணக்கப்பாட்டை ஒதுக்கித் தள்ளிவிட்டு அரசாங்கம் செயற்படுவது அரசியல் நாகரிகம் ஆகாது. அவ்விணக்கப்பாடு நடைமுறை சாத்தியமாகாததால் இருசாராரும் கூடி அதைப்பற்றி முடிவொன்றை எடுப்பதே இந்த சிக்கலில் இருந்து விடுபட்டு தீர்வொன்றை தேடுவதற்கு உள்ள ஒரே வழியாகும்.

ஆனால், இருசாராரும் தமது நிலைப்பாட்டிலிருந்து விலக தயாராக இல்லை. இது அரசாங்கத்திற்கும் நாட்டுக்கும் நல்லதாக அமையாது. அதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீது பழியை சுமத்தி விட்டு அதிகாரப் பரவலாக்கலை சீராக்கும் பொறுப்பிலிருந்து அரசாங்கம் தப்பித்துக்கொள்ள முடியாது. ஏனெனில், ஜெனீவா பிரேரணையின் பின்னர் அரசாங்கம் இது தொடர்பாக சர்வதேச ரீதியில் பொறுப்புக் கூற வேண்டியுள்ளது.

அதேவேளை இவ்விடயத்தில் இந்தியாவின் பிடி இருக்கக்கூடிய வாய்ப்புக்கள் அதிகமாகவே தெரிகிறது. இதற்கு தமிழ்நாட்டு நெருக்குதல் மட்டும்தான் காரணம் என்று கூறமுடியாது. ஒரு வகையில் தமிழ் நாட்டு நெருக்குதலை இந்திய மத்திய அரசாங்கம் அவ்வளவாக மதிக்கிறதா என்ற சந்தேகமும் எழுகிறது. இதைவிட இலங்கையை கட்டுப் பாட்டுக்குள் வைத்திருக்க இந்தியா விரும்புகிறது போல்தான் தெரிகிறது.

ஏனெனில், இலங்கையின் பிரச்சினைகள் மேற்குலக நாடுகள் இந்து சமுத்திரப்பிராந்தியத்தில் தலையீடு செய்வதற்கு வாய்ப்புக்களை ஏற்படுத்தி கொடுக்கின்றன என்று இந்தியா கருதுவதாக சில அவதானிகள் கருத்து வெளியிடுகிறார்கள்.

மறுபுறத்தில் சீனாவிற்கு இலங்கை வழங்கும் வாய்ப்புகள் நமது நலன்களை பாதிக்கக்கூடாது என்றும் இந்தியா கருதுகிறது. குறிப்பாக மன்னார் கடலில் எண்ணெய் அகழ்வுப் பணிகளில் வழங்கப் பட்டுள்ளதாகக் கூறப்படும் சீனாவின் பங்களிப்பை இந்தியா விரும்புவில்லை என்றே சில இந்திய ஊடகங்கள் கூறுகின்றன.

எல்லாவற்றையும்விட அண்மையில் இடம்பெற்ற இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணாவின் இலங்கை விஜயத்தை அடுத்து இலங்கை விடயத்தில் உறுதியாக இருக்கவேண்டும் என்று இந்தியா கருதுகிறதுபோலும். அந்த விஜயத்தின்போது 13-வது அரசியலமைப்பு திருத்தத்திற்கு அப்பால் சென்று இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பேன் என ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ தம்மிடம் கூறியதாக இந்திய அமைச்சர் கூறியிருந்தார். ஆனால், கிருஷ்ணா நாடு திரும்பியவுடன் தாம் அவ்வாறு இந்தியாவுக்கு வாக்குறுதியளிக்கவில்லை என ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ இலங்கை பத்திரிகை ஆசிரியர்களிடம் கூறினார்.

இதன் காரணமாகவோ என்னவோ ஜெனீவா பிரேரணையின்போது இலங்கைக்கு எச்சரிக்கையாகும் வகையில் இந்தியா முடிவொன்றை எடுத்ததாக இந்திய உள்துறை அமைச்சர் ப. சிதம்பரம் அண்மையில் திருச்சியில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றும் போது கூறியிருந்தார். **அதுமட்டுமன்றி ஜெனீவா பிரேரணையோடு தொடர்புள்ள எதிர்கால நடவடிக்கைகளின்போது இம்முறை பிரேரணைக்கு எதிராக வாக்களித்த** நாடுகளையும் தம்பக்கம் இழுப்பதாகவும் அவர் கூறியிருந்தார்.

அதன்படி மேற்குலக நாடுகள் இலங்கை விடயத்தில் தலையீடு செய்யக்கூடிய சர்வதேச விசாரணைகளை தவிர்க்கும் வகையிலும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக சர்வதேச மேற்பார்வையின் கீழ் உள்நாட்டு விசாரணையொன்றுக்கும் அதிகாரப் பரவாலாக்கலுக்கும் வழிவகுக்கும் வகையிலும் இந்தியா ஜெனீவா பிரேரணையின்போது நடந்துகொண்டது என்றே விளங்கிக்கொள்ள வேண்டியுள்ளது.

எனவே, அதிகாரப் பரவலாக்கல் விடயத்திலும்: இந்தியாவின் பிடி எதிர்காலத்தில் இருக்கக்கூடிய வாய்ப்புகள் அதிகம் என்று ஊகிக்கக் கூடியதாக இருக்கிறது.



# கூட்டமைப்பு எம்.பிக்களை தனித்தனியாக சந்திப்பது ஏன்?

## சந்தேகம் வெளியிடுகிறார் விநோ எம்.பி.

(கொழும்பு)

தமிழ் மக்கள் சார்பாக முக்கிய முடிவுகள் எடுக்கப்படுகின்ற போது கூட்டமைப்பின் ஒற்றுமையும் பலமும் குறைவடையாது பார்த்துக் கொள்ளப்பட வேண்டும் என தமிழ் தேசியக்கூட்டமைப்பின் வன்னி எம்.பி.எஸ். விநோநோதராதலிங்கம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கருத்துரைக்கையில், கொழும்பில் இந்திய பாராளுமன்ற குழுவுக்கும் தமிழ் கட்சிகளின் பிரிதிநிதிகளுக்குமிடையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சந்திப்பின் போதே அவர் அவ்வாறு தெரிவித்தார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் பிரதிநிதிகளை இந்திய பாராளுமன்ற தூதுக்குழுவினர் தனித்தனியாக சந்தித்தமை எமக்கு மிகுந்த ஏமாற்றத்தையும் சந்தேகங்களையும் தருகின்றது.

இலங்கை அரசாங்கத்தை போல் இந்திய அரசும் கூட்டமைப்பை பிளவுபடுத்த முயற்சிக்கின்றதா? என்ற கேள்வியும் எமது மக்கள் மத்தியில் உருவாகியள்ளது.

இது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தவறா? அல்லது இந்திய அரசின் சதியா? என விளங்கிக் கொள்ள முடியவில்லை என அவர் சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

தமிழ் மக்கள் சார்பாக முக்கிய முடிவுகள் எடுக்கப்படுகின்ற போது அல்லது சந்திப்புகள் மேற்கொள்ளப்படுகின்ற போது கூட்டமைப்பின் ஒற்றுமையும் பலமும் குறைவடையாது பார்த்துக் கொள்ளப்பட வேண்டும்.

கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழு எடுக்கின்ற தீர்மானங்கள் 5 கட்சிகள் கொண்ட கூட்டமைப்பின் தலைமையின் அங்கீகாரத்துடனேயே செயற்படுத்தப்பட வேண்டும்.

கூட்டமைப்பில் சிலர் தொடர்ந்து தவறு விட்டுக் கொண்டிருப்பதை நாம் கைகட்டி தொடர்ந்தும் பார்த்துக் கொண்டிருக்க முடியாது என அவர் மேலும் தெரிவித்தார்.

(அ-2)

## மின்னல் தாக்கி 12 பேர் பலி

வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் மின்னல் தாக்கி 12 பேர் உயிரிழந்துள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

எதிர்வரும் சில தினங்களிலும் மின்னல் தாக்கம் ஏற்படும் அபாயம் நிலவுவதாக திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதனால் மின்னல் தாக்கங்களில் இருந்து பாதுகாப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வளிமண்டலவியல் திணைக்களம் மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

(அ-2)

# பிள்ளை வந்தாலும் பரவாயில்லை த.தே.கூட்டமைப்பு வரக்கூடாது

## பியசேன எம்.பி. கூறுகிறார்

கிழக்கு மாகாண முதலமைச்சராக மறுபடியும் பிள்ளையான் வந்தாலும் கூடப் பரவாயில்லை.ஆனால், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உறுப்பினரொருவர் முதலமைச்சராக வரக் கூடாது என கூட்டமைப்பிலிருந்து தெரிவாகி பின்னர் அரசுப்பக்கம் தாவிய அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொடியப்பு பியசேன தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிடும் என்று கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்துள்ள நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் பியசேன மேற்கண்டவாறு கூறியுள்ளார்.


இது குறித்து அவர் மேலும் கூறுகையில், கிழக்கு மாகாண முதலமைச்சராக மறுபடியும் பிள்ளையான் வந்தாலும் கூடப்பரவாயில்லை. ஆனால், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உறுப்பினரொருவர் முதலமைச்சராக வரக் கூடாது. இதுவே எனது விருப்பமாகும்.

இதேவேளை, கிழக்கு மாகாணசபை முதலமைச்சர் வேட்பாளராக நீதியமைச்சர் ஹக்கீமையே அரசு நிறுத்துவதற்கு தீர்மானித்துள்ளது எனத் தகவல்கள் கசிந்துள்ளன. அரசின் இந்த முடிவுக்கு தமிழ்க் கட்சிகள் சிலவற்றில் இருந்தும் அதேவேளை முஸ்லிம் கட்சிகள் சிலவற்றிலும் இருந்தும் கடும் எதிர்ப்புகள் கிளம்பியுள்ளன.

கிழக்கில் தமிழர் ஒருவர்தான் முதலமைச்சராக வரவேண்டும் என்ற கருத்தும் முஸ்லிம் ஒருவர்தான் முதலமைச்சராக வர வேண்டும் என்ற கருத்தும் நடைமுறைக்கு பொருந்தாது என்றே நான் கருதுகின்றேன்.

மூவின மக்களுக்கும் எதுவித பாகுபாடுமின்றி சேவையாற்றக்கூடிய முதல்வரொருவரையே இன்று கிழக்கு மாகாண சபை எதிர்பாாத்துக் கொண்டிருக்கிறது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(அ-2)



நுவரெலியாவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள நீரில் தவழும் விருந்தகம் நுவரெலியா நகர முதல்வரின் பாரியார் திருமதி மஹிந்த குமாரவினால் – ஆரம்பித்து வைக்கப்பட்டது. நீரில் மிதக்கும் வகையில் நுவரெலியாவில் அமைக்கப்பட்ட முதலாவது விருந்தகம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

# கருத்து முரண்பாட்டினால் சிறுகடன் குறித்த சட்டமூலத்தில் தாமதம்

## ஆசிய அபிவிருத்தி வங்கி முன்மொழிந்தது

(கொழும்பு)

திறை சேரி மற்றும் மத்திய வங்கியின் உயர் அதிகாரிகளிடையே காணப்படும் கருத்து முரண்பாடுகள் காரணமாக சிறுகடன் வழங்கும் நிறுவனங்களை கட்டுப்படுத்துவதற்காக புதிய சட்டங்களை கொண்டு வருவதில் பெரும் தாமதம் ஏற்பட்டுள்ளது என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறான சட்டத்தை கொண்டுவருவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் செயற்படுத்தப்பட்ட கிராமிய நிதித்துறை அபிவிருத்தி செயற்றிட்டத்தின் கீழ் 2002 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது. இந்த செயற்றிட்டத்திற்கான மொத்த செலவு 50 மில்லியன் அமெரிக்க டொலராக காணப்பட்டது.

கிராமிய பகுதி மக்கள் தமது நிதித் தேவைகளுக்கு முறைசாராத துறையில் தங்கியிருப்பதை கருத்தில் கொண்டு இலங்கையின் சிறுகடன் முறைமையை ஒழுங்குபடுத்துவதற்கான இந்த ஆலோசனையை ஆசிய அபிவிருத்தி வங்கி முன்மொழிந்தது.

சிறுகடன் வழங்கும் நிறுவனங்கள் பல உள்ளன. இவை மக்களுக்கு உயர் வட்டி வீதத்தில் கடன் வழங்குகின்றன. இந்த நிறுவனங்களை கட்டுப்படுத்துவது முக்கியமானது.

இவர்களை கட்டுப்படுத்தவென யாரும் இல்லை. சிறுகடன்களை வழங்க முறைசார்ந்த வங்கி துறையில் ஏற்பாடு இல்லாத காரணத்தால் கிராமிய மக்கள் இவ்வாறான முறைசாராத நிறுவனங்களை நாட வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர் என அவர் குறிப்பிட்டார்.

தற்போது சட்ட வரைஞர் திணைக்களத்தில் கிடப்பில் உள்ள இந்த சட்டமூலத்தை சட்டமாக்குவதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டு வருவதாக மத்திய வங்கியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(அ-2)

# அதிகாரப்பகிர்வு மலையக தமிழர்களின் பிரதேசத்திற்கும் பகிரப்பட வேண்டும்

## ஐ.ம.மு.தலைவர் மனோகணேசன் தெரிவிப்பு

(கொழும்பு)

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த இலங்கைக்கு வலியுறுத்த வேண்டிய கடப்பாடு இந்தியாவிற்கு உள்ளது.

அதேபோன்று அதிகாரப்பகிர்வை வடக்கு, கிழக்கிற்கு மாத்திரம் மட்டுப்படுத்தாமல் மலையக தமிழர்கள் வாழும் பிரதேசங்களுக்கும் விஸ் தரிக்க வேண்டுமென்று ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் இந்திய சர்வகட்சி பாராளுமன்ற குழுவினரிடம் வலியுறுத்தி கூறியுள்ளார்.

தாஜ்சமுத்ரா ஹோட்டலில் வைத்து நேற்று முன்தினம் இந்திய குழுவினரை சந்தித்த போதே அவர் மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறுகையில்,

வடக்கு, கிழக்கிற்கு வெளியில் வாழும் தமிழ் மக்களின் உரிமைகள் மற்றும் சுதந்திரம் குறித்தும் இந்தியா அக்கறை காட்ட வேண்டும். தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு கூட்டமைப்பினதும் அரசாங்கத்தினதும் பேச்சு வார்த்தைகளில் மாத்திரம் தங்கியிருக்கவில்லை.


மலையக மக்களுக்கும் அனைத்து உரிமைகளும் உறுதிப்படுத்தப்பட வேண்டும். ஆகவே, அதிகாரப் பகிர்வு வட, கிழக்கு மாத்திரம் மட்டுப்படாமல் தமிழர்கள் வாழும் ஏனைய பிரதேசங்களுக்கும் விஸ்தரிக்கப்பட வேண்டும்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் மலையக சமூகத்தினரின் தற்போதைய நிலைமையை மிகத் தெளிவாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அதாவது வறுமையிலும் சுகாதாரத்திலும் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே மலையக தமிழர்கள் வாழ்கின்றனர். இவர்களுக்கு தேவையான உரிமைகளை உறுதிப்படுத்தப்பட வேண்டியது அவசியம் என்று ஆணைக்குழுவின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே, இவ்வாறான சிறுபான்மை இன மக்கள் பிரச்சினைகளை உறுதிப்படுத்தியுள்ள நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடமுறைப்படுத்த வலியுறுத்த வேண்டியது இந்தியாவின் பொறுப்பு என அவர் கூறினார்.

(அ-2)

# உருவாக்கும் திறனின் உந்துசக்தி



## ஆன்மீகம் 33

எண்ணங்களின் மூலத்தை ஆராய்ந்து அறிதல் நமக்கு அவசியமான ஒன்று. நாம் எப்போதும் சிலரை பெரிய சிந்தனையாளர்கள் என்று அழைக்கிறோம். ஆனால், சிந்தனை என்பது என்ன? அது எங்கிருந்து தோன்றுகிறது? இந்த சிந்தனை ஓட்டத்தை நம்மால் மேம்படுத்த முடியுமா? உருவாக்கும் திறன் இன்று உலகம் முழுவதிலும் ஒரு சூடான விடயம். நாம் மக்களை திறமையான திறன் உள்ளவர்களாக்க விரும்புகிறோம். ஆனால், அதற்கு என்ன நுட்பம்தேவை?

இரத்த வகைகளில் சில மாறுதல்களும் உடற்கூறு அம்சங்களின் சிற்சில வித்தியாசங்களும் உடைய ஏறக்குறைய ஒரேமாதிரி மூலக்கூறுகளை உடைய மனிதர்கள் அனைவரும் ஒன்று எனில், அவர்களின் சிந்தனை திறனே மேம்படுத்த ஏதாவது வழியுண்டா? ஏன் சிலருக்கு வன்முறைச் சிந்தனைகளும், சிலருக்கு ஆக்கபூர்வமான சிந்தனைகளும் வருகின்றன? எப்படி ஒருவர் மேதையாக இருக்கிறார்? மற்றவர் இல்லை? இது எதைப் பொறுத்திருக்கிறது? உணவையா, பயிற்சியையா? பாதையையா-இடத்தையா? அல்லது சந்தர்ப்பங்கள் அல்லது இடங்களைப் பொறுத்ததா? இந்த கேள்விதான், இன்று நம் முன்னால் இருக்கின்றன. உலகம் முழுவதிலும் உருவாவதன் இந்தப் படைப்புத்திறனைப் பற்றிய ஆய்வு நடைபெற்று வருகிறது.

சிறந்த எழுத்தாளர்களும், சிந்தனையாளர்களும் எழுத்தாளர்களின் தடையை சில சமயம் உணர்வதுண்டு. உனக்கு அதைப்போல் சிலசமயம் அனுபவம் கிடைத்திருக்கும். நீ ஓர் அழகான இடத்தில் எழுதுகோலுடனும், காகிதத்துடனும் ஏதோ கற்பனை வருவதற்காக காத்துக் கொண்டு உட்காந்திருப்பாய். ஆனால், பல சமயங்களில் அது நடப்பதில்லை இல்லையா?

படைப்புத்திறனின் மூலம் என்ன?

*சிந்தனை என்பது ஒரு சக்தியின் உந்துதலும் நுட்பமுமாகும்.* அந்த உந்தல் சக்தியும், புத்திநுட்பமும் உதயமாகி, ஒரு சிந்தனை வருவதற்கு பெருமூளையின் வெளிப்புறத்தில் ஒரு குறிப்பிட்ட மையத்தில் அதித வேகத்தில் உந்துதல்கள் ஒன்றுகூட வேண்டும். அந்தக் குறுகிய இடைவெளியில் 16 உந்துதல்களும் பெருமூளையின் வெளிப்பகுதியில் ஒன்றுகூடும் போது வருவதைத்தான் நாம் சரியான சிந்தனை என்கிறோம். ஆகவே, நாம் என்ன செய்யவேண்டும்? நாம் நம் மூளைக்கும், நம் மனதிற்கும் பயிற்சி அளிக்கவேண்டும்.



இப்போது பார், நான் பேசிக் கொண்டிருக்கும்போது நீங்கள் எல்லாரும் 100 வீதம் கேட்டுக்கொண்டிருக்கிறீர்களா? நான் பேசிக்கொண்டிருக்கும் போது, உங்கள் மனதில்தான் ஒரு உரையாடல் நடக்கிறது. ஆம் நான் ஒத்துக்கொள்கிறேன்- இல்லை- அது அப்படி இருக்கமுடியாது என்று அது சொல்லிக் கொண்டிருக்கிறது. நம் எல்லோரது மனதிலும் ஒரு வடிகட்டும் திறன் உண்டு. நாம் அதன் நம்பிக்கைக்கு மூலமாக கவனித்து நமக்கு முன்னமேயே தெரிந்தவற்றை மட்டும் ஏற்றுக்கொள்கிறோம். நம்முடைய நடைமுறை ஒத்துவராதவற்றை அப்படியே வடிகட்டி அப்புறப்படுத்தி விடுகிறோம். நாம் கவனித்துப் பார்த்தால், இது நமக்குள் நடக்கும் சுவாரசியமான அதிசயமாகும். ஏற்கனவே அறிந்தவற்றை எடுத்துக் கொள்வதும், ஏற்கனவே அறியாதவற்றைத் தள்ளிவிடுவதும் படைப்புத்திறனுக்கு முக்கியமான தடையாகும்.

படைப்புத் திறனின் இரண்டாவது பகுதி- கற்பனை சக்தி ஒவ்வொரு படைப்பாளியிடமும் சிறிது கற்பனை இருப்பதைக் காண்பாய். அந்த நொடியில் அது உண்மையா? பொய்யா? என்று நீ சிந்திக்கமாட்டாய். எது உண்மையற்றது போல் தோன்றுகிறதோ அந்தக் கோணத்திலுள்ள கற்பனை, உருவாக்கும் திறனை உண்டாக்கு கிறது.

அது வெறும் கற்பனையான, நடைமுறை சாத்தியக்கூறிகளிலிருந்து - உண்மையிலிருந்து முற்றிலும் தொடர்பில்லாமலிருந்தால், அப்போதும்கூட அந்தத் தொடர்புக் குறைவால், அந்த மாற்றத்தால் கற்பனை உண்மையாகிறது.

ஒரு காலத்தில் தோமஸ் அல்வா எடிசன் ஒளியை உருவாக்குவது குறித்து கனவு கண்டார். அது முற்றிலும் கற்பனையே. அதுபோல் தான் தொலைபேசியும், ஆகாய விமானமும். இந்த எல்லா கண்டுபிடிப்புகளும் கற்பனை மூலமாகத் தான் நடந்தன. இந்தக் கற்பனையையும், அன்றைய நடைமுறை சாத்தியக் கூறுகளையும், உண்மை நிலையையும் இணைத்ததால்தான் நடந்தன. நீ நடைமுறை சாத்தியக்கூறுகளைப் பற்றி மட்டுமே சிந்தித்துக்கொண்டிருந்தால், அப்போது படைப்புத் திறன் வராது. நீ வெறுமனே கற்பனை செய்தால் அங்கேயும் படைப் புத்திறன் இருக்காது சமநிலை தேவைப்படுகிறது. வாழ்க்கையையும்கூட அப்படித்தான். புத்திக்கும் இதயத்துக்கும் நடுவில் சமநிலை-உணர்வுகளுக்கும் உள்ளுணர்வுக்கும் சமநிலை. நம்முடைய அடிவயிற்றிலிருந்து பீறிட்டு எழும் உணர்ச்சிகளைக் கவனித்தல், நமக்குள்ளிருக்கும் உள்ளுணர்வுத்திறனை வளர்த்துக்கொள்ளுதல் படைப்புத் திறனின் மற்றோர் அம்சமாகும்.

எழுத்தாளர் தடை போன்ற தடைகள் வந்தால் அவைகளை நீக்குவதற்கு ஒரு வழி இருக்கிறது. நம்முடைய இருத்தலில் ஏழுநிலைகளில் கவனம் செலுத்தவேண்டும். விஞ்ஞானம் இது என்ன? என்று தெரிந்து கொள்வது. ஆன்மீகம் நான்


**பூஜ்ய ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர்**

யார்? என்று தெரிந்துகொள்ளுதல். அவை ஒன்றோடொன்று போட்டி போடவில்லை. அவை இரண்டும் கை கோர்த்துச் செல்கின்றன. ஆகவே, உங்களைப் பற்றி அறியுங்கள். உங்கள் இருத்தலின் ஏழுநிலை களைப்பற்றி அறியுங்கள். உடல், மூச்சு, மனம், புத்தி, நினைவாற்றல், தான் எனும் அகங்காரம், ஆன்மா.

(தொடரும்)

# உங்கள் கைரேகை பலன்கள் 33

## ரேகைகளும் கிரகங்களும்




### இரேகைகளின் அமைப்பு

**4.** இரேகை துண்டுதுண்டாய் அமைந்திந்தாலும், கேடுள்ளதே. உயிர்ப்புள்ள சக்தி ஒழுங்காகச் செல்வதற்கில்லை என்பது விளங்கும். தந்திக்கம்பி மத்தியில் அறுபட்டிருந்தால் எப்படியோ அப்படி இதில் எப்படி மின்சார வேகம் செல்லும்? இதனால் கஷ்டநஷ்டங்கள் அனந்தம். துண்டுபட்ட இடம் அகலமாயிருந்தால் கஷ்டகால அளவை அதிகமாகக் குறிக்கும்.

**5.** இரேகை துண்டுபட்ட இடத்தில் குறுக்கிட்ட சிறுரேகை காணப்பட்டு துண்டுபட்ட மற்றரேகையுடன் சம்பந்தமிருந்தால் உயர்ப்புள்ள சக்திக்குத் தங்குதடை ஏற்படுவதைக் குறிக்கும். இரேகைகள் துண்டுபட்டு பெருங்கேட்டை விளைவிக்கக்கூடிய அபாயமெனக்கருத வேண்டும்.

**6.** இரேகை துண்டுபட்டு முனை உட்பக்கமாக வளைந்து கொக்கி போலாயின் இன்னும் அதிகக் கோரத்தைக் குறிக்கும். ஆயுள் இரேகை துண்டுபட்டு வளைந்து கால அளவில் மரணத்தைக்குறிக்கும். பூர்வபுண்ணியம்கால அளவில் ஒத்துக் கொள்ளுமாயின், வளைந்த விடத்தில் சதுரங்கட்டி மற்றோர் இரேகை தொடந்துவிடின் ஆபத்து நீங்கிவிடும்.

**7.** நான்கு சிறு இரேகை சதுரமாய் அமைந்து அதனிடையே முக்கிய இரேகை துண்டுபட்டிருப்பின், ஆபத்திருப்பினும் மீட்சியுண்டென்பதை உணர்த்தும்; தனித்தே சதுர இரேகைக் குறி எப்பொழுதும் எந்தவிடத்தில் தோன்றியிருந்தாலும் பாதுகாப்பு என்பதை அறிவிப்பதாகும். முக்கிய இரேகை துண்டுபட்ட இடைவழி சதுர இரேகையால் இணைக்கபட்டிருந்தால், உயிர்ப்புள்ள சக்தி, துண்டுபட்ட விடத்தில் தடைப்பட்டு நின்று பிறகு சதுர இரேகையில் வழிகண்டு சென்று ஒழுங்குபெறுவதாகும். இரேகை துண்டுபட்டவிடத்தில் துன்பமும் சதுர இரேகை கண்டவிடத்தில் பாதுகாப்பும், ஒன்றிருப்பதைவிட முக்கிய இரேகை குற்றங்குறைவின்றி ஒழுங்காய் அமைந்திருப்பது காலச்சிறப்புமுடையதாகும். சதுர இரேகை அநேகர் கைகளில் காணப்பட்டிருக்கிறது. சில விடயங்களில் பெரும்பாகத்தை இது தன் உள்வகிக்கிறது. புண்பட்டுப் பண்பட்டுக் கால அளவில் பற்றற்ற தன்மையைக் குறிக்கிறது. இன்ப துன்பங்களைக் களைந்து மனம் தனித்திருக்க யத்தனிப்பதாகும்.

**8.** சில முக்கிய இரேகை துண்டுபட்டமுனை குஞ்சம்போன்ற இரேகைக் கூட்டத்துடன் காணப்படும், சாதாரணமாய் இரேகையின் இறுதி நக்ஷத்திரக்குறி, ஒரு புள்ளி, சிறு பள்ளம், குறுக்கிட்ட இரேகை, தீவு முதலியவைகளால் அமைவதுண்டு. குஞ்சக் குறி, ஆயுள், புத்தி, இருதய முதலிய இரேகைகளின் இறுதியிலிருந்தால் அது இரேகையின் சக்தியைப் பரவச்செய்து வீணில் விரயமாவதைக் குறிக்கும். குஞ்சக் குறிக் கருகில் ஒரு இரேகை தொடர்ந்து இணைப்பில் சதுரக் குறியுமிருந்தால் பாதுகாப்பைக் குறிக்கும். குஞ்சக்குறி குற்றமுடையது.

**சக்தி**

(தொடரும்)

# ஆப்கான் மகளிர் பாடசாலை குடிநீரில் விஷம்; 150 மாணவிகளுக்கு ஆபத்து

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் உள்ள மகளிர் பாடசாலையில் மாணவிகள் குடிக்கும் நீரில் விஷம் கலக்கப்பட்டதால் சுமார் 150 மாணவிகள் கடுமையாக பாதிக்கப்பட்டு சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காபூலில் சில நாட்களுக்கு முன்பு அரசாங்க கட்டடங்களின் மீதும் வெளிநாட்டு தூதரகங்கள் மீதும் தலிபான்கள் திடீர் தாக்குதல் நடத்தினர்.

மேலும் பல தாக்குதல்கள் தொடரும் என்று அவர்கள் மிரட்டல் விடுத்திருந்த நிலையில் தற்போது நடைபெற்றுள்ள இச்சம்பவம் தலிபான்களின் சதி வேலையாக தான் இருக்கும் என்று கருதப்படுகின்றது.

2001 ஆம் ஆண்டியிலிருந்து பெண்கள் கல்விக்கு தலிபான்கள் எதிர்ப்பு தெரிவித்து வந்த நிலையில் அவ்வப்பொழுது சில தாக்குதல்கள் பெண்கள்மீது தொடர்ந்து கொண்டே இருப்பதாகவும் தெரிகின்றது.

பாடசாலை மாணவிகள் குடித்த நீரில் விஷம் கலக்கப்பட்டிருப்பது 100 சதவீதம் உண்மை என்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

சதிகாரர்கள் இந்த நாச வேலைகளினால் 150 பாடசாலை மாணவிகள் பாதிக்கப்பட்டு கடுமையான தலைவலி, வாந்தியினால் அவதியுற்று வருகின்றனர்.

மேலும் பலர் மோசமான நிலையை நெருங்கி கொண்டிருக்கின்றனர்.

ஆப்கான் அரசிற்கு தலிபான்கள் விதித்த பல்வேறு தடைகளில் பெண் கல்வியும் ஒன்று என்றும் ஒரு காலகட்டத்தில் அத்தடையை மீறி பாடசாலைக்கு சென்ற இஸ்லாமிய பெண்கள் மற்றும் மாணவிகளின் மீது அசிட் அடித்து தாக்கியுள்ளனர்.

எனவே தற்போதும் பாடசாலை மாணவிகள் குடிக்கும் நீரில் விஷம் கலக்கப்பட்டுள்ளது என்பதால் தலிபான்கள் மீதான சந்தேகம் மேலும் வலுக்கின்றது என கூறப்படுகின்றது. (அ-2)




# ஆப்கானில் இருந்து அவுஸ். படைகள் முற்கூட்டியே வெளியேறும்- ஜூலியா



ஆப்கானிதானிலிருந்து அவுஸ்திரேலிய படைகள் திட்டமிட்டதை விட முன்னதாகவே வெளியேறும் என அவுஸ்திரேலிய பிரதமர் ஜூலியா கில் லார்ட் தெரிவித்துள்ளார். ஆப்கானிஸ்தானில் சுமார் ஆயிரத்து 550 அவுஸ்திரேலிய வீரர்கள் தங்கியிருந்தனர். நேட்டோ நாடுகள் தவிர்ந்த பிற நாடுகளின் படைவீரர்களில் இதுவே அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.

இங்குள்ள உருஸ்கான் பிராந்தியத்தின் பாதுகாப்பு பொறுப்பை ஆப்கானிஸ்தான் தேசிய இராணுவ வீரர்கள் ஏற்றுக்கொள்வதற்கு பயிற்சி அளிப்பதே அவுஸ்திரேலியப் படையின் நோக்கம் என தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் ஆப்கானிஸ்தானிலிருந்து அவுஸ்திரேலியப்படைகள் 2014 ஆம் ஆண்டின் இறுதியில் வெளியேறிவிடும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

தற்போது 2013 ஆம் ஆண்டின் இறுதிக்குள் அவுஸ்திரேலியப் படைகள் வெளியேறிவிடும் என அவுஸ்திரேலிய பிரதமர் அறிவித்துள்ளார்.

கடந்த நவம்பர் மாதத்தில் அவுஸ்திரேலிய படைகளின் நோக்கம் விரைவில் நிறைவேற்றப்படும் என அவுஸ்திரேலிய பிரதமர் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# வடகொரிய ஏவுகணையின் எதிரொலி; நிறுவனங்கள்மீது பொருளாதாரத்தடை

அணு ஆயுதங்களை இரகசியமாக வடகொரியா தயாரிப்பதாக ஐ.நா. உட்பட சர்வதேச நாடுகள் புகார் கூறி வருகின்றன.

இந்நிலையில் ஏவுகணை சோதன்னை நடத்தமாட்டோம் என்று வடகொரிய தலைவர்கள் உறுதியளித்தனர். ஆனால் சமீபத்தில் ஏவுகணை ஏவி சோதனை நடத்தியது.

ஏவுகணை சோதனை தோல்வியில் முடிந்தாலும் ஐ.நா. தற்போது வடகொரியா மீதான பொருளாதார தடையை விரிவுபடுத்தியுள்ளது.


இது குறித்து 15 நாடுகள் கொண்ட ஐ.நா.பாதுகாப்புக்குழுவின் தலைவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பது,

சர்வதேச நாடுகளின் எதிர்ப்பை மீறி வடகொரியா ஏவுகணை சோதனை நடத்தியது பெரும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளது.

ஏற்கனவே பல்வேறு பொருட்கள் வடகொரிய நிறுவனங்கள் மீது ஐ.நா.பொருளாதார தடை விதித்துள்ளது.

இந்நிலையில் ஏவுகணை சோதனை நடத்தியதால் மேலும் பல பொருட்கள் வடகொரிய நிறுவனங்கள் மீது பொருளாதார தடை விதிக்கப்படுகிறது.

அந்த நிறுவனங்களுடன் ஏனைய நாடுகள் எந்தத் தொடர்பும் வைத்துக்கொள்ளக்கூடாது. அதே போல் தடைப்பட்டியலில் கூடுதலாக இடம்பெறும் பொருட்கள் தொழில்நுட்பங்களை வடகொரியாவுக்கு ஏற்றுமதி செய்யக்கூடாது என்று தெரிவித்தார். (அ-2)



ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் எதிர்வரும் மே மாதம் டோக்கியோ ஸ்கைடிரீ என்ற வானளாவிய தொலைக்காட்சி கோபுரம் திறந்து வைக்கப்படவுள்ளது. இக்கோபுரமானது உலகின் இரண்டாவது கட்டடம் என கூறப்படுகின்றது.

# ஐ.நா. அகதிகள் உயர்குழுவின் சிறப்புத்தூதர் நியமனம்



ஜெனீவாவில் உள்ள ஐக்கிய நாடுகள் அகதிகள் உயர்குழுவின் சிறப்புத் தூதராக பிரபல ஹோலிவுட் நடிகை ஏஞ்சலினா ஜோலி (வயது 35) நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுகுறித்து அமைப்பின் செய்தித் தொடர்பாளர் அட்ரின் எட்வர்ஸ் கூறுகையில்,

ஏஞ்சலினா ஜோலி தற்போது பதவி உயர்வு பெற்றுச் சிறப்புத் தூதராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் அகதிகள் அமைப்பின் நல்லெண்ணத்தூதராக பத்தாண்டுகளாக பதவி வகித்தபோது உலகில் 40 இடங்களுக்குச் சென்று அகதிகள் மறுவாழ்வுக்காக அரும்பணியாற்றியுள்ளார்.

கடந்தாண்டு ஒஸ்கார் விருது நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளாமல் ஆப்கானில் அகதிகள் மறு வாழ்வுக்காக செயலாற்றினார். அவரது சிறப்பான பணிக்காக பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.நா. அகதிகள் அமைப்பு முதன் முறையாக சிறப்பு தூதர் பதவியை உருவாக்கியுள்ளது.

இதுபோன்ற பதவிகள் பொதுவாக ஓய்வுபெற்ற அரசியல்வாதிகளுக்கோ அல்லது தூதரக பதவி வகித்தவர்களுக்கோ வழங்கப்படுவது வழக்கம் என்று தெரிவித்தார்.

இவர் இதற்கு முன் இதே அமைப்பின் நல்லெண்ண தூதராக பதவி வகித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# பிரிட்டனில் படிக்கவரும் இந்திய மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு பரிசீலிக்கப்படும்

பிரிட்டனுக்கு படிக்க வரும் இந்திய மாணவர்கள் படிப்பை முடித்ததும் இங்கேயே பணியாற்றுவதற்கான உரிமம் வழங்குவது குறித்து பிரிட்டன் அரசு பரிசீலிக்க உள்ளது என்று இந்திய வர்த்தகத்துறை அமைச்சர் ஆனந்த்சர்மா தெரிவித்துள்ளார்.

பிரிட்டனிற்கு விஜயம் செய்த இந்திய வர்த்தகத்துறை அமைச்சர் ஆனந்த் சர்மா பிரிட்டன் நிதி அமைச்சர் ஜார்ஜ் ஆஸ் போர்னேவை கடந்த திங்கள் கிழமை சந்தித்துப் பேசினார். இதையடுத்து அவர் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த போது, பிரிட்டனுக்கு வந்து பயிலும் இந்திய மாணவர்களுக்கு இங்கேயே வேலை கொடுப்பது தொடர்பாக பரிசீலிக்கப்படும் என்று பிரிட்டன் அமைச்சர் ஜார்ஜ் உறுதி அளித்துள்ளார் என்றார். மேலும் அவர் கூறியது,

இந்தியாவில் இருந்து பிரிட்டனுக்கு படிக்க வரும் மாணவர்களில் பெரும்பாலானோர் நடுத்தர குடும்பத்தை சேர்ந்தவர்கள். பலர் கடன் வாங்கி படிக்க வருகின்றனர். அவ்வாறு படிக்க வரும் மாணவர்கள் படிப்பை முடித்ததும் பிரிட்டனில் வேலை பார்க்க அனுமதிக்கப்படுவதில்லை.

இதனால் இந்திய மாணவர்கள் கடும் பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர். இந்த விவகாரத்தை பிரிட்டன் நிதியமைச்சர் ஜோர்ஜ் ஆஸ் போர்னேவின் கவனத்துக்கு கொண்டு சென்றேன். இது குறித்து அவர் பரிசீலிப்பதாக உறுதியளித்துள்ளார் என்றார் ஆனந்த்சர்மா. (அ-2)

# நியூகினியா, சிலி நாடுகளில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்

இந்தோனேசியா அருகேயுள்ள பப்புவா நியூகினியா நாட்டில் நேற்று முன்தினம் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

அந்த நாட்டின் 2 ஆவது பெரிய நகரமான லாயிக்கு வடக்குப் பகுதியில் மையம் கொண்டு இருந்த நில அதிர்வு ஏற்பட்டதாகவும் அது 7 ரிக்டர் அளவில் பதிவானதாகவும் அமெரிக்க புவியியல்துறை அறிவித்தது. இதனால் சுனாமி எச்சரிக்கை எதுவும் வெளியிடவில்லை.

இதேபோன்று சிலி நாட்டில் உள்ள வால்பாரைசோ என்ற துறைமுகம் நகரருகே சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இது 6.5 ரிக்டர் அளவில் பதிவானதாக அமெரிக்க புவியியல் துறை அறிவித்தது.

சிலி நாட்டின் மத்திய பகுதியில் கட்டடங்கள் குலுங்கின. இதனால் அதிர்ச்சியடைந்த மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி வீதிகளுக்கு ஓடி வந்தனர். (அ-2)

# தென்சீனக்கடல்சார் பிரச்சினைகளை சர்வதேச தீர்ப்பாயத்திடம் முறையிட முடிவு

தென் சீனக்கடல் உரிமை தொடர்பாக கடல்சார் பிரச்சினைகளுக்கான சர்வதேச தீர்ப்பாயத்திடம் முறையிட பிலிப்பைன்ஸ் முடிபு செய்துள்ளது.

இது குறித்து அந்நாட்டு வெளிவிவகாரத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், தென்சீனக்கடலின் ஸ்கார்பரோ தீவுப்பகுதியில் சீனா உரிமை கோருவதை எதிர்த்து சர்வதேச தீர்ப்பாயத்திடம் முறையிடப் போவதாகவும் சீனா தமது தரப்பு வாதத்தை தீர்ப்பாயத்திடம் எடுத்துச் சொல்லுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தென்சீனக்கடற்பரப்பில் பிலிப்பைன்ஸ் தமக்குச் சொந்தமாக உரிமைகோரும் தீவுப்பகுதியில் அத்துமீறி நுழைந்த சீன மீன்பிடிக் கப்பல்களை அண்மையில் விரட்டியடித்தது.

மேலும் தமது போர்க்கப்பல்களையும் அப்பகுதிக்கு அனுப்பிவைத்தது. இதற்கு சீனா கடுமையாக எதிர்ப்புத் தெரிவித்ததுடன் பிலிப்பைன்ஸின் போர்க்கப்பலை வெளியேறுமாறும் எச்சரித்திருந்தது. இதைத் தொடர்ந்து தென்சீனக் கடல் விவகாரத்தை சர்வதேச தீர்ப்பாயத்திடம் எடுத்துச்செல்ல பிலிப்பைன்ஸ் முடிவு செய்திருக்கிறது.

இந்தச் சூழலில் தென்சீனக் கடற்பரப்பில் சர்ச்சைக்குரிய இடத்தில் பிலிப்பைன்ஸ் மற்றும் அமெரிக்க போர்க்கப்பல்கள் கூட்டுப்பயிற்சியை மேற்கொள்ளத் தொடங்கியிருக்கின்றன. இதில் அமெரிக்காவின் 700 இக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர். அமெரிக்காவின் பிரமாண்ட போர்க்கப்பல்கள் கடற்பரப்பில் நிறுத்தப்பட்டுள்ளன.

தென்சீனக் கடற்பரப்பு முழுவதையுமே சீனா தமக்கு உரியதாக பிரகடனம் செய்கின்றது. ஆனால் பிலிப்பைன்ஸ், வியட்நாம், மலேசியா போன்ற நாடுகளும் தங்களுக்கு உரிமை உள்ளதாக அறிவித்து வருகின்றன. இந்நிலையில் சீனா மற்றும் பிலிப்பைன்ஸ் இடையே உருவான தென் சீனக் கடல் தொடர்பான மோதல் ஐக்கிய நாடுகள் சபையால் உருவாக்கப்பட்ட சர்வதேச தீர்ப்பாயத்துக்கு கொண்டு செல்லப்படுகின்றது. (அ-2)

# சீனா மற்றும் பாகிஸ்தான் அச்சுறுத்தலை எதிர்கொள்ளத் தயாராகிறது இந்தியா



(புதுடில்லி)

எல்லைப் பகுதியில் சீனா மற்றும் பாகிஸ்தானால் ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல்களை எதிர் கொள்ளும் வகையில் இந்திய இராணுவத்திற்கு ஆயுதங்களை வேகமாக கொள்முதல் செய்யவும் எல்லைப் பகுதியில் இந்திய படைகள் மற்றும் ஆயுதங்கள் வேகமாக சென்று வர உட்கட்டமைப்புக்களை மேம்படுத்தவும் மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

26 ஆயிரத்து 155 கோடி ரூபாய் மதிப்பில் வடக்கு எல்லைப் பகுதிகளில் மேம்படுத்தப்பட்ட வளர்ச்சி திட்டங்கள் குறித்து இந்திய இராணுவம் சமர்ப்பித்துள்ள விரிவான திட்ட மதிப்பீட்டை ஆய்வு செய்வதற்கு மத்திய பாதுகாப்புத்துறை செயலாளர் சசிகாந்த் சர்மா தலைமையில் அதிகாரம் பெற்ற குழு ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இந்த திட்டம் 2020 தொடக்கம் 2021 ஆம் ஆண்டில் நிறைவடையும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது. ஏற்கனவே கிழக்கு எல்லைப் பகுதியில் 9 ஆயிரத்து 243 கோடி ரூபாய் செலவில் வளர்ச்சி திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த திட்டம் 2016-2017 ஆம் ஆண்டில் நிறைவடையவுள்ளது.


சிறப்பு இராணுவ படையினருக்கு பாய்ந்துதாக்க உதவும் துப்பாக்கிகள், சிறு துப்பாக்கிகள், வாகனங்கள், லேசர் கருவிகள், நீரில் செல்லும் வாகனங்கள், பரசூட்டுகள் உள்ளிட்ட பல பொருட்கள் வாங்குவது குறித்து துணை இராணுவத்தளபதி தலைமையில் குழு ஒன்றை அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்திய இராணுவத்துக்கு என போர் காலங்களில் பயன்படுத்தப்படும் ஹெலிகொப்டர்கள் மற்றும் சண்டையின் போது தேவைப்படும் விமான உதிரிப்பாகங்கள் போன்றவை வழங்குவது குறித்தும் ஆலோசனை செய்ய குழு அமைக்கவும் மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

சீனா எல்லைப்பகுதியில் கடந்த 30 நாட்களில் சுமார் 15 ஆயிரம் வீரர்களை கொண்டு வந்துள்ளது. சுமார் 4 ஆயிரத்து 57 கி.மீ. தூரமுள்ள எல்லைப்பகுதியில் உட்கட்டமைப்புக்களை மேம்படுத்தியுள்ளது. குயிங்காய் திபெத் பகுதியில் சீன விமானப்படை மற்றும் இராணுவமும் மிகப்பெரிய அளவில் பயிற்சியை மேற்கொண்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இதனை தொடர்ந்து மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளில் விரை வுபடுத்தியு ள்ளது. (அ-2)

# நெருக்கடிகளை வெற்றி கொள்ள இந்தியா தயாராக வேண்டும்

## பிரணாப் முகர்ஜி தெரிவிப்பு



எந்த நெருக்கடியான நிலையையும் இந்தியா சமாளித்து மீண்டு வரும் என மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி நேற்று முன்தினம் நம்பிக்கை தெரிவித்தார்.

இந்திய தொழிலக கூட்டமைப்பின் ஆண்டுப் பொதுக்கூட்டத்திலும் தேசிய கருத்தரங்கிலும் பேசிய அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில், வெளியிலிருந்து வரக்கூடிய எந்த அதிர்வையும் எதிர்கொள்ளும் விதத்தில் இந்தியா தயார் நிலையில் இருக்க வேண்டும். கடந்த 3 நிதியாண்டுகளை போலவே எதிர்காலத்திலும் எந்த நிலையையும் இந்தியா வெற்றிகரமாக எதிர்கொள்ளும்.

எதிலும் அதிகமாக திருப்தியடைந்து மெத்தனமாயிருக்கும் நமது பழக்கம் தான் நம்முடைய முக்கிய எதிரியாகும். சில ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்டுள்ள கடன் நெருக்கடி உலக அளவில் பொருளாதாரம் சீரடைந்து வருவது ஆகியன பலவீனமாகவும் உறுதியற்றதாகவும் உள்ளன.

2008 இற்கு பிறகு ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி எதிர்பார்த்ததைக் காட்டிலும் கடினமானதாக இருந்தது. வெளிநாட்டு நிதி நிறுவன முதலீடு இந்தியாவுக்கு கொண்டு வந்த பணத்தால் பங்குச்சந்தை பாதிக்கப்பட்டது. அது ரூபாயின் மதிப்பை வீழ்ச்சியடையச் செய்தது.

எனவே 2011-12 ஆம் ஆண்டில் இந்திய பொருளாதார வளர்ச்சி 6.9 சதவிகிதமாகத்தான் இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது ஏமாற்றம் தரக் கூடிய செய்தி தான். தொழில் மற்றும் விவசாயத் துறைகள் எதிர்பார்த்த அளவுக்கு செயற்படாததால் இந்த நிலை ஏற்பட்டது.

எனினும் 2012-2013 ஆம் ஆண்டில் இந்தியாவின் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சி 7.6 சதவிகிதமாக இருக்கும் என அரசு மதிப்பிட்டுள்ளது என பிரணாப் முகர்ஜி தெரிவித்தார். (அ-2)





# இந்திய எம்.பிக்களின் இலங்கை பயணம் தமிழர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வை ஏற்படுத்தும்

## பா.ஜ.கவின் தேசிய செயலாளர் முரளிதரராஜ் தெரிவிப்பு

சுஷ்மா சுவராஜ் தலைமையிலான எம்.பிக்கள் குழுவின் இலங்கை பயணம் தமிழர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு ஏற்படுத்தும் என்று பா.ஜ. தேசிய செயலாளர் முரளிதர ராவ் தெரிவித்துள்ளார்.

சென்னையில் அவர் நேற்று முன்தினம் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது,

கடந்த 1999 இல் திருச்சியில் தமிழக பா.ஜ. மாநாடு நடந்தது. 13 ஆண்டுகளுக்கு பின்னர் அடுத்த மாதம் 28, 29 ஆம் திகதிகளில் மதுரையில் நடக்கும் தாமரை சங்கமம் மூலம் பா.ஜ. புதிய சரித்தி



ரம் படைக்க வுள்ளது. இதன் மூலம் மத்தியில் ஆளும் கட்சியாகவும் மாநிலத்தில் பிரதான கட்சியாகவும் பா.ஜ. உருவெடுக்கும்.

இலங்கை தமிழர் பிரச்சினை இறுதிக்கட்ட போரின் போது அப்பாவி மக்கள் மீது இராணுவம் நடத்திய தாக்குதல் இலங்கை கடற்படையால் மீனவர்கள் சந்திக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு குறித்து விவாதிக்கப்படும். தமிழக அரசியல் நிலைப்பாடு குறித்தும் ஆலோசிக்கப்படும். சுஷ்மா சுவராஜ் தலைமையிலான குழுவின் இலங்கை பயணம் அங்குள்ள தமிழர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு ஏற்படுத்தும் ஒரு வெற்றி பயணமாக அமையும் என அவர் கூறினார். (அ-2)

# காகத்தின் வாயில் தங்கப்பொதி

(சென்னை)

கன்னியாகுமாரி மாவட்டத்தில் 5 பவுண் தங்க நகை பொட்டலத்தை தூக்கிச் சென்ற காகத்தை 200 மீற்றர் வரை துரத்திச் சென்று நகையை மீட்ட சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

கன்னியாகுமாரி மாவட்டம் கருங்கல் பகுதியைச் சேர்ந்த தமிழ்ராணி தனது உறவினர் ஒருவருக்கு கொடுக்க ஒரு நெக்லஸ், ஒரு கைச்செயின், 3 தோடுகள் என 5 பவுண் தங்க நகைகளை ஒரு காகிதத்தில் வைத்து பொட்டலம் கட்டினார். அப்போது மாடியில் காயப் போட்ட துணிகளை எடுக்கச் சென்றார்.

கையோடு அந்த நகை பொட்டலத்தையும் எடுத்துச்சென்று மாடி சுவரில் வைத்து விட்டு துணி களை எடுத்துக் கொண்டிருந்தார். அப்போது அங்கு வந்த காகம் ஒன்று நகை பொட்டலத்தை உணவுப் பொட்டலம் என்று நினைத்து தூக்கிச் சென்றது.

இதைப் பார்த்த அவர் கூச்சலிட்டு அயலவரை அழைத்தார். விபரமறிந்து வந்தவர்கள் அந்த காகத்தை துரத்தினர்.

சுமார் 200 மீற்றர் வரை சென்ற காகம் ஒரு ஓட்டு வீட்டுக் கூரையில் அமர்ந்தது. உடனே துரத்திச் சென்றவர்கள் கையில் கிடைத்தவற்றால் காகத்தை விரட்டனர். இதைப் பார்த்த அந்த காகம் பொட்டலத்தை போட்டு விட்டு பறந்தது. (அ-2)

# மலேசியாவில் சட்டவிரோதமாக குடியேறிய இந்தியர்களுக்கு பொது மன்னிப்பு

(கோலாலம்பூர்)

மலேசியாவில் சட்ட விரோதமாக குடியேறிய பத்தாயிரம் இந்தியர்களுக்கு அந்நாட்டு அரசு பொது மன்னிப்பு அளித்துள்ளது. அவர்களை விரைவில் இந்தியாவுக்கு அனுப்பவும் முடிபு செய்துள்ளது.

மலேசியாவைப் பொறுத்தவரையில் தோட்ட வேலை கட்டுமானப் பணிகள் மற்றும் ஹோட்டல் வேலைகளுக்கு வெளிநாட்டு தொழிலாளர்களையே அதிக அளவில் நம்பியுள்ளது. இதன் காரணமாக வேலை வாய்ப்பு தேடி பல்வேறு நாடுகளிலிருந்து மலேசியாவிற்கு சட்டவிரோதமாக குடிபெயர்வோர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இதில் அதிகபட்சமாக இந்தோனேசியாவிலிருந்து மட்டும் சட்ட விரோதமாக 82 ஆயிரத்து 253 பேர் குடியேறியுள்ளனர். இதற்கு அடுத்ததாக இந்தியாவிலிந்து 10 ஆயிரத்து 91 பேர் குடியேறியுள்ளனர். இவர்கள் தவிர நேபாளம், மியன்மார், வங்களாதேசம், பாகிஸ்தான், இலங்கை மற்றும் சீனாவிலிருந்தும் ஏராளமானோர் குடியேறியுள்ளனர்.

இதையடுத்து சட்டவிரோதமாக குடியேறியவர்களை எந்தவித தண்டனைகளும் இன்றி பொது மன்னிப்பு அளித்து அவர்களை இந்தியாவுக்கு அனுப்ப மலேசிய அரசு முடிபு செய்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (அ-2)

# காந்தியின் பொருட்கள் ஏலத்தில் விடப்பட்டன

லண்டனை சேர்ந்த பிரபல ஏல நிறுவனமான முல்லாக் மகாத்மா காந்தி பயன்படுத்திய பொருட்களை ஏலம் விடப் போவதாக அறிவிப்பு வெளியிட்டது.

இந்த ஏலத்தின் போது காந்தி யின் இரத்தம் படிந்த புல், மண் ஆகியவை ரூபா 8.2 இலட்சத்துக்கு ஏலம் போனது. இதேபோல காந்தி பயன்படுத்திய கண்ணாடி, ராட்டை போன்றவை எதிர்பார்த்ததை விட 2 மடங்கு தொகைக்கு ஏலம் கேட்கப்பட்டன. கண்ணாடி 28 இலட்சத்துக்கும் ராட்டை 21 இலட்சத்துக்கும் ஏலம் விடப்பட்டன. ஏலம் விடப்பட்ட கண்ணாடி 1890 ஆம் ஆண்டு கால கட்டத்தில் காந்தி லண்டனில் வாங்கியுதாகும். காந்தி எழுதிய கடிதங்கள் ஆன்மீக தகவல்கள் அடங்கிய பழங்கால இசைத்தட்டு மற்றும் ஆவணங்கள் போன்றவையும் ஏலம் விடப்பட்டன. (அ-2)



டில்லியில் டிபன்ஸ் இன்டன்சிவ் விழா ராஷ்டிரபதி பவனில் நடந்த நிகழ்ச்சியில் பிரதமர் மன்மோகன்சிங், ஜனாதிபதி பிரதீபா பட்டேல், துணை ஜனாதிபதி ஹமீத் அன்சாரி, மத்திய அமைச்சர் அந்தோனி ஆகியோர் பங்கேற்றதைப் படத்தில் காணலாம்.

சொற்கள் நம் சிந்தனையின் உடைகள். அவற்றை கந்தல்களாகவும், கிழிசல்களாகவும், அழுக்காகவும் உடுத்தக் கூடாது. – செஸ்டர் ஃபீல்ட்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## அன்பார்ந்த முஸ்லிம் சகோதரர்களுக்கு ஓர் அன்பு மடல்

அன்பார்ந்த முஸ்லிம் சகோதரர்களுக்கு முதற்கண் வணக்கம். அவசரமாக இக்கடிதம் எழுதப்படுகின்றது.

தமிழ்–முஸ்லிம் உறவு என்பது நீண்டகாலமாக நட்பு, அன்புடையதாக இருந்துள்ளது.

எனினும் இடைப்பட்ட காலங்களில் உங்களுக்கு ஏற்பட்ட இடப்பெயர்வுகள் துன்பமானதென்பது மறுக்கமுடியாததே.

அதேநேரம் உங்களின் இடப்பெயர்வு நியாயப்படுத்தவும் முடியாதவை. எனினும் உங்களுக்கு ஏற்பட்ட இழப்புகள் குறித்து தமிழ் மக்கள் மௌனமாக அழுததும் உண்டு.

ஆனாலும் முஸ்லிம் சகோதரர்கள் தங்களுக்கு ஏற்பட்ட இழப்பை–இடப்பெயர்வை தமிழ் மக்களால் ஏற்பட்டதாகக் கருதுகின்றனர் என எண்ணத் தோன்றுகின்றது.

அண்மையில் சம்மாந்துறை வலய கல்விப் பணிப்பாளர் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்தார்.

யாழ்ப்பாணத்திற்கு வந்திருந்த அவர், அதிபர்கள் மத்தியில் உரையாற்றும்போது, வணக்கம் தெரிவிப்பதற்கு முன்னதாகவே, நான் கிளிநொச்சியைச் சேர்ந்தவன். எங்களை நீங்கள் துரத்தினீர்கள். அதனை நாம் ஒருபோதும் மறக்கவும் மாட்டோம் மன்னிக்கவும் மாட்டோம் என்றார்.

பண்பாடுநிறைந்த யாழ்ப்பாணத்துமண்ணில் சம்மாந்துறைக் கல்விப் பணிப்பாளர் இவ்வாறு கூறியதும் அங்கிருந்த அதிபர்கள் அதிர்ந்து போயினர்.

கல்விச் சமூகத்தின் பணிப்பாளராக இருக்கக் கூடிய ஒரு முஸ்லிம் கல்வியாளனிடம் இவ்வாறான வக்கிரம் இருக்கிறது என்பதே அந்த அதிர்ச்சிக்கான காரணம்.

அன்பிற்குரிய முஸ்லிம் சகோதரர்களே! நாங்களும் நீங்களும் இந்த நாட்டில் பட்ட துன்பம் கொஞ்சமல்ல.

அந்த துன்பங்கள் களையப்பட வேண்டுமாயின், தமிழ்–முஸ்லிம் உறவு கட்டியெழுப்பப்பட வேண்டும்.

அந்த உறவு யாழ்ப்பாணத்திலிருந்து தான் கட்டியெழுப்பப்பட வேண்டும் என்பதை எவரும் மறுத்துவிட முடியாது.

அதற்கான ஏற்பாடுகளை யாழ்ப்பாணத்திலுள்ள இந்து–கிறிஸ்தவ–முஸ்லிம் மதத் தலைவர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் இணைந்து உருவாக்க முடியும்.

அண்மையில் கூட காளை மாட்டுப் பிரச்சினை ஒன்று பரவலாகப் பேசப்பட்டு வருகிறது. உண்மையில் தமிழ்–முஸ்லிம் சமூகப் பிரதிநிதிகள் ஆரோக்கியபண்புடன்செயற்பட்டிருந்தால்அந்தப் பிரச்சினைய்யை மிகச் சுமுகமாக தீர்த்திருக்க முடியும்.

இந்து மக்களின் வழிபாட்டுச் சின்னமாக இருக்கக்கூடிய காளை மாட்டிலிருந்துகூட தமிழ்–முஸ்லிம் உறவு கட்டியெழுப்பப்பட்டிருக்கலாம்.

ஆனால் 'விடக்கூடாது' என்றஉணர்வில்நிலைமை நகர்கிறது. இதனைத் தூண்டி விடுவதிலும் சிலர் பலமாகச் செயற்படுகின்றனர்.

சம்பந்தப்பட்ட காளை மாடு இந்து சமயம் சார்ந்த விடயமாகி விட்டது என்பதால் மாட்டின் உரிமையாளர் தனது மனச்சாட்சிப்படி செயலாற்றுகின்ற சந்தர்ப்பம் இப்போது கிடைத்திருக்கின்றது.

அந்தச் சந்தர்ப்பத்தை அவருடன் முஸ்லிம் மதத் தலைவர்களும் இணைந்து செய்ய முடியும்.

காளை மாட்டின் பெறுமதியைப்பெற்றுக்கொண்டு அதனை கீரிமலை நகுலேஸ்வரத்திற்கு ஒப்படைப்பது என்ற முடிவுக்கு வருவார்களாயின், அதனை மக்கள் சமூகம் உயர் பண்பாகக் கருதிக்கொள்ளும்.

# இராணுவ முகாம்கள் அமைக்கப்படுவதால் மக்களை வேறு இடங்களில் குடியேற்றுகிறோம்

## பிரதியமைச்சர் முரளிதரன் தெரிவிப்பு

(பூந்தோட்டம்)

நிரந்தர இராணுவ முகாம்கள் அமைக்கப்படுகின்ற பகுதிகளில் மக்களை வேறு இடங்களுக்கு மாற்ற வேண்டிய தேவை காணப்படுவதாக மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்தார்.

வவுனியா செட்டிக்குளம் நலன்புரி நிலையத்திற்கு நேற்று வருகை தந்த இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவை வரவேற்கும் முகமாக அங்கு சமுகமளித்திருந்த அவர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

செட்டிக்குளம் பிரதேசத்தில் இரண்டு முகாம்களை நாம் தற்போது பேணி வருகின்றோம். இவற்றில் ஆயிரத்து 600 குடும்பங்களை சேர்ந்த 6 ஆயிரத்து 22 பொதுமக்கள் வாழ் கின்றனர். இவர்களை விரைவாக மீள்குடியேற்றுவதற்கான நடவடிக்கையினை நாம் மேற்கொண்டுள்ளோம். இவர்களில் அனைவருமே முல்லைத்தீவை சேர்ந்த மக்களாவர்.

இவர்களை இரண்டு விதமான தேவைகளுக்காக வேறு இடங்களுக்கு மக்களை இடம்மாற்ற வேண்டிய தேவையுள்ளது. பொதுவாக கண்ணிவெடி துப்புரவு செய்ய வேண்டிய பிரதேசத்தில் துப்புரவு செய்து கட்டம் கட்டமாக குடியேற்றி வருகின்றோம்.

குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தில் கருநாட்டுக்கேணி, கொக்குத்தொடுவாய் போன்ற பகுதிகளில் தற்போது கண்ணிவெடிகள் துப்புரவு செய்யப்பட்டு அங்கிருந்த இராணுவ வீரர்களை வேறு இடங்களுக்கு மாற்றி விட்டு அப்பகுதி பாடசாலைகள் அனைத்தும் தற்போது அப்பகுதி மக்களிடம் முற்றுமுழுதாக கையளிக்கப்பட்டுள்ளது. அங்கு மக்கள் குடியேறி வருகின்றனர்.

அடுத்து நிரந்தரமாக இராணுவ முகாம்கள் அமைக்கப்படுகின்ற இடங்களில் மக்களை வேறு இடங்களுக்கு மாற்ற வேண்டிய தேவையுள்ளது. அவர்களுக்கு கோம்பாவில் பிரதேசத்தில் உள்ள மிகவும் வளமான பிரதேசங்களை தெரிவு செய்து ஒரு குடும்பத்திற்கு 40 பேர்ச் காணியும் அக்குடும்பத்திற்கு 40 பேர்ச் காணி விவசாயம் செய்வதற்கும் மேலதிகமாக வழங்கி வீடுகள் அமைத்து குடியேறி வருகின்றோம்.

இம்மக்களுக்கான அடிப்படை வசதிகள் விவசாய தேவைக்கான விவசாய உபகரணங்கள் போன்றவற்றை வழங்கி வருகின்றோம்.

இந்த வகையில் இன்று (நேற்று) நலன்புரி நிலையத்திற்கு வருகை தரும் இந்திய நாடாளுமன்ற குழுவை மனப்பூர்வமாக வரவேற்கின்றோம். ஏனெனில் தமிழ்நாட்டில் இலங்கைய்யைப் பற்றி தவறான புரிதல்கள் காணப்படுகின்றன. அதாவது மக்களை மீள் குடியேற்றுவதில்லை. மக்களை முகாம்களில் அடைத்து வைத்திருக்கின்றோம் என்ற பிரசாங்கள் எல்லாம் மேற்கொள்ளப்படுகின்றது. எனவே இதனை வந்து அவர்கள் பார்க்கின்ற போது இலங்கையில் நடக்கும் நிலையை நேரடியாக பார்க்கும் நிலை ஏற்பட்டுள்ளமை சிறப்பானதாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ–266)

# வவு. நகர சபையில் வரவு செலவு திட்டம் தயாரிக்கும் பணி ஆரம்பம்

(பூந்தோட்டம்)

வவுனியா நகரசபையானது எதிர்வரும் 2013 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் தயாரிக்கும் வேலைத் திட்டம் ஒன்றினை கடந்த 16 ஆம் திகதி வவுனியா நூலக கேட்போர் கூடத்தில் ஆரம்பித்துவைத்தனர்.


இதற்கமைவாக தமது பிரிவிற்குட்பட்ட 11 பிரிவுகளில் உள்ள 33 கிராமமட்ட அமைப்புக்கள் மற்றும் கிராம ஆர்வலர்களிடமிருந்து தயாரிக்கும் வேலைத் திட்டத்தின் மூலம் முன்னெடுக்கப்படவுள்ளது.

அன்றையதினம் குடியிருப்புக் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பிரதிநிதிகள் கிராமசேவகர் மற்றும் கிராம அபிவிருத்தி தொடர்பான ஆர்வலர்கள் கலந்து கொண்டு தமது கிராமங்களுக்கு எதிர்வரும் ஆண்டு செயற்படுத்த வேண்டிய வேலைத்திட்டம் தொடர்பில் அடையாளப்படுத்தினர்.

இதன் அடிப்படையில் எதிர்வரும் ஆண்டுக்கான வேலைத்திட்டம் முன்னுரிமைத் தேவையின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு பாதீட்டுக்கு முன் மொழியப்படவுள்ளதுடன் நகரசபையின் செயற்பாட்டின்மையால் கிராமங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பிலும் தமது ஆதங்கங்களைமக்கள் வெளிப்படுத்தினர்.

தொடர்ச்சியாக 33 கிராமங்களுக்குமான வேலைத்திட்டங்கள் அடையாளப்படுத்தப்பட்ட பின்னர் அவை 2013ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் உள்வாங்கப்படவுள்ளதாக நகரசபையின் செயலாளர் தெரிவித்தார்.

இந்நிகழ்வுக்கு வவுனியா நகரசபையின் உறுப்பினர்களான எஸ். இராஜேஸ்வரன், எஸ்.செல்லத்துரை மற்றும் நகர சபை செயலாளர் வி.வசந்தகுமார், சனசமூக நிலையங்களின் பொறுப்பதிகாரி வாஜிபா உட்பட நகரசபை உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். (அ–2,9,266)



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

# கோயிலில் ஏன் காணிக்கை செலுத்த வேண்டும்?

அருகாமையிலுள்ள கோயிலில் ஒரு காணிக்கை செலுத்தவேண்டும் என்று பாட்டி சொல்லும்போது இறைவனிடமிருந்து ஏதோ பெறுவதற்காக பாட்டி செய்யும் தந்திரம் என்று குழந்தைகள் கேலிசெய்வது வழக்கம்.

ஆனால் இது கேலி செய்யத்தக்க வெறும் ஒரு தந்திரம் அல்ல. நம் முன்னோர்கள் இதையும் ஓர் ஆராதனையாக கருதியிருந்தனர்.

பொதுவாக ஒரு பால் பாயாசம், விளக்கு, பூ அல்லது விளக்கிற்கான எண்ணெய் முதலியவை காணிக்கையாகப் படைப்பது வழக்கம். ஒரு பொருத்தனை நேர்ந்த நிரந்தரம் பிரார்த்தனை செய்து இறைவனில் மையப்படுத்துவதன் விளைவாக பக்தனின் உள்ளத்தில் குடிகொள்ளும் ஜீவசக்தி உணர்வடைந்து நினைத்த வழிபாட்டை இறைவன் ஆசியால் நடத்த வல்லவனாகிறான் என்று நம் முன்னோர்கள் பண்டைக்காலத்திலே புரிந்து கொண்டிருந்தனர்.

பூஜைக்குத் தேவையான பொருட்கள் தேவனுக்குக் காணிக்கையாகப் படைப்பதனால் படைப்பவர் தானும் பூஜையின் பாகமாக மாறுகின்றார்.

இந்த விடயத்திலே மேல் நாட்டினர்களின் ஆராய்ச்சிகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. ஆனால் நிரந்தரமான திட நம்பிக்கையால் எதையும் சாதிக்கமுடியும். அதற்கான சக்தி மனிதனில் உண்டு என்ற உண்மை அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

வழிபாடுகள் வாயிலாக பக்தர்களுக்குக் கிடைக்கப்பெறுவதும் இதுவே. நேர்ச்சைகள் நடத்தாதவர்களும் கோயிலில் பக்தியுடன் காணிக்கைகள் படைப்பதைக் காணலாம்.

இறைவன், அரசன், குரு, குடும்பத் தலைவன் என்பவர்களைக் காணச் செல்லும்போது வெறும் கையுடன் செல்லலாகாது என்ற நம்பிக்கை இன்றும் உறுதியாகச் செயற்படுகிறது.

## அகில இலங்கை சைவப்புலவர் தேர்வு

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தால் ஆண்டுதோறும் நடத்தப்படும் சைவப் புலவர், இளஞ் சைவப்புலவர் தேர்வுகள் எதிர்வரும் 27,28,29 ஆம் திகதிகளில் நடை பெறவுள்ளதாக தேர்வு செயலாளர் அ. செல் லத்துரை அறிவித்துள்ளார்.

இத்தேர்வுகள் கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி, மட்டக்களப்பு ஆசிரியகலாசாலை, யாழ்ப்பாணம் நாவலர் மகா வித்தியாலயம் ஆகிய பரீட்சை நிலையங்களில் நடைபெறும். விண்ணப்பதாரிகள் சாத்திரம், இலக்கியம், உரைநடை, வரலாறு, இலக்கணம் ஆகிய ஐந்து வினாத்தாள்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

இப்பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்களில் ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி சிவ தீட்சை பெற்றவர்கள் மட்டுமே தேர்வு எழுத முடியும். இவர்களுக்குரிய தேர்வு நுழைவுச்சீட்டுக்கள் தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளன.

மேலும் விபரம் தேவையானோர் 011 2739238 அல்லது 0212223458 ஆகிய தொலைபேசிகளுடன் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# கிழக்கு மாகாண முதலமைச்சர் வேட்பாளராக ஹக்கீமை நியமிப்பது குறித்து முடிபாகவில்லை

## முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர்

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் ரவூப் ஹக்கீமை முதலமைச்சர் வேட்பாளராக களமிறக்குவது தொடர்பில் கட்சி மட்டத்தில் இன்னும் எந்தவொரு முடிவும் எடுக்கப்படவில்லை என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஹசன் அலி தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் அரசியல் தளமான கிழக்கு மாகாணத்தில் அரசாங்கத்துடன் இணைந்து போட்டியிடுவதா அல்லது தனித்துப் போட்டியிடுவதா என்பது குறித்து ஆழமாக நிதானத்துடன் சிந்தித்துப் பார்க்க வேண்டியுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் மஹிந்த அரசு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் சிறிலங்காவின் நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீமை முதலமைச்சர் வேட்பாளராக களமிறக்குவதற்கு தீர்மானித்துள்ளது எனத் தகவல்கள் கசிந்துள்ளன.

இந்தச் செய்தி ஊடகங்களில் வெளிவர சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் கிழக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் பிரமுகர்கள் அதிர்ச்சியடைந்தனர். அத்துடன் கிழக்கு மண்ணைச் சேர்ந்த ஒருவரே முதலமைச்சராக வர வேண்டும் என்றும் ஆணித்தரமாக இடித்துரைத்துள்ளனர்.

அதேவேளை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் என்றும் கூட்டடைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா. அரியநேந்திரன் பகிரங்கமாக நேற்று முன்தினம் அறிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண சபைத் தேர்தல் எப்போது நடைபெறும் என்பது தொடர்பில் இலங்கையின் தேர்தல் திணைக்களம் இன்னும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை.

கிழக்கு மாகாண சபைத்தேர்தலில் எமது கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீம் முதலமைச்சர் வேட்பாளராக களமிறக்குவது தொடர்பில் இன்னும் எந்தவொரு முடிபும் கட்சி மட்டத்தில் எடுக்கப்படவில்லை.

எமது கட்சி அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியாக இருப்பதால் அரசுடன் இணைந்து போட்டியிட வேண்டும் என நிர்ப்பந்தம் எதுவுமில்லை.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் அரசியல் தளமான கிழக்கு மாகாணத்தில் நாம் போட்டியிடும் போது அரசுடன் இணைந்தா அல்லது தனித்தா என்பது குறித்து ஆராய வேண்டியுள்ளது

கடந்த தடவை நடைபெற்ற கிழக்கு மாகாண சபைத்தேர்தலில் எமக்கு அநீதி இழைக்கப்பட்டது.

அதற்காக நாம் நீதிமன்றைக் கூட நாடினோம் என்பதை இங்கு நினைவூட்ட விரும்புகின்றேன். என்றார் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் செயலாளர் நாயகம் ஹசன் அலி எம்.பி. (அ-2)

# கழகங்களுக்கிடையே விளையாட்டுப்போட்டி

(கரவெட்டி)

தேசிய இளைஞர் மன்றத்தினால் கரவெட்டி பிரதேச இளைஞர் கழகங்களுக்கு 'இடையிலான விளையாட்டு விழா நாளை வெள்ளிக்கிழமை தொடக்கம் நடத்தப்படவுள்ளது.

இதில் பெண்களுக்கான துடுப்பாட்டப் போட்டிகள் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இமையாணன் மத்திய விளையாட்டுக்கழக மைதானத்திலும் ஆண்களுக்கான எல்லே போட்டிகள் நாளை மறுதினம் சனிக்கிழமை அல்வாய் மனோகரா விளையாட்டு கழக மைதானத்திலும் காலை 7.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஆண்களுக்கான துடுப்பாட்டம் எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழக மைதானத்திலும் வலைப்பந்தாட்டப்போட்டி எதிர்வரும் 23 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கும் கம்பர் மலை கம்பன் விளையாட்டு கழக மைதானத்திலும் நடைபெறவுள்ளது.

அத்துடன் ஆண், பெண் ஆகியோருக்கான கபடிப்போட்டிகள் எதிர்வரும் 24 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது என இளைஞர் விளையாட்டுக் கழக உத்தியோகத்தர் வ. மனோகரராஜ் அறிவித்துள்ளார். (அ-3-24)

# மரண அறிவித்தல்

## அமரர் குகமூர்த்தி சிவாஜினி



நல்லூர் செம்மணி வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவாஜினி அவர்கள் 18.04.2012 அன்று காலமானார். அன்னார் செல்வராசா நாகேஸ்வரி தம்பதியரின் மூத்த புதல்வியும், எஸ். குகமூர்த்தியின் (முறிவு நெறிவு வைத்தியர்) அன்பு மனைவியும், யோகேஸ்வரனின் (1ஆம் வருடம் யாழ். பல்கலைக்கழக மாணவன்) அன்புத்தாயாருமாவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் 19.04.2012 இன்று வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்து செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
எஸ்.குகமூர்த்தி(கணவன்),
கு. யோகேஸ்வரன்(மகன்).

(8194)

# தமிழ்நாட்டின் பிரபல கட்சிகளுடன் மஹிந்த அரசு உறவை பேணவில்லை

## ஐ.தே.க. குற்றச்சாட்டு

அ.தி.மு.க., தி.மு.க. ஆகிய கட்சிகளின் உறுப்பினர்கள் அங்கம் வகிக்காத இந்திய நாடாளுமன்ற குழுவானது வெற்றுக்குழுவாகும் என பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி விமர்சித்துள்ளது. அத்தோடு தமிழ் நாட்டை இலங்கை பகைத்துக்கொள்ளக் கூடாது என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்திய நாடாளுமன்ற குழுவிலிருந்து தமிழ் நாட்டின் பிரதான கட்சிகளான அ.தி.மு.க., தி.மு.க. ஆகியவற்றின் உறுப்பினர்கள் விலகிக் கொண்டமை தொடர்பில் கருத்து வெளியிடும் போதே ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு,

இந்திய நாடாளுமன்ற குழு இலங்கை வந்துள்ளதை நாம் எதிர்க்கவில்லை. ஆனால் தமிழ் நாட்டுக் கட்சிகளின் உறுப்பினர்கள் உள்ளடக்கம். இந்தக் குழுவிற்கு அவசியம் என்றே கூறுகின்றோம்.

ஜெயலலிதா, கருணாநிதி ஆகிய தலைவர்களின் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தக்குழுவில் பங்குபற்றாமை இந்த நாடாளுமன்ற குழுவை வெற்றுக் குழுவாக்கியுள்ளது.

விடுதலைப்புலிகளுக்கு எதிராகச் செயற்பட்ட ஜெயலலிதா தமிழர் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்ற விடயத்திலும் உறுதியாக இருந்தார். இவ்வாறானதொரு தலைவருடன் சீரான முறையில் உறவைப் பேணத் தெரியாதவாறே மஹிந்த அரசின் கொள்கைகள் அமைந்துள்ளன.

தமிழ் நாட்டுடனான உறவு எமக்கு என்றும் தேவை. இதனை உணர்ந்து அரசு செயற்பட வேண்டும். அ.தி.மு.க., தி.மு.க உறுப்பினர்கள் இல்லாமல் இலங்கை வந்துள்ள இந்திய குழு விருந்துபசாரத்தில் மத்திரமே பங்குபற்றிவிட்டு நாடு திரும்பலாம் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல கடுமையாகச் சாடியுள்ளார். (அ-2)

# அபிராமி அந்தாதி நூல் வெளியீடு

தவத்திரு. சச்சிதானந்த செல்லம்மா மாதாஜியின் 12 ஆவது ஆண்டு குரு பூசைத் தினத்தையும் 25 ஆண்டுகள் ஆச்சிரமப் பணியாற்றிய ஆத்மீகத்தொண்டனின் 60 ஆவது அகவையையும் நினைவு கூரும் பொருட்டு உரையுடன் கூடிய அபிராமி அந்தாதி நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 23 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு கைதடி ஸ்ரீ சச்சிதானந்த ஆச்சிரமத்தில் நடைபெறவுள்ளது.

திருமதி சிவலோஜினி கிருஷ்ணமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் திருமதி கலைவாணி இராமநாதன், சிறப்பு விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் செந்தமிழ்ச் சொல்லருவி ச. லலீசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நூலுக்கு ஆசியுரையினை கிளிநொச்சி மகாதேவ ஆச்சிரம தவத்திரு. கணேசானந்த மகாதேவசுவாமிகள், சட்டநாதர் சிவன் கோவில் பிரதம குரு பிரம்மஸ்ரீ தா. வாசுதேவக் குருக்கள், கைதடி இணுங்கித் தோட்டக் கந்தசாமி கோவில் பிரதமகுரு பிரம்மஸ்ரீ யோ. குருசாமிக்குருக்கள் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். இந்நூலுக்கான மதிப்பீட்டுரையை மத்தியஸ்த சபை உறுப்பினரும் முன்பள்ளி இணைப்பாளருமான திருமதி சுபத்திரா தனபாலசிங்கம் ஆற்றவுள்ளார்.

நூலின் முதற்பிரதியை சித்த மருத்துவத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் வைத்திய கலாநிதி திருமதி.க சௌந்தரராஜன் பெற்றுக்கொள்வார் என கைதடி மாதாஜி லிங்கேஸ்வரர் ஆலய தலைவர் இ. குழந்தைவடிவேலு அறிவித்துள்ளார். (அ-9)

# 2-வது டெஸ்ட்: ஆஸி அதிரடி; மே.தீவுகள் போராட்டம்

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான 2-வது டெஸ்ட் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் முதல் இன்னிங்ஸில் 257 ஓட்டங்களைப் பெற்றது.

அவுஸ்திரேலியா-மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி போர்ட் ஒப் ஸ்பெயினில் நடைபெற்று வருகிறது.

2-வது டெஸ்ட் போட்டியின் முதல் இன்னிங்ஸில் அவுஸ்திரேலிய அணி அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 311 ஓட்டங்கள் எடுத்தது.

இதனையடுத்து களமிறங்கிய மேற்கிந்திய தீவுகள் அணி இரண்டாம் நாள் ஆட்டநேர முடிபில் 3 விக்கெட்டுக்களை இழந்து 49 ஓட்டங்களைப் பெற்றது.

மூன்றாம் நாளான நேற்றுமுன்தினம் ஆட்டத்தை தொடர்ந்த மேற்கிந்தியத் தீவுகள் அணி தொடர்ந்து சிறப்பாக விளையாடியது.

அதுவரை சிறப்பாக ஆடிக் கொண்டிருந்த டரன் பிராவோ,பகுதி நேர பந்து வீச்சாளரான மைக்கல் ஹசியின் பந்துவீச்சுக்கு ஆட்டமிழந்தார்.

எனினும் அதன் பின்னர் ஜோடி சேர்ந்த ஷிவ் நரேன் சந்தர்போல் ;நர்சிங் டியோ நரேன் ஜோடி 130 ஓட்டங்களை ஐந்தாவது விக்கெட்டுக்காகப் பகிர்ந்தது.

ஒரு கட்டத்தில் 4 விக்கெட்டுகளை இழந்து 230 ஓட்டங்களைப் பெற்றிருந்த மேற்கிந்தியத் தீவுகள் அணி திடீரென தொடர்ச்சியாக விக்கெட்டுகளை இழந்திருந்தது.

19 ஓட்டங்களுக்கு மேற்கிந்தியத் தீவுகளின் 5 விக்கெட்டுகளை நதன் லையன் வீழ்த்தினார்.

நேற்றுமுன்தின ஆட்டநேர முடிபில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 9 விக்கெட்களை இழந்து 252 ஓட்டங்களை பெற்றிருந்தது.

துடுப்பாட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக ஷிவ் நரேன் சந்தர்போல் 94 ஓட்டங்களையும், நர்சிங் டியோ நரேன் 55 ஓட்டங்களையும் டரன் பிராவோ 38 ஓட்டங்களையும் பெற்றனர்.

விக்கெட் காப்பாளர் போ ஆட்டமிழக்காமல் 17 ஓட்டங்களோடு களத்தில் இருந்தார்.

அவுஸ்திரேலிய தரப்பில் நதன் லையன் 5 விக்கெட்டுகளையும், மைக்கல் பியர், பென் ஹில்பென்ஹஸ், ஜேம்ஸ் பற்றின்சன் மற்றும் மைக்கல் ஹசி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

மேற்கிந்தியத் தீவுகள் அணி 3-ம் நாள் ஆட்டநேர முடிபில் ஒரு விக்கெட் கைவசம் உள்ள நிலையில் 59 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பின்னிலை வகித்தது.

இந்நிலையில் 4-ம் நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி போட்டி ஆரம்பித்து சிறிது நேரத்திலேயே தனது கடைசி விக்கெட்டையும் இழந்ததது.

மேற்கிந்தியத் தீவுகள் முதல் இன்னிங்ஸில் 257 ஓட்டங்களையும்,அவுஸ்திரேலியா முதல் இன்னிங்ஸில் 311 ஓட்டங்களையும் பெற்றிருந்தன.



இதனால் 54 ஓட்டங்கள் முன்னிலையில் அவுஸ்திரேலிய அணி தனது 2-வது இன்னிங்ஸை ஆடத் தொடங்கியது.

இன்று இப்போட்டியின் கடைசி நாளாகும்.

## சம்பியன்ஸ் தொடருக்கு மூடுவிழா



சர்வதேச கிரிக்கெட் சபையின் சம்பியன்ஸ் கிண்ணத் தொடர் 2013ஆம் ஆண்டிற்குப் பின்னர் இடம்பெறாது என சர்வதேசக் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. இதன்படி 2013 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் இடம்பெறவுள்ள சம்பியன்ஸ் கிண்ணத் தொடரே சம்பியன்ஸ் கிண்ணத் தொடர்களின் இறுதித் தொடராக அமையவுள்ளது.

50 ஓவர் கிரிக்கெட் போட்டிகளின் தொடராக விளையாடப்படும் இந்த சம்பியன்ஸ் கிண்ணத் தொடர் 1998 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

இத்தொடர் கைவிடப்படுவது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த சர்வதேச கிரிக்கெட் சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஹரூன் லோகார்ட், இத்தொடர் எதிர்காலத்தில் நடத்தப்படத் திட்டமிடப்படவில்லை எனத் தெரிவித்தார். சம்பியன்ஸ் கிண்ணத் தொடருக்குப் பதிலாகவே 2017 ஆம் ஆண்டு முதல் டெஸ்ட் சம்பியன்ஸிப் தொடர் இடம் பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

## இந்தியக்...

யாழ்.ரில்கோ ஹோட்டலுக்கு சென்றனர். இந்தக் குழுவினர் இன்று நல்லூர் கந்தசாமி கோவிலுக்கு காலை 7.30 மணியளவில் சென்று வழிபாட்டில் ஈடுபடவுள்ளனர்.

பின்பு வட மாகாண மீனவர் சங்கப் பிரதிநிதிகளையும் சந்தித்து கலந்துரையாடவுள்ளனர்.

இதன்பின்பு காங்கேசன்துறை துறைமுகத்தினையும் சென்று பார்வையிடவுள்ளதுடன் பின்பு வட மாகாண ஆளுநரையும் இந்தக் குழுவினர் சந்தித்து கலந்துரையாடவுள்ள னர். (எ-6)

**இன்றைய ஐ.பி.எல். போட்டிகள்:**
மாலை 4 மணிக்கு டில்லியில் நடைபெறும் போட்டியில் டில்லி டேர்வேவில்ஸ் அணி எதிர் டெக்கான் சார்ஜர்ஸ் அணிகளும், இரவு 8 மணிக்கு சென்னையில் நடைபெறும் போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் எதிர் புனே வாரியர்ஸ் அணிகளும் மோதுகின்றன.

## மரண அறிவித்தல்

## கார்த்திகேசு சுப்பையா



கைதடி மேற்கைப் பிறப்பிடமாகவும் கைதடி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு சுப்பையா அவர்கள் 18.04.2012 நேற்று புதன்கிழமை இரவு 10 மணியளவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக் கணவரும் உதயஞானதேவி (U.K), உதயயோகேஸ்வரி (கலா), காலம் சென்ற கலாநிதி ஆகியோரின் அன்புத் தந்தையும் குணசிங்கம் (U.K), ராஜ்குமார் ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரணவன் (U.K), நிந்துகா (U.K), சதுஷிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 19.04.2012 வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தச்சன்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


கைதடி வடக்கு,
கைதடி.
T.P. No.: 021 373 7581

தகவல்: குடும்பத்தினர்

(8201)

# கொல்கத்தா 8 விக்கெட்டுகளால் கிங்ஸ் IX பஞ்சாப்பை வென்றது

5ஆவது ஐ.பி.எல் கிரிக்கெட்டில் மொகாலியில் நடைபெற்ற 22-வது லீக் ஆட்டத்தில் கிங்ஸ் லெவின் பஞ்சாப் -கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகள் நேற்றிரவு மோதின.



கொல்கத்தா அணியில் டஸ்சாடே,ஷகிப் அல் ஹசன் ஆகியோர் நீக்கப்பட்டு , அவர்களுக்கு பதிலாக மக்கலம், பிரெட் லீ ஆகியோர் சேர்க்கப்பட்டனர்.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பஞ்சாப் அணித் தலைவர் கில்கிறிஸ்ட் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.

இதை தொடர்ந்து கில்கிறிஸ்டும் ,வல்தாடியும் பஞ்சாப் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக களம் இறங்கினர்.

வல்தாடி 8 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் பிரெட் லீ பந்தில் ஆட்டம் இழந்தார்.

பின்னர் ஜோடி சேர்ந்த கில்கிறிஸ்டும் மார்ஷும் அதிரடியாக ஆடினர்.

இதனால் அணியின் ஓட்ட எண்ணிக்கை வெகுவாக உயர்ந்தது.

அப்போது 28 ஓட்டங்களை எடுத்திருந்த கில்கிறிஸ்ட் காயமடைந்ததால் ;ரிட்டயர்ட் ஹர்ட் முறையில் வெளியேறினார்.

அதன்பின்னர் வந்த மன்பிரித் 6 ஓட்டங்களில் வெளியேறினார்.

பின்னர் டேவிட் ஹசி ,மார்ஷுடன் இணைந்து நிதானமாக ஆடினார்.

மார்ஷ் 33 ஓட்டங்களிலும் ஹசி 10 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர்.

பஞ்சாப் அணியின் 6 விக்கெட்டுகள் வீழ்ந்த பிறகு ரிட்டயர்ட் ஹர்ட் முறையில் வெளியேறிய அணித் தலைவர் கில்கிறிஸ்ட் மீண்டும் ஆட வந்தார்.அவர் சற்று அதிரடியாக ஆடினார்.

20 ஓவர்கள் முடிபில் பஞ்சாப் அணி 7 விக்கெட் இழப்புக்கு 124 ஓட்டங்கள் எடுத்தது.

கில்கிறிஸ்ட் 40 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார்.

பின்னர் 125 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய கொல்கத்தா அணி 16.3 ஓவர்களில் 2 விக்கெட் இழப்பிற்கு 127 ஓட்டங்களை எடுத்தது.

இதனால் கொல்கத்தா அணி 8 விக்கெட் வித்தியாசத்தில் பஞ்சாப் அணியை வென்றது.

இப்போட்டியின் சிறப்பாட்டக்காரராக காம்பீர் தெரிவானார்.

## தமிழர் பிரச்சினை...

பற்றி தனது கட்சி இத்தூதுக் குழுவினருக்கு விளக்கமளித்ததாக நாடாளுமன்ற உறுப்பினர்சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

நாடாளுமன்ற தெரிவுக்குழுவிற்கு எங்கள் பிரதிநிதிகளை நியமிக்கும்படி அரசாங்கம் எம்மிடம் கேட்டது.

இருபக்க நேரடி பேச்சுவார்த்தையில் எம்மால் ஓர் உடன்பாட்டு வர முடியாதபோது கடும்போக்காளர்களும் இடம்பெறும் பல் தரப்பு அரங்கமான நாடாளுமன்ற தெரிவுக் குழுவில் இது எவ்வாறு சாத்தியமாகும் என அவர் கேள்வி எழுப்பினார்.

இந்தியாவில் மாநில அரசாங்கங்களுக்கு கூடிய அதிகாரங்கள் கையளிக்கப்பட்டுள் ளன. அந்தளவுக்கு நாம் அதிகார பகிர்வை இங்கு கோரவில்லை. அதிகார பகிர்வுக் கான எமது முன்மொழிவுகள் குறைந்தபட்சமானவை என நாடாளுமன்ற உறுப்பினர் குறிப்பிட்டார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை கேட்கின்றதா என வினவியபோது, நாம் இந்த அதிகாரங்களை கேட்டோம். ஆனால் இவற்றை வழங்க தயாரில்லை என அரசாங்கம் கூறியது. எவ்வாறாயினும் அரசாங்கத்துடன் பேச தயாராக உள்ளோம். ஆனால் அரசாங்கம் மௌனம் சாதித்து வருகின்றது என சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார். (எ-11)

# இலங்கை விஜயத்...

என்பது தொடர்பில் தெரிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது.

நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை எந்த அளவில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. அது எந்த நிலைப்பாட்டில் உள்ளது என்பது பற்றி பல்வேறு கட்சிகளுடன் பேசக்கூடிய வாய்ப்பு கிடைத்தது.

சம்பந்தன் ஐயாவுடன் பேசுவதற்கும் அரசாங்கத்தின் நிலை தொடர்பில் பேசுவதற்கும் சிறந்த சந்தர்ப்பம் இதுவாகும். அத்துடன் நேற்றுமுன்தினம் இரவு அரசியல் கட்சிகளுடன் இடம்பெற்றகலந்துரையாடல்கள்எல்லாம்மிகவும் பயனுள்ளதாகவும் இந்தியாவைப் பற்றி அவர்கள் தெரிந்து கொள்வதற்கும் அவர்களைப்பற்றி நாங்கள் தெரிந்து கொள்வதற்கும் மிகச் சிறப்பான வாய்ப்பாக இருந்துள்ளது.

இந்த விஜயத்தின் போது நாம் எது எதைப் பார்க்கவேண்டும், எது எது வேண்டும் என இந்திய தூதுவராலயத்தின் மூலம் கோரினோமோ, யார் யாரைச்சந்திக்கவேண்டும்எனவேண்டினோமோ அவை அனைத்தும் எமது [illegible]ணத்தில் இணைக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

இலங்கை விஜயம் குறித்து என்.எஸ்.பி. சித்தன் தெரிவிக்கையில்,

தற்போது இங்குள்ள 6 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களை எதிர்வரும் ஜூன் மாதத்திற்குள் மீள்குடியேற்றம்செய்யமுடியும்எனகூறுகின்றனர்.

ஏனையோரை சொந்த இடங்களுக்கு மீள்குடியேற்றம் செய்ய முடியும் என கூறுகின்றனர் ஏனையோரை சொந்த இடங்களுக்கு மீள் குடியேற்றியுள்ளதாகவும் அரசாங்க தரப்பில் கூறுகின்றனர். தற்போது உள்ளவர்களை அனுப்புவதற்கு காரணமாக மிதிவெடி அகற்றும் செயற்பாடுகள் இடம்பெறுவதாகவும் அவை இரண்டு மாதத்தில் முடிந்து விடும். அதன்பின் பின்னர் இவர்களும் சொந்த இடத்திற்கு செல்ல முடியும் எனக் கூறுகின்றனர்.

ஏற்கெனவே இருந்தவர்கள் சென்ற பின்னர் தற்போது நாம் தகரத்தில் வசிப்பது கஸ்ரமாக வுள்ளதாகவும் தங்களையும் சொந்த இடங்களுக்கு அனுப்புங்கள் என மக்கள் கோருகின்றனர் அத்துடன் வழங்கப்படும் நிவாரணங்கள் தரமானதாக இல்லை எனவும் போதுமானதாக இல்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

ஏற்கெனவே இந்திய அரசு வீடமைப்புக்காகவும் வைத்தியசாலைகளுக்காகவும் கல்விக்காகவும் புகையிரத பாதைகளை புனரமைப்பதற்காகவும் நிதிவசதி அளித்துள்ளது. இன்னும்என்னசெய்யவேண்டும்என்பதைதெரிந்துக் கொள்வதற்காகவே இக்குழு இங்கு வந்துள்ளது.

மக்களுடனும் அரசாங்கத்துடனும் நேருக்கு நேர் பேசி அவை பற்றி தெரிந்து கொள்வோம். அதனை புறப்படுவதற்கு முன்னதாக இந்நாட்டு ஜனாதிபதியிடம் எடுத்துக் கூறுவோம்.

இந்திய வீடமைப்புத் திட்டம் தாமதம் என்று சொல்லப்படுகின்றது. அதனை வேகப்படுத்துவது தொடர்பிலும் பொறுப்பினை மிக விரைவில் ஏற்றுக்கொள்வோம். பணத்தை வழங்குவதா நேரடியாக கொடுப்பதா என்பது தொடர்பிலும் பிரச்சினைகள் இருந்தது. நேரடியாக சென்று பார்த்த பின்னர் தான் தெரியவரும்.

சோனியா காந்தியைப் பொறுத்தவரை இந்த மக்களுக்கு நிறையவே கொடுப்பதற்கு தயாராக உள்ளார்கள். இந்த அரசாங்கத்திடம் அது தொடர்பில் கூறுவோம். அரசியல் தீர்வு தொடர்பில் உயர்நீதிமன் றத்தின் தீர்ப்பு கிடைத்த பின்னர் அதனை வழங்குவோம் எனக் கூறப்படுகின்றது. நாமும் வருகைதந்து இரு நாட்கள் என்பதால் மற்றைய இடங்களையும் சென்று பார்வையிட்ட பின்னர் தான் எதுவும் கூறமுடியும் என என். எஸ்.பி.சித்தன் தெரிவித்தார். (எ-11)

# இடைக்கால...

வடைந்ததும் அனைத்து அபிவிருத்திகளும் துரிதமாக மேற்கொள்ளப்படும் என தமக்கு அரசினால் உறுதியளிக்கப்பட்டதாக தெரிவித்தனர்.

அதன்பின்னர் கருத்துத் தெரிவித்த பேராசிரியர் சிற்றம்பலம், தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்கு இடைக்கால கட்டமைப்பு ஒன்று அவசியம் என வலியுறுத்தினார்.

இதனூடாக இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்கும், பாதிக்கப்பட்ட பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதற்கு முடியும். ஜெனிவா தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கும் இந்த கட்டமைப்பு உதவிபுரியும்எனவும்அவர்வலியுறுத்திக்கூறினார்.

இதற்குப் பதிலளித்த இந்தியக் குழு 13-வது அரசியல் சீர்திருத்தம் மூலம் இப்பிரச்சினைக்கு தீர்வுகாண முடியும் என சுட்டிக்காட்டியது.

இதேவேளை, யாழ்.குடாநாட்டில் சிங்கள மக்களின் குடியேற்றம் தொடர்பாக சட்டத்தரணி வி.ரி.சிவலிங்கம் எடுத்துக்கூறினார்.

தென்பகுதியில் அதிகளவு பணத்தை செலவு செய்து காணிகளைக் கொள்வனவு செய்து தமிழ்மக்கள் அங்குவாழ்கின்றனர் அதேபோன்று சிங்களமக்களும் இங்கு குடியேறலாம். ஆனால் அவர்கள் தமிழரின் நிலங்களை பிடித்தே குடியேறுகின்றனர்.

இராணுவ முகாம்கள் அரச காணிகளில் அமைக்கப்படுவதற்கு எவரும் தடைபோட முடியாது. ஆனால் தனியாருக்கு சொந்தமான காணிகளில் உள்ள இராணுவ காவலரண்கள் உடனடியாக அகற்றப்பட வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

அதன் பின்னர் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் சார்பில் பரமானந்தன், பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தார்.

வடக்கில் புத்தர் சிலை அமைப்பு, இராணுவப்பிரசன்னம் என்பன குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் விரிவாகவும் விளக்கமாகவும் இந்தியக்குழுவிடம் எடுத்துக்கூறினர்.

இதேவேளை, இந்தியக் குழுவினர் 13-வது அரசியல் தீர்வு குறித்தும் ஏனைய விபரங்களைக் கேட்பவர்களாகவும் மட்டுமே இருப்பதாகவும், அவர்களின் பயணம் எந்தவொரு பலனையும் ஏற்படுத்தாதுஎனவும்சந்திப்பில்கலந்துகொண்ட பிரமுகர்களில் சிலர் தெரிவித்தனர். (எ-11)

# மனிக் பார்ம் முகாமு...

அவர்களது சொந்த இடங்களில் மீள் குடியேற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் இந்தியக் குழுவினரிடம் கூறினார்.

இறுதி மோதல்கள் இடம்பெற்ற முல்லைத் தீவு மாவட்டத்தில் செறிவாக உள்ள கண்ணிவெடி அகற்றும் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டிருப்பதாகவும், யூன் மாத இறுதியில் மனிக் பாமில் எஞ்சியுள்ள மக்களும் குடியேற்றப் பட்டுவிடுவார்கள் என்றும் வவுனியா அரச அதிபர் தெரிவித்தார்.

மீள்குடியேற்றப்பட்டுள்ள மக்களின் வாழ்விட வசதிகள், அவர்களுக்கான வாழ்வாதார உதவிகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்தும் இந்திய நாடாளுமன்றக் குழுவினர் வவுனியா அரச அதிபரிடம் கேட்டறிந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பில் மீள்குடியேற்ற அமைச்சர் குணரட்ன வீரக்கோன், பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன், வன்னிப் பிரதேச ஆயுதப்படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் சுமேத பெரேரா உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பின் பின்னர் மனிக்பார்ம் கதிர்காமர் முகாமில் உள்ள மக்களையும் இக் குழுவினர் சந்தித்து கலந்துரையாடினார்கள். முகாம் வாழ்க்கை கடினமானதென்றும் தங்களைத் தமது சொந்த கிராமங்களில் விரைவில் மீள்குடியேற்றம் செய்வதற்கு ஆவன செய்து உதவுமாறும் முகாம் மக்கள் இந்திய நாடாளுமன்றக் குழுவினரிடம் கோரினர்.

இதனையடுத்து முல்லைத்தீவு மாவட்டத்திற்கு விஜயம் செய்த இக்குழுவினர் முல்லைத் தீவு வைத்தியசாலைக்கு இந்திய அரசினால் வழங்கப்பட்ட 89 மில்லியன் ரூபாய் பெறுமதியான வைத்திய உபகரணங்களைக் கையளித்தனர். அங்கு மீள்குடியேற்றப் பகுதியில் உள்ள மக்களைச் சந்திப்பதற்கும் ஏற்பாடாகியிருந்தது. (எ-11,266)

# யூன் மாத இறுதிப் பகு...

மாவட்டத்தில் மீள்குடியமர்த்தவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

உத்தியோகபூர்வ விஜயத்தினை மேற்கொண்டு இலங்கை வந்துள்ள இந்திய நாடாளுமன்ற எம்.பிக்கள் நேற்று புதன்கிழமை வவுனியாவிலுள்ள நலன்புரி முகாம்களுக்கு சென்று அங்குள்ள மக்களுடன் கலந்துரையாடினர்.

இந்த விஜயத்தில், மீள்குடியேற்ற அமைச்சர் குணரத்ன வீரகோன், மீள்குடியேற்றப் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன், வவுனியா மாட்ட அரசாங்க அதிபர் பி.எஸ். எம்.சார்ள்ஸ், இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் அசோக் கே. காந்தா, வன்னி கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரர் சுமேத பெரேரா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது, மேற்படி முகாம்களில் வசித்து வரும் பொதுமக்கள், சொந்த இடங்களில் தங்களை மீள்குடியேற்றுவதற்கான ஏற்பாடுகளை செய்து தருமாறும், இதுதவிர, தங்களுக்கு வேறு எந்தத் தேவையும் இல்லை என்றும்இந்தியத்தூதுக்குழுவினரிடம்கோரிக்கை விடுத்தனர்.

இதனையடுத்தே, குறித்த நலன்புரி முகாம்களில் வாழும் மக்களை எதிர்வரும் யூன் மாதத்திற்குள் மீள்குடியேற்ற நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் உறுதியளித்தார். (எ-11)


## மணல் விற்பனைக்குண்டு

நாற்பது வருடங்களாக கட்டட வேலைகளுக்கும், பூச்சு வேலைகளுக்கும் சிறந்ததெனும் நாமத்தைப் பெற்ற உப்புத்தன்மையற்ற மணல் 26 வருடங்களின் பின், இப்போது யாழ்ப்பாணத்தில்.

4 ரெக்டர் - 23000/-
அரிந்த கல்லும் விற்பனைக்குண்டு
(கல்லு 1 - 38/-)

தொடர்புகளுக்கு
கண்ணா
0776766499

(8179)

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
ஆங்கிலம், பிரெஞ்சு புதிய பிரிவு
ஆரம்பம் 21.4.2012 சனிக்கிழமை
ஆங்கிலம் | பிரெஞ்ச்
பிரிவு 1 - காலை 8 - 9 | காலை 10 - 11
பிரிவு 2 : மாலை 3 - 4 | வெறும் 25% கட்டணம்
MyWay 182, STANLEY RD, JAFFNA 077 33 63 456

## வான் விற்பனைக்கு

வான் (டொல்பின் வான்)
விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:-
0776889670
0779238564
(8198)

## விற்பனைக்கு


50-XXXX எனும் தொடர் இலக்கத்தினையுடைய செல் மொடல் கயஸ் (A/C) மற்றும் PR-XXXX எனும் தொடர் இலக்கத்தினையுடைய டிமோ பட்டா வாகனங்கள் உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0770476299
0776354574
(8200)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி | நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



மலராக 10.08.1952 — சருகாக 02.05.2011

பிறப்பு 17.12.1988 — இறப்பு 20.02.2008



பலாலி வீதி, கோண்டாவிலை பிறப்பிடமாகவும்
வடமராட்சி கரவெட்டி, துன்னாலையை
வசிப்பிடமாகவும் கொண்ட
அமரர் புன்னகை அரசி
**திருமதி சுசிலா வைகுந்தநாதன்**
**(ரீச்சர் அம்மா)**
சதுர்த்தசி திதி:19.04.2012

செல்வன்
**வைகுந்தநாதன் மதியாபர்ணம்**
**(பிரபு)**
திதி:19.04.2012

உங்கள் பிரிவால் துயருறும்:- திரு.கே. ஏ. வைகுந்தநாதன் (இலங்கை அரசசேவையில் கடமையாற்றி ஓய்வுபெற்றவரும் இலங்கை சமாதான நீதிபதியும் இலங்கை சுதந்திரக்கட்சி அங்கத்தவரும்.)
திரு.வை.நீதிராஜா (முன்னாள் வவுனியா கச்சேரி உத்தியோகத்தரும் தற்போது கணக்காளரும்)

(8193)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.04.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.